# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 19 புதன்கிழமை (04.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 251


# புலிகள் மீள அணிசேர்ந்து தமிழீழம் அமைக்கும் முயற்சியில்!

## கடந்த மாதத்தில் 1,562 பேர் கைது என்கிறார் பிரதமர்



கொழும்பு, ஓகஸ்ட் 04

மீள அணி சேர்ந்து, தமிழீழம் அமைக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவதாக அரசாங்கத்துக்குத் தொடர்ந்து தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

கடந்த மாதத்தில் மட்டும் அகதி முகாம்களில் இருந்தும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதச் சட்டத்தின் கீழுமாக மொத்தம்1,562 புலிச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனால் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசர காலச் சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியது தவிர்க்கமுடியாததாகும்.

இவ்வாறு அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையில் பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் ஒரு மாதத்திற்கு அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஓக. 04

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 82 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 38 வாக்குகளும் கிடைத்தன.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு ஆகியன எதிராக வாக்களித்தன.

பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசிய கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போர் முடிவடைந்த பின்னரும் வடக்கு - கிழக்கில் திடீர் திடீரெனப் படைமுகாம்கள் அமைப்பது ஏன்?

## மக்களுக்குக் காரணம் தெரிவிக்கப்பட வேண்டும் என்கிறார் ஹக்கீம்



கொழும்பு, ஓக. 04

போர் முடிவடைந்த பின்பும் வடக்கு - கிழக்கில் படை முகாம்கள் திடீர்திடீரென அமைக்கப்பட்டு வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இவ்வாறு முகாம்கள் அமைக்கப்படுவது ஏன்? அதற்கான காரணத்தை அரசு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றில் பேசுகையில் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகாலச்சட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

போர் முடிந்த பின்பும் கூட அரசு இராணுவ முகாம்களை அமைப்பதில் மட்டுமே ஆர்வம் காட்டுகிறது. இதனால் மக்கள் குழம்பிப் போயிருக்கின்றனர்.

ஒலுவிலில் திடீரென கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் நல்ல தண்ணியில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் என்ன?

இந்த முகாம்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## வெலிகந்த புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த புலிச் சந்தேக நபர்கள் ஐவர் தற்கொலை முயற்சி?

### செய்தி பொய்யானது என்கிறது இராணுவம்

கொழும்பு, ஓக. 04

பொலநறுவை வெலிகந்தவில் உள்ள, திருகோணமடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபர்கள் ஐந்து பேர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தனர் என இணையத்தளம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இவர்கள் பொலன்னறுவை மாவட்டம், வெலிகந்த, திருகோணமடு புனர்வாழ்வு நிலையங்களில் ஒரு வருடத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் - உறவினர்களைக் கூட சந்திக்க இவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. அத்துடன், புனர்வாழ்வு நிலையத்தில் குடிதண்ணீர், மலசலகூடம், மருத்துவம் போன்ற வசதிகளும் குறைவாகவே காணப் (24ஆம் பக்கம் பார்க்க)

## டுபாயிலிருந்து வந்த விமானத்தில் 12 கோடி ரூபா வெளிநாட்டுப் பணம்!

### அநாதரவான பொதியிலிருந்து மீட்பு

கொழும்பு, ஓக. 04

டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்திலிருந்து 12 கோடி ரூபா வெளிநாட்டு நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டன.

விமான ஆசனத்துக்கு அடியில் அநாதரவாகக் கிடந்த பொதியை சுங்கப் பிரிவினர் கைப்பற்றினர் என சுங்க அதிகாரி பெருமநாயக தெரிவித்தார்.

டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 3.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை விமானம் ஒன்று வந்தடைந்தது. பயணிகள் அனைவரும் விமானத்தை விட்டு வெளியேறிய பின்னர் சுங்க அதிகாரிகள் வழமைபோல் விமானத்தை சோதனையிட்டனர்.

விமான ஆசனத்துக்குக் கீழே கைவிடப்பட்ட நிலையில் கிடந்த பொதியொன்றை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.அந்தப் பொதியில் இலங்கை ரூபாவில் 12 கோடி (24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் 10,000 பேருக்கு முழுநேர வேலை வாய்ப்பு

### விரைவில் அமெரிக்க அரசின் ஆதரவுடன்

கொழும்பு, ஓக. 04

அமெரிக்க அரசின் ஆதரவுடன் வடக்கு மாகாணத்தில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு முழு நேர வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளன என்றும் யு.எஸ்.எய்ட். நிறுவனத்தின் மூலம் இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் (24ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைகளைப் புறந்தள்ளும் மனோபாவத்தில் இலங்கை; ஐ.நா.நிபுணர் குழு விசாரணைக்கு அது ஒத்துழைக்க வேண்டும்

## சர்வதேச நாடுகளின் மூத்த தலைவர்கள் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 04

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த விடயம் குறித்து சர்வதேச சமூகமும் இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளும் இலங்கையிடம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை அரசு மனித உரிமைகளைப் புறந்தள்ளும் மனோபாவத்துடன் செயற்படுகிறது. இந்த நடவடிக்கைகள் பற்றி சர்வதேச சமூகம் இலங்கை மீது மேலும் கடுமையான பதில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு சர்வதேச நாடுகளின் மூத்த முன்னாள் தலைவர்களின் அமைப்பான 'தெ எல்டர்ஸ்' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐ.நா. செயலாளரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆலோசனைக் குழுவுடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என இலங்கை அரசை சர்வதேச நாடுகள் வலியுறுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னந் தோட்டங்களை மீளக் கையளிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் சனியன்று

## பளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறும்

பளை, ஒக. 4

வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பளை பிரதேச செயலகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

பளை பிரதேச செயலர் எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் 671ஆவது படைப்பிரிவுத் தளபதி எம்.எம்.கிற்ப்சிறி கலந்துகொண்டு தென்னந்தோட்டங்களின் மீள்கையளிப்பு தொடர்பான ஆலோசனைகளை கேட்டறியவுள்ளார்.

தெங்கு பயிர்ச்செய்கைச் சபை வட மாகாண முகாமையாளர் வி.மகாலிங்கம், பளை பிரதேச சபை செயலாளர் எஸ். சிவப்பிரகாசம் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

மானியத் திட்டங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் பெருந்தோட்ட, சிறுதோட்ட உரிமையாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-135)

## கண்ணீர் அஞ்சலி



கொடிய நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமான எமது பாடசாலையின் தரம் 3 மாணவன்

*செல்வன்*

**சுரேந்திரன் வருண்ராஜ்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை.

(8/569655)

## முன்பள்ளிக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், ஒக.4

யாழ். மாநகர சபையால் நடத்தப்பட்டு வரும் முன்பள்ளிக்கான புதிய கட்டடமொன்று மாநகர சபைக்குப் பின்புறமாக உள்ள சங்கிலியன் வீதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

'கேமாஸ்' நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் இதன் கட்டுமாணப் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இதேவேளை-

யாழ்.மாநகர சபை உறுப்பினர் திருமதி மரியகொறற்றி அன்ரன் இந்த முன்பள்ளிச் சிறார்களுக்கு 'பான்ட்' வாத்தியக் கருவிகளை அன்பளிப்பு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ- 315)

## யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக.4

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைக் கருத்தரங்குத் தொடரில் முதலாவது கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் 'சங்க மன்யோசுப் பாடல்களில் கூற்றுக்கள்' எனும் தலைப்பில் தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி செல்வ அம்பிகை நடராஜா கருத்துரை வழங்குவார்.

ஆர்வமுள்ளவர்கள் இதில் பங்குபற்றி பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)


## ஸ்ரீ காயத்ரி ஜோதிட நிலையம்





இந்தியாவின் பிரபல ஜோதிடர்

**சிவசங்கர் சுவாமிகள்**

கேரளாவில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

*இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.*

தொ.பே.: 077 7742605
077 8314448

கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:
காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

யாழ்.ரெஸ்ட் ஹவுஸ்,
230, இலுப்பையடிச் சந்தி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(101448)

### ஆட்டோ விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள QI-XXXX எனும் தொடரிலக்கமுடைய நீல வர்ண ஆட்டோ சகல வளங்களுடனும் (Extra Fitting) உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0775782100, 0775594179

### வீடு, காணி விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய 5அறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

**ST Johns, Chundukuli Girls.**
பாடசாலைகளுக்கு அருகில்.

தொடர்புகளுக்கு T.P: 077 2900033
E.mail. smariyan@hotmail.com

### வீடு தேவை

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் 3 அறைகள் கொண்ட வீடு IELTS ஆங்கில வகுப்பு நடத்துவதற்காக.
பிரதான வீதிகளில் விரும்பத்தக்கது.
உடனடியாகத் தேவை.

தொடர்பு: 0718107181

### வேலை வாய்ப்பு

- ★ யாழ்.குடாநாட்டுக்குள் புத்தகங்களை விநியோகிக்கக் கூடியவர் தேவை. (ஆண்- வயதெல்லை 50க்கு மேல்)
- ★ அலுவலக உதவியாளர்/ எழுதுநர் பெண் ஒருவர் தேவை. தகைமை :- O/L சித்தி

தொடர்பு:
0711472276

### போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள் விற்பனையாகின்றன

தொகுப்பு: த.தவசேகர்

- கல்வி சாரா ஊழியர் – விலை 150/–
- க.பொ.த. உயர்தர (2010) சகல துறையினருக்குமான பொதுச் சாதாரண பரீட்சை விலை 150/–
- சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான பொது அறிவு, பொது உளச்சார்பு – விலை 350/–

பூபாலசிங்கம், அன்னை, சிறீலங்கா, துர்க்கா (சுன்னாகம்), மொடேன் (நெல்லியடி), DMI (யாழ்) ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

Pastors Conference
போதகர் மகாநாடு

**Building the Kingdom through the Local Church**

சபைக்கூடாக தேவராட்சியம் கட்டுதல்

10th - 11th August 2010
9.00 am - 2.00 pm
(மதிய உணவு வழங்கப்படும்)
ASSEMBLY OF GOD JAFFNA
No.14 Rasavin Thoddam, Jaffna
இடமாற்றம் → தேவசபை யாழ்ப்பாணம்
இல.14 ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
Cost: Rs100/-

கலந்துகொள்ளக்கூடியவர்கள்
போதகர்கள், ஊழியர்கள், முழுநேர ஊழியம் செய்பவர்கள்.

Speakers:



Ps. David Fernandes
Snr Pastor Calvary Worship Centre Melbourne, Australia



Rev. Mohan Blessing
Snr Pastor Assembly of God Kandy

Registration பதிவுகள்:
Roni - 0779352372

Organised by Calvary Worship Centre

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
**Spoken English** பயிற்சி மையம்

An ISO 9001:2000 Certified Company

**veta**®
Experts in English Training



நெல்லியடி நகரிலும்

Foundation , First Step க்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி |
| --- | --- |
| Sat,Sun 8.30 a.m. | Tue,Thu 9.00 a.m. |
| Sat, Sun 3.30 p.m. | Sat, Sun 5.30 p.m. |
| Mon,Wed 5.00 p.m. | |

நவீன நுட்பங்களுடன் அடிப்படையில் இருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேச பயிலலாம்.

**DMI COMPUTER EDUCATION**
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021 - 320 7700


## கண்ணீர் அஞ்சலி

செல்வன்

**சுரேந்திரன் வருண்ராஜ்**



எமது பாரதி நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தோளோடு தோள் கொடுத்துப் பணியாற்றும் திருமதி சுரேந்திரன் மதனிகா (மாலா) அவர்களின் அருந்தவப் புதல்வன் வருண்ராஜின் மரணச் செய்தி கேட்டு நாமெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்புத் தாய், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள் யாவரோடும் எமது துயரத்தையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாரதி கைத்தொழில் நிறுவனம்,
இல.19, சம்பியன் வீதி, கொக்குவில்.

(101447)

## நீங்கா நினைவுகளில்.... நான்காண்டுகள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 01 | 18 |
| 01 | 07 |
| 1938 | 2006 |



*திருமதி* **தெய்வானை வேலாயுதம்**
(திக்கம்)
திதி: அபரபக்க நவமி





எம் இனிய அம்மா,
சொல்லுந் தரமன்று
உந்தன் இழப்பு
புதிய உறவுகளின்
புதுமைகள் காண
புதிதாய் மீண்டும்
பிறவேனம்மா....
கனக்கும் நினைவுகளோடு....

*'திருத்தணிகை'*
*வதிரி, கரவெட்டி.*

(8/569653)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அராலியூர் சிவஸ்ரீ சிற்சபேசக்குருக்கள் உமாசுதசர்மா



அராலியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்சபேசக்குருக்கள் உமாசுதசர்மா 31.07.2010 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2010) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

*வத்சலா அம்மா (ஜேர்மனி)*
*00497623718076*

*திருமதி இ.சிற்சபேசக்குருக்கள்*
*(021 7900244),*
*சி.இரவிச்சந்திரசர்மா*
*(021 4922951)*

(101503)

## மனுவேற்பிள்ளை நிக்கிலாஸ்



வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும், 10ஆம் வாய்க்கால், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை நிக்கிலாஸ் நேற்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சிவசக்தியின் அன்புக் கணவரும், பேராயிரன், இந்துகா, யாழிகா, யனகா, பகலவன், குறிஞ்சிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியநாதர் (ஆசிரியர்), யோசேப்பு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.08.2010) புதன்கிழமை அவரின் தற்போதைய வதிவிடமான இல.46, D8 உருத்திரபுரத்தில் மதியம் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உருத்திரபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*8ஆம் வாய்க்கால்,*
*46, D 8 உருத்திரபுரம்.*
*077 7906839, 078 9595702*

*தகவல்:*
*க.பிரபலசிங்கம் (மைத்துனர்),*
*மனைவி, பிள்ளைகள்.*

(101507)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வடக்கில் சிங்களக் குடியேற்றம்

வடக்கில், சிங்களக்குடியேற்றங்களை மேற்கொள்வதற்காக, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் தமிழ் மக்களின் பத்தாயிரம் ஏக்கர் காணியை அரசாங்கம் கையகப்படுத்த இருப்பதாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது; அம்பலப்படுத்தியிருக்கிறது.

பிரதானமாக மேற்கூறிய மாவட்டங்களில் அமைக்கப்படும் இராணுவ முகாம்களில் பணிபுரியும் படையினரின் குடும்பங்களைக் குடியமர்த்தவே தமிழர் நிலம் சுவீகரிக்கப்பட உள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டி உள்ளனர்.

வடக்கு, கிழக்கின் பாதுகாப்புக்கருதி அங்கு நிரந்தர இராணுவ முகாம்களும் படைத்தளங்களும் அமைக்கப்படும் என்றும் -

அவற்றில் பணிபுரியும் இராணுவத்தினரின் குடும்பங்கள் தங்கிவாழ, அந்தப் பிரதேசங்களில் இராணுவக் குடியேற்றங்கள் அமைக்கப்படும் என்றும் -

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளுக்கு மகிழ்ச்சியான தகவல் கூறியபோதே -

வடக்கின் பெரும் பிரதேசம் கபளீகரம் செய்யப்படும்; பல்லாயிரக் கணக்கான தமிழர் நிலம் அரசினால் கையடக்கம் செய்யப்படும் என்ற ஆபத்துக்குச் சமிக்ஞை காட்டப்பட்டிருந்தது. அது இப்போது செயல்வடிவம் பெறுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கணக்குப் பிரகாரம், அரசின் நட வடிக்கைகளால், வடக்கின் மக்கள் தொகையில் சிங்களவர் 30 சதவீதத்தினர் ஆகிவிடும் ஆபத்து தொட்டுக்காட்டப்பட்டுள்ளது.

முந்தைய அரசாங்கங்கள் எதனையும் விட, இப்போதைய அரசு, இலங்கையில் தமிழர் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில், மிகக்குறிப்பாக வடக்கில் சிங்களக் குடியேற்றங்களை மிகத் தீவிரமாக - டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில் கிழக்கில் பட்டிப்பளையை அம்பாறை என்று பெயர் மாற்றம் செய்த அளவுக்கும் வடக்கில் நாயாறை பதவியா என்றும் மாற்றும் அளவுக்கும் நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் வேகத்தை விடவும், அசுர வேகத்தில் தமிழ்ப் பகுதிகளைச் சிங்களப் பிரதேசங்களாக்கும் அதி தீவிரப் போக்கைக் கொண்டுள்ளது என்பது வெட்ட வெளிச்சம்.

பிரிட்டிஷாரிடம் இருந்து இலங்கை சுதந்திரமடைந்த ஒரு சில வருடங்களிலேயே இதனைத் தனிச் சிங்கள நாடாக்கி ஏனைய இன மக்களை இரண்டாம் தரப்பிரசைகளாக்கி ஆண்டான் அடிமை நிலையை உருவாக்க வேண்டும் என்பது சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் அரசியல் இலக்காகத் தோற்றம் பெற்றது. அதன் விளைவே காலத்திற்குக் காலம் ஊழித் தாண்டவம் ஆடிய இனக் கலவரங்களும் தமிழின அழிப்பும். அவை இந்த நாட்டின் சரித்திரமாகிவிட்டன; தனியாக ஆராயப்படவேண்டியவை.

இலங்கை தனிச் சிங்கள நாடாக மிளிர வேண்டும் என்ற பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களின் இலக்கு, காலத்துக்குக் காலம் முன்னரை விட வீறு கொண்டு தலைவிரித்தாடுவது இங்கு வழக்கமாகி விட்டது. அதற்கான காரணத்தை அவர்கள் அவ்வப்போது நியாயப்படுத்தவும் செய்தனர். அத்தகைய கட்டங்களில் இருந்தும் அதிமிகுந்த வீறு கொண்டு நிற்கும் வேளை இது எனலாம்.

அவ்வப்போது இன அழிப்பிலும், சிங்கள மேலாதிக்கத்திலும் ஈடுபடும் தலைவர்கள் தாம் செய்வது சரியானது, நியாயமானது என்பதனை மூன்றாமவர் உணரச் செய்வதிலும் பலே கெட்டிக்காரர்கள். இதனை அவர்கள் திட்டமிட்ட வகையில் ஒப்பேற்றி வந்திருக்கிறார்கள். இப்போதும் அதுவே செயலாகிக் கொண்டிருக்கிறது!.

கடந்த ஜூன் மாதப் பிற்பகுதியில் -

வடக்கு, கிழக்கில் சிங்கள மக்களை பெரும் எண்ணிக்கையில் குடியேற்றத் திட்டமிடப்படுகிறதா என்ற ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கான ஜனாதிபதியின் பதில், அரசாங்கத்தின் உள்நோக்கத்தை வெளிப்படுத்தியிருந்தது.

இந்த இரண்டு மாகாணங்களிலும் சிங்கள மக்கள் முன்னர் நிறையவே வாழ்ந்தனர். பிரபாகரனே அவர்களை அடித்துத் துரத்தினார். இனி அவர்கள் அங்கு சென்று வசிக்க விரும்பினால் அவ்வாறு செய்யலாம் என்று தெரிவித்திருந்தார் நாட்டின் தலைவர்.

மக்கள் கலந்து வாழ்வதே நல்லது என்று நம்புபவன் நான். முன்னர் இது ஒரு பிரச்சினையாகப் பார்க்கப்படுவதில்லை. தமது சொந்த நலன்களை முன்நிறுத்தி அரசியல்வாதிகளே இதனை உருவாக்கினார்கள் என்றும் அவர் கூறியிருந்தார். இதற்கு கருப்போட்டவர்களே சிங்கள அரசியல் தலைவர்கள் தான் என்பது இந்த நாட்டின் சரித்திரம்.

வடக்கில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் அவசரப்படுவதில் காரணம் இல்லாமல் இல்லை. தமிழர் பிரச்சினையில் தீர்வு என்று வரும் போது, வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் மட்டும் வாழவில்லை என்பதால் அவை இணைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு இடமே இல்லை என்று தட்டிவிடுவதற்கான கபட புத்தி இது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான, உகந்த தீர்வு காணப்படுவதற்குப் போடப்படும் தடைக் கல்லே வடக்கில் அரச அனுசரணையுடன் நடக்கப்போகும் அவசர அவசரமான சிங்களக் குடியேற்றம்.

இதன் பின்னரும் தமிழர் பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கும் என்று நம்புவது எப்படி...? இந்தியா உட்பட்ட சர்வதேசம் தானும் இதற்குப் பதில் அளிக்கவும் முடியாது, பரிகாரம் தேடவும் முடியாது. ஐயகோ, தமிழினமே....!.

# கடந்த ஆண்டில் 6ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு; எனினும் வடக்கில் பெரிய அபிவிருத்தி எதுவுமில்லை

## சுதந்திரக் கட்சியின் யாழ்.அமைப்பாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.3

கடந்த வருடம் வடக்கின் அபிவிருத்திக்கென ஆறாயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டபோதும் இதுவரை பெரிதாக எந்தவிதமான அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கலாநிதி வேல்முருகு தங்கராஜா.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டம் நேற்று 4ஆம் குறுக்குத்தெருவிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

எமது கட்சி பலவருடங்களாக மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது. அதனாலேயே இன்றும் அது விருட்சமாக வேரூன்றி நிற்கின்றது.

கடந்த தேர்தல் காலத்தில் எமது வேட்பாளர்கள் பலர் தாக்கப்பட்டனர். எம்மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

தேர்தல் காலத்தில் எமக்கு விரோதமாகச் செயற்பட்ட குழுவினர் இங்கு கூறினார்கள் தமது சின்னம், தமது கட்சி என்று. ஆனால் கொழும்பில் சென்று கூறுகிறார்கள் வெற்றிலையை விட்டால் வேறெதுவும் இல்லை என்று.

தேர்தல் காலங்களில் நடந்த கடத்தல், கப்பம், கொலை போன்றவற்றை வெறும் ஆகாயத்திலிருந்து வந்து எவரும் செய்யவில்லை. அவை யாரால் செய்யப்பட்டன என்பது பொது மக்களுக்கு நன்கு தெரியும்.

இப்பகுதியின் அபிவிருத்திக்கென கடந்த வருடம் ஆறாயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதும் இதுவரை எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது யாழ்.குடாநாட்டில் சிங்கள மக்கள் காணிகளைக் கொள்வனவு செய்யும்போது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்கிறார்கள். ஆனால் கொழும்பு, கண்டி, போன்ற தென்பகுதிகளில் தமிழர்கள் குடியேறுகின்றார்கள். அதேபோலவே அவர்களும் இங்கு வருவதன் மூலம் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும்.

700 பொலிஸாரை முன்னர் விடுதலைப் புலிகள் சுட்டுக் குவித்த போது எந்த உலக நாடுகளோ அல்லது ஐக்கியநாடுகள் சபையோ எதுவும் கேட்காமல் இருந்துவிட்டு முன்னர் சந்திரிகாவின் காலத்தில் செம்மணிப் பிரச்சினையையும் தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் முள்ளிவாய்க்கால் பிரச்சினையையும் கிளறுகிறார்கள்.

சர்வதேச நாடுகள் எமது அரசுக்கு எதிராகப் பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடுவதன் மூலமும் எமது இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைச் சீர்குலைத்து எமது நாட்டை பின்தங்கிய நாடாக உருவாக்குவதற்கு முயல்கின்றன.

எனவே இவற்றிலிருந்து விடுபட்டு நாம் இணக்க அரசியலை மேற்கொண்டு எமது இனங்களுக்கிடையேயான ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதன் மூலம் எமது நாட்டைக் கட்டி எழுப்ப முயலுவோம் - என்றார். (த-16)

# துர்க்காதேவி ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் தங்க நகைகள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

## ஆலய நிர்வாகசபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 4

வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கு வருகின்ற பக்தர்கள் தங்கநகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், சைவத்தமிழ் பண்பாட்டைப் பேணும் வகையிலான ஆடைகளை அணிந்து வருவது விரும்பத்தக்கது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

மேற்படி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவிழாக்காலங்களில் இம்முறை பெருந்திரளான மக்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே திருவிழாக்காலங்களில் ஆலய தரிசனத்துக்காக வருகின்ற அடியவர்கள் தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், சைவத் தமிழ்ப் பாரம்பரிய விழுமியங்களைப் பேணுகின்ற வகையிலான ஆடைகளை அணிந்து வருமாறும் -

ஆலயத்திருவிழாக் காலங்களில் 12 தினங்களும் அடியவர்கள் நலன் கருதி அன்னதானம் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# அம்பாந்தோட்டை புதிய துறைமுகத்தில் முதல் கப்பல் நவம்பரில் நங்கூரம் இடும்

## நீர் நிரப்பும் பணியை ஜனாதிபதி இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பிப்பார்

கொழும்பு, ஓக 4

துரிதமாகக் கட்டப்பட்டுவரும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதல் கட்டம் பெரும்பாலும் முடிவடைந்து விட்டது. முதல்கட்ட பகுதியில் தண்ணீர் நிரப்பும் பணியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரும் 15ஆம் திகதி ஆரம்பித்துவைப்பார். இத்துறைமுகத்தில் நங்கூரம்பாய்ச்சி தரித்து நிற்பதற்கான முதல் கப்பல் நவம்பர் மாதத்தில் வந்துசேரும்.

இத்தகவல்களை நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் பிரதானமான ஒன்றாகக் கருதப்படும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் செப்பனிடும் பணி சீன அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நான்கு கட்டங்களாக நிறைவேற்றப்படவிருக்கும் இந்த அபிவிருத்திப் பணி ஏறத்தாழ 2,000 ஹெக்டேயர் பிரதேசத்தை உள்ளடக்கியதாகவிருக்கும். முதல் கட்டம் 45 ஹெக்டேயர் பிரதேசத்தை உள்ளடக்கும் என்று சபாநாயகர் தெரிவித்தார். இத்துறைமுகத்தில் 1.4 கிலோ மீற்றர் அலை முட்டுச் சுவரும், 1,200 மீற்றர் நீளம் கொண்ட இரண்டு இறங்குதுறைகளும் இருக்கும் என்றார் அவர். இத்துறைமுகம் 21 மீற்றர் ஆழமாகவிருக்கும், 17 மீற்றர் வரையில் தண்ணீரால் நிரப்பப்படும்.

இந்தப்பணிகளின் காரணமாக 450 குடும்பங்கள் இழப்பீடு வழங்கப்பட்டு வேறு இடங்களில் குடியமர்த்தப்படுகின்றனர். இத்துறை முகத்தின் நிமித்தம் புதிய நகரம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அங்கு 42 அரச நிறுவனங்கள் செயல்படும். சகல அரச நிறுவனங்களையும் ஒரே கூரையின் கீழ் அமர்த்துவதற்காக 14 மாடி கட்டடத்தொகுதியொன்று நிறுவப்படும்.

2008ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி இத்துறைமுக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஓகஸ்ட் 15ஆம் திகதி முதல் கட்டப் பகுதியில் நீர் நிரப்பப்படுவதுடன் துறைமுகம் செயல்படத் தொடங்கும் என்று துறைமுகங்கள் மற்றும் விமானத்துறை பிரதி அமைச்சர் தெரிவித்தார். அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு தங்கள் கப்பல்களை அனுப்புவதற்கு பல சர்வதேச நிறுவனங்கள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகம் முழுமையாக செயல்படும்போது நாட்டில் கொழும்புக்கு அடுத்தபடியாக இந்தத்துறைமுகம் விளங்கும் என்று இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (ப)

## மூத்த பிரஜைகள் பேரவை நிர்வாகக் கூட்டம்

யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொக்குவிலில் அமைந்துள்ள பேரவை அலுவலகத்தில் காலை 10 மணிக்கு ச.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும்.

சகல நிர்வாகசபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-319)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 20 | 05.08.2010 வியாழக்கிழமை |
| திதி: | : தசமி மாலை 06.05 வரை |
| நட்சத்திரம் | : ரோகிணி பி.இ. 02.31 வரை |
| [illegible] | 07.34-09.04 வரை |
| ராகுகாலம் | : 01.34-03.04 வரை |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### யாழ். மாவட்டத்தில் 2009ஆம் ஆண்டு முதல்

# சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு 7 ஆயிரத்து 900 பேர் விண்ணப்பித்துள்ளனர்

யாழ்ப்பாணம், ஓக 4

யாழ். மாவட்டத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இதுவரை சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெற 7 ஆயிரத்து 900 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதில் சுமார் 2 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மோட்டார் திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். மாவட்டத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் தொடர்பான புதிய நடைமுறை கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டது.

இதன்பின்னர் அன்றிலிருந்து இதுவரை 7 ஆயிரத்து 900 பேர் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை - யாழ். மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெறுவதில் மக்கள் தொடர்ந்தும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போதும் நாளாந்தம் 100இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் எமது அலுவலகத்துக்குக் கிடைத்தவண்ணமுள்ளன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

நாளை

## PCH நிறுவனத்தின் பங்கு விநியோகம் ஆகஸ்ட் 5ம் திகதி முதல்

ஒவ்வொன்றும் ரூபா 11/- பெறுமதியான 57,233,334 சாதாரண பங்குகள்
விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படும்



இணைக்க தகுந்த நேரம்

முன் விபரனத்தின் மூலம் விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
முன் விபரணம் மற்றும் விண்ணப்ப படிவங்கள் நாடு முழுவதுமுள்ள முகவர்கள்,
NDB வங்கியின் அனைத்து கிளைகள், PCH இன் அனைத்து கிளைகள்
மற்றும் பங்கு விநியோகத்தின் முகாமையாளர்கள் - NDB முதலீட்டு வங்கியிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
அத்துடன் பின்வரும் இணையத்தளங்கள் ஊடாகவும் தரையிறக்கம் செய்யலாம்
www.cse.lk, www.pch.lk, www.ndbib.com.

துரித அழைப்புக்கு: 0759 000 300

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியான சூழ்நிலையானது வரும் காலங்களில் தேசிய பொருளாதாரத்தில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தும் என்பது யாவரும் அறிந்ததே. இதற்கமைய தகவல் தொழில்நுட்ப துறையில் எதிர்காலத்தில் பன்மடங்கு அபிவிருத்திகளை நாம் எமது நாட்டில் மட்டுமல்லாமல் முழு ஆசியாவிலும் எதிர்பார்க்கலாம்.

தகவல் தொழில்நுட்ப துறையில் ஓர் முன்னோடியான PCH நிறுவனமானது கடந்த 13வருட காலத்தினுள் தனது தன்னிகரற்ற சேவையின் மூலம் தகவல் தொழில்நுட்ப துறையில் நாட்டின் முன்னணி நிறுவனமாக தடம்பதித்து வந்துள்ளது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக பல தொடர்புகளை கொண்டுள்ள PCH நிறுவனமானது தொழில்நுட்ப துறையில் தனிமுத்திரை பதித்த நிறுவனமாக என்றும் திகழ்ந்துவருகின்றது.

PCH
Benchmark ICT

பீசீ ஹவுஸ் லிமிட்டட் இல. 451, காலி வீதி, கொழும்பு 3. இணையம்: www.pch.lk


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி சந்திரலிங்கம் அவர்களின் அன்புத் தாய்

**சுந்தராம்பிகை இராமசாமி**

அவர்களின் மறைவையிட்டு நாமும் துயரடைவதுடன் அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(103434)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ARGICULTURE

### *ADMISSION OF PUBLIC OFFICERS*
***FOR DEGREE PROGRAMME IN B.Sc AGRICULTURE (2009/2010)***

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna for the Admissions of Public Officers for Degree Program to follow B.Sc (Agriculture) as internal students for the Academic Year 2009/2010.

1. The applicant should have passed the A/L Examination in Biological Science and qualified to enter the University.

**OR**

Any other qualification as may be approved by the Faculty Board and the Senate.

2. Diploma in Agriculture (Course duration not less than 2 Years) obtained from any recognized Institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officers Grade in the field of Agriculture after obtaining Diploma Course

Age: candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Assistant Registrar /Admissions Branch University of Jaffna on a payment of Rs.50/= each at the Shroff Counter or Peoples' Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.50/= drawn in favour of the Bursar. Envelope (for Rs.5.00) not less than 9"x 4"size

**Date of closing is 13th August 2010.**

Application should be forwarded through the relevant Head of Departments.

Applications received after closing date or not forwarded through the relevant Heads of Departments will be rejected

Selected candidates will be called to sit for a Written Test and an Oral Examination.

02.08.2010. REGISTRAR


## வீடு வாடகைக்குத் தேவை

ஆனைக்கோட்டைக்கும் ஆறுகால் மடத்திற்கும் இடையில் சிறிய குடும்பம் ஒன்று வசிப்பதற்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு: 0779943457

## விற்பனைக்கு

52-xxxx இலக்கமுடைய டபிள் கப் இசுசு கன்ரர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: பிரகாஸ் எலக்ரோனிக் பருத்தித்துறை. 077 3222837

## விற்பனைக்குண்டு

CD கடைக்குரிய கண்ணாடி Fittings, அலுமாரி, சோக்கேஸ், CD பிளேயர், றெக்கோடர், கசட்பிளேயர், CD, ஸ்பீக்கர் பொக்ஸ் என்பன விற்பனைக்குண்டு. காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை பார்வையிடலாம்.

சசித ஒலிப்பதிவு நிலையம்
305, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 077 0870936

## THREE (3) MONTHS ENGLISH DIPLOMA COURSE

**Spoken Basic With Grammar,**
**Kids Spoken English**
(ஐந்து வயது தொடக்கம்) 3 மாத ஆங்கில வகுப்பு பயிற்சி நெறி

* ஆங்கில அறிவில் மிகவும் குன்றியவர்களும் ஆங்கிலத்தில் மூன்று மாத முடிவில் சரளமாக எழுத, வாசிக்க, பேச முடியும்.
* ஆங்கில அறிவில் மெதுவான, குன்றிய தேர்ச்சி உள்ளவர்கள் தனிப்பட்ட ரீதியில் கவனிக்கப்பட்டு அடிப்படையில் இருந்து வழிநடத்தப்படுவர்.
* பாடநெறியின் இறுதியில் நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**NIRU BUSINESS COLLEGE**
Kandy Road, Nunavil Center,
Chavakachcheri.
T.P: 077 3516592. 021 7200213

## அழகுக் கலைப் பயிற்சி வகுப்புகள்

கொழும்பின் பிரபல அழகுக்கலை நிபுணரால் மணப்பெண் அலங்காரப் பயிற்சி வகுப்புகள் முதன்முறையாகச் சாவகச்சேரியில் 15.08.2010 அன்று ஆரம்பமாகின்றது.
(முற்பதிவுகளுக்கு உடன் அழையுங்கள்)
மணப்பெண் மற்றும் சகலவித அலங்காரங்களும் நவீன முறைப்படி குறைந்த கட்டணங்களில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**NIRU BUSINESS COLLEGE**
Kandy Road, Nunavil Center,
Chavakachcheri.
T.P: 077 3516592. 021 7200213


## SYMPATHY

Uduvil Y.M.C.A. Condoles the Demise of a former Director
**Mrs. Kiruba Bavasingham**



**Young Men's Christian Association,**
**Uduvil.**

(101482)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு செல்வராஜா (பத்தர்)



மட்டுவில் வடக்கு, முத்துமாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு செல்வராஜா நேற்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் வசந்த பவானியின் (இந்திரா) அன்புக் கணவரும் தங்கராஜா, கணேஸ்வரன், சாரதாம்பாள், சந்தானலக்சுமி, கிருஸ்ணசாமி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.08.2010) புதன் கிழமை முற்பகல்10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்துமாரியம்மன் கோயிலடி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
ரி.சூரியகுமார்.
(மைத்துனர்)

(#/569650)

### திருமதி கிருபாநிதி பவசிங்கம்



*BA (Hons), Dip.in Education, Dip.in.Hindu Civilization, M.phil.*
*(ஓய்வுபெற்ற உப அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி)*

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருபாநிதி பவசிங்கம் கடந்த 28.07.2010 புதன்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மூத்த மகளும் ஏழாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு இளைய மருமகளும் காலஞ்சென்ற கந்தையா பவசிங்கத்தின் (ஓய்வுபெற்ற காசாளர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) இணை பிரியா மனைவியும் சர்மிலி (இந்தியா), கோஷலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் யோசுவா (பிரான்ஸ்), விக்ரர் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியும் விஜேந்திரனின் (ஆசிரியர்) பாசமிகு வளர்ப்புத் தாயும் சினேகா, நிகிற்றா ஆகியோரின் செல்ல அம்மம்மாவும் சாந்தி, திரு, தயா, அருளி ஆகியோரின் அன்பு மூத்த சகோதரியும் சாந்தாவின் உடன்பிறவாச் சகோதரியும் ராஜசிங்கம், பாலசிங்கம், பரமேஸ்வரி, தவமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான குலசிங்கம், வீரசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சரஸ்வதியம்மாவின் பாசமிகு பெறாமகளும் ஆவார். அன்னாரின் பூதவுடல் உடுவிலில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது நல்லடக்க ஆராதனை உடுவில் இல்லத்தில் இன்று (04.08.2010) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று தொடர்ந்து உடுவில் திருச்சபை தேவாலயத்திற்கு வழிபாட்டிற்காக எடுத்துச் செல்லப்பட்டு உடுவில் திருச்சபைகல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"குமர வாசா"
டர்சு வீதி, உடுவில். தொ.பே: 021-3213532

தகவல்:
பிள்ளைகள்.

(101330)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றோருக்கு செயற்கை அவயவங்கள் விரைவில் வழங்கப்படும்

## சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை

நாவற்குழி, ஓக.4

வடமாகாண சமூகசேவைகள் திணைக்களம் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றோருக்கு செயற்கை அவயவங்களைக் கொள்வனவு செய்து வழங்க உள்ளதாக பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார்.

அவ்வாறு பெறவுள்ளோர் விவரம் வருமாறு:

**கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவு**

செ.கலைச்செல்வன் (கல்வியங்காடு), சி.சுபாகரன் வீரவாணி (வாதரவத்தை), க.மேனகா (புத்தூர் கிழக்கு), ந.சோதிலிங்கம் (கோப்பாய் வடக்கு), கு.விஜயலஷ்மி (நீர்வேலி மேற்கு), ச.கயாழினி (அச்சுவேலி தெற்கு), அ.காயத்திரி (உரும்பிராய் மேற்கு), சி.பாலசிங்கம் (செல்வபுரம், உரும்பிராய்).

இ.ஜெயதிலகராசா (வாதரவத்தை), மூ.விநாயகமூர்த்தி (மத்திய கல்லூரி வீதி, அச்சுவேலி), க.சிவன் (பூலசிட்டி, அச்செழு), இ.பரமலிங்கம் (கரந்தன், நீர்வேலி), த.திரவியம் (தம்பாலை, அச்சுவேலி), ம.ஜனார்த்தனன் (ஆனந்தபுரம், இருபாலை), பொ.காந்தியப்பா (சிறுப்பிட்டி தெற்கு), இ.மேரி யூடிற்றஜி (அச்சுவேலி வடக்கு), ரி.ராஜகாந்த் (அச்சுவேலி வடக்கு).

**தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு**

த.புஸ்பநிதி (மட்டுவில் கிழக்கு), மா.மதீஸ்வரன் (கைதடி கிழக்கு), சி.ஜெயராஜ சர்மா வைரவநாதர் (சிவன்கோயிலடி, சாவகச்சேரி), க.அன்னம்மா (கெற்பேலி, மிருசுவில்), ஐ.தங்கராசா (மீசாலை மேற்கு).

**சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு**

அ.குணரட்ணம் (சுதுமலை வடக்கு), ந.நந்தினி (சாவற்காடு, ஆனைக்கோட்டை), செ.தயாளன் (மாகியப்பிட்டி).

**கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு**

ஜ.சுபாஜினி (அல்வாய் கிழக்கு), அ.ஜெயந்தினி (கரணவாய் வடக்கு).

**உடுவில் பிரதேச செயலர் பிரிவு**

சி.லீலாவதி (ஏழாலை வடக்கு). (த-121)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு நடத்திய சமய அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மாநகர முதல்வர் திருமதி ப.யோகேஸ்வரி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த-6)




# குடாநாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் படையினர் பாடுபடுவர்

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.4

குடாநாட்டிலுள்ள மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காகவும் மக்களது போஷாக்கினை உயர்த்துவதற்காகவும் இராணுவத்தினர் தம்மாலியன்றபங்களிப்பை வழங்குவர் இவ்வாறு யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படை தலைமையகத்திலுள்ள சிவில் விவகார மற்றும் பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தில் இடம்பெற்ற, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கல் மற்றும் கொல்லைப்புறக் கோழி வளர்ப்பை ஊக்குவித்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றியவை வருமாறு:

இன்று முக்கியமானதொருநாள். வித்தியாசமான இரண்டு திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன. யாழ்.குடாநாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வியினை உயர்த்தல் மற்றும் மந்த போஷாக்கான வறுமைப்பட்ட மக்களின் போஷாக்கினை அதிகரித்தல் என்பனவே அவையாகும்.

நாங்கள் யாழ்.குடாநாட்டு மக்களுக்காக 608 வீடுகளை அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். அதே போன்றே வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மாணவர்களின் கல்வியையும் உயர்த்த வேண்டும் என்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களையும் மாதாந்தம் ஆயிரம் ரூபா பணமும் வழங்கி வருகின்றோம்.

மேலும் குடாநாட்டிலுள்ள வறுமைப்பட்ட மக்களின் மந்த போஷாக்கினை இல்லாதொழிக்கும் பொருட்டு 10 பயனாளிகளுக்கு 10 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்குகின்றோம். அவர்கள் அதன் மூலம் பூரண பயன் அடைய வேண்டும். இது ஒரு ஆரம்பம் மாத்திரமே. இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

இன்று எமது நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவுகின்றது. எமது மக்கள் அனைவரும் ஒரே நாடு, ஒரே இனம் என்ற அடிப்படையில் வாழ்ந்து வருகின்றோம்- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமையக சிவில் விவகார மற்றும் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி சி.வடுகொட, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ரி.செல்வரத்தினம், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம், யாழ்.அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோரும் உரையாற்றினர். (எ-319)

# புத்தூர் வடக்கு வறிய முதியோருக்காக ‘இதம்’ நிறுவனத்தின் இலவச மருத்துவ முகாம்

நாவற்குழி, ஓக.4

தியாகி அறக்கொடை நிதியத்தின் நாவலர் வீதி, நல்லூரிலுள்ள அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் வடக்கு கிராமத்தைச் சேர்ந்த 25 வறிய முதியோருக்கு மருத்துவ முகாம் ஒன்று நடைபெற்றது.

வலி.கிழக்குப் பிரதேச செயலகமும் ‘இதம்’ உள சமூக நிறுவனமும் இணைந்து இதற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்திருந்தன.

புத்தூர் வடக்கு முதியோர் சங்கத்தின் தலைவர் எஸ்.சுந்தரலிங்கத்தின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

சிறப்பு மருத்துவ நிபுணர்கள் வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த வறிய முதியோருக்கு இச்சேவையை வழங்கி வருகின்றனர்.

‘இதம்’ உள சமூக நிறுவனம் புத்தூர் வடக்குக் கிராமத்தில் உள்ள வறிய மக்களுக்கு வழங்கும் சேவைகளின் ஓர் அங்கமாகவே பிரதேச செயலகத்துடன் இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தியது.

யாழ்.மாவட்ட சமூக சேவை அலுவலகம் இம் மருத்துவ முகாம் சேவைக்கான இணைப்பு நிலையமாக இயங்கி வருகின்றது. (எ-121)

# பூநகரிக்கான சொகுசுப் படகுச் சேவையை அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம்,ஓக.4

யாழ்- பூநகரி படகுப்பயணிகளின் வேண்டுகோளை ஏற்று வசதிகளுடன் கூடிய பயணிகள் படகுச் சேவையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆரம்பித்து வைத்தார்.

ஏற்கனவே பயணிகள் படகுச் சேவையானது இடம்பெற்று வந்த நிலையில் அதில் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். குறிப்பாக சரியான வடிவமைப்பு இன்மையால் வெயில், மழை போன்ற இயற்கைக் காரணிகளின் பாதிப்பிற்குள்ளானதுடன் கடும் காற்று வீசும் நேரம் கடல் நீர் தெறிப்பும் படகினுள்ளே இடம்பெற்றிருந்தது.

இவ்விடயம் பயணம் செய்யும் பொது மக்களினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில் இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்திய அமைச்சர் விடுத்த உரிய பணிப்புரைகளை அடுத்து குறைபாடுகள் அகற்றப்பட்ட, வசதியான இருக்கைகளுடன் கூடிய சௌகரியமான படகுச் சேவை நேற்று முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை மணியந்தோட்டம் இறங்குதுறைக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதிய படகுச் சேவையினை உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இச்சமயம் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் எஸ்.ஜெபநேசன் அடிகளார் ஆசியுரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து பயணத்தினை மேற்கொள்ளவென வருகை தந்திருந்த பயணிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்தார். பயணிகள் தொடர் பஸ்சேவையின் குறைபாடுகளை சுட்டிக்காட்டிய நிலையில் உடனடியாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உதவிப் பொதுமுகாமையாளருடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு அதனை நிவிர்த்தி செய்யுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் எஸ்.இராசநாயகம் உட்பட அமைச்சு மற்றும் மாகாண சபை அதிகாரிகளும் பயணிகள் மற்றும் பொது மக்களும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-224)

# கிராமப்புற மக்களுக்கும் இணையவசதி கிடைக்க ‘3 ஜீ’ பரிவர்த்தனையை அமைக்குக!

## மக்கள் கோரிக்கை

நாவற்குழி,ஓக.4

தனியார் கைத்தொலைபேசி நிறுவனங்கள் கிராமப்புறங்களில் தொலைத் தொடர்புக் கோபுரங்களை அமைக்கும் போது ‘3ஜீ’ பரிவர்த்தனையுள்ளதாக அவற்றை அமைத்தல் வேண்டும் எனப் பாவனையாளர்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பெரும்பாலான தொலைபேசி நிறுவனங்கள் 2 ஜீ பரிவர்த்தனையுள்ள தொலைத் தொடர்புக் கோபுரங்களையே அமைக்கின்றன. இதனால் கிராமப்புறத்தில் வசிப்போர் இணையத்தள வசதிகளைப் பயன்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரப் பிரதேச வாசிகள் மட்டும் நவீன தகவல் தொடர்புத் தொழிநுட்பங்களை பயன்படுத்தி அறிவு பெறும் போது தாம் மட்டும் தொடர்ந்து பின் தங்கியே இருக்க வேண்டி உள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெறுமனே உரையாடல் வசதிகளை மட்டும் கிராமப்புற பாவனையாளர்கள் பெற்றால் போதுமென இந் நிறுவனங்கள் நினைத்து நடப்பது கவலக்குரியதெனவும் கூறுகின்றனர்.

தென் பகுதியில் கிராமப் பிரதேசங்களில் எல்லாம் ‘3ஜீ’ பரிவர்த்தனையுள்ளதாகத் தொலைத் தொடர்புக் கோபுரங்களை அமைக்கின்றனர். யாழ்.குடாநாட்டில் மட்டும் ஏனிந்த நிலை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ-121)

# சிரமதானப் பணி

மண்டைதீவு கார்த்திகேய மகா வித்தியாலயம், சிவசக்தி இந்து இளைஞர் சங்கத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக 1990ஆம் ஆண்டில் இப்பகுதியில் வசித்த மக்களின் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து இருந்தனர். தற்போது இப்பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(த-6)

# முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.4

சுன்னாகம், கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர் வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

லயன் செ.மகாதேவா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி முருகனேசன் சுலோச்சனா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (த-6)






புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா கனடா ரொரன்ரோ நகரில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரை நிகழ்த்துவதையும், நடன அரங்கேற்றத்தின் ஒரு காட்சியையும் நிகழ்வில் கலந்துகொண்ட பழைய மாணவர்கள், பிரமுகர்களையும் படங்களில் காணலாம். (த-188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தீரும் அரசியல் கைதிகள் சோகம்!

## பச்சிளம் குழந்தையும் பாழ்பட்ட சிறையில்

''என்ர பிள்ளைக்கு ஒவ்வொரு நாளும் வெறும் சோறுதான் கொடுக்கிறனான். இவையள் தாற கறி கொடுக்கிறதில்லை. அது வெறும் பருப்புத்தான். ஒரு கிழமைக்கு ஒருக்கா நெஸ்பிறே தருவினம். அதில என்ன சத்து இருக்குது? அதோடே நான் உள்ளுக்கு வந்த நாள் முதலாய் பிள்ளை மருந்தோடுதான் இருக்குது. இங்கே வந்ததிலிருந்து பிள்ளைக்கு ஒரே கடி. இதை எங்கே போய் சொல்லுறது.''

தனது பிள்ளையின் நிலை குறித்துக் கவலைப்படும் ஒரு தாயின் சிறை ஆதங்கம் இது.

கடந்த முப்பது வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. ஆனால், அதனால் ஏற்பட்ட வடுக்கள் பல இன்றும் எஞ்சி உள்ளன. அவற்றில் ஒன்றுதான் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தேகத்தின்பேரில் கைதாகி பல்வேறு சிறைகளிலும் - தடுப்பு முகாம்களிலும் பல ஆண்டுகாலமாகத் தமது இளமைப் பருவத்தை இவர்கள் அழித்துக்கொண்டுள்ளனர்.

இவ்வாறு கைதிகளானவர்களில் முதியவர்கள், யுவதிகள், இளைஞர்கள் ஆகியோர் மட்டும் பாதிக்கப்படவில்லை. எந்தவொரு தப்பும் செய்யாத - அறிந்திராத - குழந்தைகள் கூட சிறையில் சிக்குண்டுள்ளன.

இதுவரை 765 அரசியல் கைதிகள் விசாரணை இன்றி சிறைகளில் வாடுகின்றனர்.

யுத்தம் முடிவுற்று சுமார் 18 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் கூட அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசு எந்தக் காத்திரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அவர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்துவதாகவும் தெரியவில்லை.

முன்னாள் போராளிகளின் விடுதலையில் அக்கறை காட்டிவரும் எதிர்க்கட்சிகள் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்திலும் அக்கறை காட்டினால் நல்லது. ஆனால், அப்படி நடப்பதாகத் தெரியவில்லை.

முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படவேண்டும்தான். அதில் எவ்வித மாறுபட்ட கருத்துகளும் இல்லை. அதேசமயம், அரசியல் கைதிகள் குறித்தும் அக்கறை காட்டப்படவேண்டும்.

கைதிகள் எப்போது தாக்கப்படுகின்றார்கள் அல்லது உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று காத்திருந்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அறிக்கை விடுவதிலும், ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதுவதிலுமே தமிழ் அரசியல் கட்சிகள் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வருகின்றன.

கைதிகளின் பெயரைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றமையை இலங்கை வரலாற்றில் நாம் தொடர்ச்சியாகக் காணக்கூடியதாக உள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் அரசியல்வாதிகளே முன்னின்று செயற்படவேண்டும். அதனைவிடுத்து, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது அரசியலை அதற்குள் புகுத்துவது முறையான விடயமல்ல.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளும் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதத்தை மேற்கொள்வர். உடனே அங்கு செல்லும் அமைச்சர்கள் ஏதாவது ஒரு வாக்குறுதியை வழங்கி அவர்களின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவருவர். ஆனால், அவர்கள் வழங்கிய வாக்குறுதியை தமது தேர்தல் வாக்குறுதி போன்று மறந்து விடுவர்.

''நான் எனது பிள்ளைக்கு ஒப்பிரேஷன் செய்வதற்காக டொக்டருடைய துண்டுடன் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு வந்தனான். அப்பத்தான் ஈரப்பெரியகுளம் செக்பொயின்டில என்னை புலிகளுடன் தொடர்பு எண்டு ஆமிக்காரர் கைதுசெய்தார்கள். இப்ப ஒன்றரை வரியமா என்ர ஒன்றரை வயதுப் பிள்ளையுடன் உள்ளுக்குத்தான் இருக்கின்றேன்.''

- இது வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள ஒரு பெண்ணின் குரல்.

தமக்கு பொதுமன்னிப்பு அல்லது பிணையில் செல்லும் அனுமதி அளிக்கப்படவேண்டும் என்று கோரி ஜனாதிபதி மஹிந்தவுக்கு யுத்தம் முடிவுற்ற பின்னர் அரசியல்கைதிகள் பல தடவைகள் கடிதங்கள் எழுதினர். அவை கூட ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கவில்லை. எதுவுமே ஜனாதிபதியின் காதுகளுக்குக் கேட்கவுமில்லை.




தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்னால் ஜனநாயக மக்கள் முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது...

செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே எல்லாம் முழங்கின.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளில் இளைஞர், யுவதிகள் மட்டுமல்ல குடும்பப் பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களும் கூட அடக்கம்.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் பெண்கள் பிரிவில் ஐந்து குழந்தைகளும் தாய்மார்களுடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

ஒன்றரை வயது முதல் 5 வயது வரையேயான அக்குழந்தைகள் தங்களது தாய்மாருடன் ஆண்டுக்கணக்காக சிறைக் கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கின்றன.

''நான் எனது பிள்ளைக்கு ஒப்பிரேஷன் செய்வதற்காக டொக்டருடைய துண்டுடன் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு வந்தனான். அப்பத்தான் ஈரப்பெரியகுளம் செக்பொயின்டில என்னை புலிகளுடன் தொடர்பு எண்டு ஆமிக்காரர் கைதுசெய்தார்கள். இப்ப ஒன்றரை வரியமா என்ர ஒன்றரை வயதுப் பிள்ளையுடன் உள்ளுக்குத்தான் இருக்கின்றேன்.''

- இது வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள ஒரு பெண்ணின் குரல்.

இவர்களில் அநேகரை வெளியிலிருந்து உறவினர்கள் வந்து பார்ப்பது இல்லை. ஏனெனில், இவர்கள் எங்குள்ளார்கள் என்று உறவினர்களுக்கும், உறவினர்கள் எங்குள்ளார்கள் என்று இவர்களுக்கும் எந்த விவரங்களும் தெரியாமலே உள்ளன.

தாய்மார்களுடன் இருக்கும் சில குழந்தைகளுக்கு தமது தந்தை யார், சகோதரர்கள் யார் என்பது கூடத் தெரியாது. அத்துடன், பலவிதமான நோய்த் தாக்கங்களுக்கும் அவர்கள் உள்ளாகி வருகின்றனர். போஷாக்கான உணவு கிடைப்பதில்லை என்பது அவர்களின் முக்கிய பிரச்சினை.

''என்ர பிள்ளைக்கு ஒவ்வொரு நாளும் வெறும் சோறுதான் கொடுக்கிறனான். இவையள் தாற கறி கொடுக்கிறதில்லை. அது வெறும் பருப்புத்தான். ஒரு கிழமைக்கு ஒருக்கா நெஸ்பிறே தருவினம். அதில என்ன சத்து இருக்குது? அதோடே நான் உள்ளுக்கு வந்த நாள் முதலாய் பிள்ளை மருந்தோடுதான் இருக்குது. இங்கே வந்ததிலிருந்து பிள்ளைக்கு ஒரே கடி. இதை எங்கே போய் சொல்லுறது.''

தனது பிள்ளையின் நிலை குறித்துக் கவலைப்படும் ஒரு தாயின் சிறை ஆதங்கம் இது.

''எனக்கு இன்னும் இரண்டு பிள்ளைகள் இருக்கினம். அவையள் என்ர அக்காவோடுதான் இருக்கினம். எங்கட அவர் தொடர்பாக எந்த தகவலும் இல்லை. அவர் இறுதிச் சண்டைமூட்டம் ஆமின்ர கட்டுப்பாட்டுக்குள் வந்தவராம். ஆனால், அவருக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.''

- இது அந்த அபலத்தாயின் சோகக் கதை.



சிறை வாழ்க்கை சிறு குழந்தைகளின் மனங்களில் எவ்விதமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை எல்லோராலும் புரிந்துகொள்ளமுடியும். இதனால், அவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது.

### கைதிகளின் விவரம்

| சிறை | எண்ணிக்கை |
|---|---|
| நியூ மகஸின் | 115 |
| வெலிக்கடை (ஆண்கள்) | 18 |
| வெலிக்கடை (பெண்கள்) | 55 |
| கொழும்பு விளக்கமறியல் | 340 |
| நீர்கொழும்பு | 26 |
| அநுராதபுரம் | 48 |
| வவுனியா | 27 |
| யாழ்ப்பாணம் | 30 |
| திருகோணமலை | 40 |
| மட்டக்களப்பு | 35 |
| போகம்பறை | 16 |
| பதுளை | 15 |

இவர்களை விடுதலை செய்யக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதினர். அதற்குக்கூட இன்னும் காத்திரமான பதில் எதுவும் கிடைக்கவே இல்லை.

**- ஜே.ஜே -**

தனக்கு வாலாட்ட முன்வந்த புலிகளின் முன்னாள் தளபதிகள், ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களாகச் செயற்பட்டவர்கள் எல்லோரும் ஜனநாயக நீரோட்டத்துக்குள் நுழைய இலங்கை அரசு பரிபூரணமாக இடமளித்துள்ளது. ஆனால், சந்தேகத்தில் கைதானவர்கள் விசாரணையும் இன்றி, விடுதலையும் இன்றி சித்திரவதை அனுபவிக்கின்றனர்.

புலிகளின் தளபதியாகச் செயற்பட்ட கருணா, பிள்ளையான் ஆகியோர் முறையே பிரதி அமைச்சராகவும், முதலமைச்சராகவும் அரசில் செயற்பட்டு வருகின்றனர். கே.பியோ சுகபோகம் அனுபவிக்கிறாராம். ஆனால், சந்தேகத்தில் கைதானவர்கள் தான் அரசுக்கு பயங்கரவாதிகளாகத் தெரிகிறார்கள்.

அரசியல்கைதிகளை மட்டும் தொடர்ந்து சிறைக்குள்

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் எழுதிய 'இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள் ஓர் சமகால மீளாய்வு' நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரு படங்களிலும், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.புஸ்பரட்ணம், பேராசிரியர் பாலகிருஷ்ணனுக்குப் பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும், பேராசிரியர் பாலகிருஷ்ணனிடமிருந்து பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்வதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# யாழ்ப்பாணத்தில் ஜனவரி முதல் ஜூலை வரை ஆயிரத்து 719 பேருக்கு டெங்குத் தாக்கம்

## இவர்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டு ஜனவரி முதல் கடந்த ஜூலை மாதம் வரை டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளான ஆயிரத்து 719 பேரில் 20 பேர் உயிரிழந்துள்ளனர் என பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த வருடம் ஜனவரி முதல் கடந்த ஜூலை 31 ஆம் திகதி வரை டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கலாம். சந்தேகத்தின் பேரில் 2573 பேர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டனர். அவர்களில் 1719 பேருக்கு டெங்குநோய்க்கான குணம்குறி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதில் 20 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஜனவரி மாதம் 649 பேர் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் 13 உயிரிழப்பு ஏற்பட்டது. பெப்ரவரி மாதம் 544 பேருக்கு டெங்குநோய் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அந்த மாதத்தில் மரணம் எதுவும் இடம்பெறவில்லை.

அதேபோல மார்ச் மாதம் 161 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகினார்கள். அதில் மூன்றுபேர் உயிரிழந்தனர். ஏப்ரல் மாதம் 80 பேர் டெங்கு நோய்த் தாக்கம் இருப்பது இனங்காணப்பட்டது.

இதில் ஒருவர் உயிரிழந்தார். மார்ச் மாதம் 59 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்கு உள்ளானார்கள். உயிரிழப்பு எதுவும் இடம்பெறவில்லை. ஜூன் மாதம் 148 பேருக்கு டெங்குநோய் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதில் இரண்டு பேர் உயிரிழந்தனர். ஜூலை மாதம் 78 பேர் டெங்குநோய்த் தாக்கம் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தப் புள்ளிவிவரத் தரவை வைத்து நோக்கும்போது இந்த வருட ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் டெங்குநோயின் தாக்கம் அதிகரித்திருந்தது. அது அடுத்து வரும் மாதங்களில் குறைவடைந்த நிலையினை அவதானிக்க முடிந்தது. அது பின்னர் ஜூன், ஜூலை மாதங்களில் மீளவும் அதிகரித்துள்ளது.

மழை காலங்களைத் தொடர்ந்தே டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதனை இந்தப் புள்ளிவிவரத் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன. டெங்குநோயின் அதிகரிப்பிற்கு தென்பகுதி மக்கள் வடக்கு நோக்கிப் படையெடுப்பதும் ஒரு காரணமாகும். தென்பகுதியில் டெங்குநோயின் தாக்கம் தற்போது அதிகரித்துள்ளது.

இந்த நிலைமையில் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன - என்றார். (த-14)

## டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 4

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பல இடங்களில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.

இதை முன்னிட்டு சிரமதானங்கள், விழிப்புணர்வு என்பன போன்ற நடவடிக்கைகள் மானிப்பாய் வைத்தியசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் உட்பட பல இடங்களில் நேற்று இடம்பெற்றன.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை கிராமசேவையாளர், சுகாதார உத்தியோகத்தர் ஆகியோர் நெறிப்படுத்தினர். (எ-314)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# கைதடி சித்த மருத்துவ சுற்றாடலில் தேங்கிக் கிடக்கும் குப்பை கூளங்கள்

கைதடி,ஓக.4

கைதடியில் இயங்கும் யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையின் சுற்றாடல் போதிய பரா மரிப்பு இல்லாமல் நோய்கள் பரவக்கூடிய நிலையில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்த மருத்துவத் துறையில் கிழக்கு, தெற்குப் பக்கங்களில் உள்ள வடிகால்களில் 'பிளாஸ்டிக்' பொருள்கள், குப்பைகள் கிடப்பதால் கழிவுநீர் வழிந் தோட முடியாது தேங்கிக் கிடக்கின்றது.

தவிர சித்த மருத்துவத் துறையில் பிரதான மண்டபத்தில் தெற்குப் புறத்தே குப்பைகள், பிளாஸ்ரிக் பொருள்கள் எரிக்கப்படுவதாலும் அவற்றின் சாம்பல் எச்சங்கள் அகற்றப்படாமல் இருப்பதாலும் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய சித்த மருத்துவத் துறையின் இந்தக் குறைபாடுகள் விரைவாக நீக்கப்பட உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6-288)

## சுயதொழில் ஒய்வூதியத் திட்ட நடைமுறைப்படுத்தல்:

# சிறப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்கள் யாழ்.செயலகத்தில் நாளை கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.4

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் 2008, 2009 ஆம் ஆண்டுக்கான சுயதொழில் ஒய்வூதியத் திட்ட நடைமுறைப்படுத்தலில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, இலங்கை சமூக பாதுகாப்புச்சபையின் தலைவர் நிமால் சந்திர அமரசிங்க ஆகியோரும் -

கௌரவ விருந்தினராக இளைப்பாறிய யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதம கணக்காளர் எஸ்.சண்முகரட்ணம், சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் க.சிவகரன், இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தம்பிக்க பாதுக்க ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், உதவிப்பிரதேச செயலர்கள், கணக்காளர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் யாழ்.மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் 2008 இல் அகில இலங்கை ரீதியில் கரவெட்டிப் பிரதேச செயலகம் முதலாம் இடத்தையும், சங்கானைப் பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

2009 இல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முதலாம் இடத்தையும் பருத்தித்துறைப் பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல 2009 இல் அகில இலங்கை ரீதியில் கிராம உத்தியோகத்தர் எஸ்.தனபாலசிங்கம் (பருத்தித்துறை) முதலாம் இடத்தையும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி எஸ்.கோமதி, திருமதி ரி.ரஜிதா, திருமதி கே.யாழினி முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டனர். (ஒ-10)

# மானிப்பாய் மத்திய சந்தையில் நிலவிய வசதியீனங்களுக்குத் தீர்வு

சண்டிலிப்பாய்,ஓக.4

மானிப்பாய் மத்திய சந்தையில் வியாபாரிகளினதும், பொது மக்களினதும் நன்மை கருதி வலி.தென் மேற்குப் பிரதேச சபை பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இதனால் இதுவரை காலமும் நிலவி வந்த வசதியீனங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

மேற்படி சந்தையிலுள்ள மீன் சந்தை சிறிய கட்டடமொன்றில் இயங்கி வந்தது. இதனால் வியாபாரிகளும், பொது மக்களும் இட நெருக்கடி காரணமாகச் சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இதேபோல் அங்குள்ள மலசல கூடம், கிணறு போன்றவையும் மக்களின் பாவனைக்கு உரியவாறு இல்லாததினால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி இருந்தார்கள். இக்குறைபாடுகள் குறித்து வலி. தென்மேற்குப் பிரதேசசபை செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து பல லட்சம் ரூபா செலவில் பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மீன் சந்தைப் பகுதி வியாபாரிகளினதும் பொதுமக்களினதும் வசதிக்கேற்றவாறு கிழக்குப் பக்கமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதே போல் அங்குள்ள கிணறும் திருத்தி அமைக்கப்பட்டுக் கம்பிவலையால் மூடப்பட்டுள்ளது. அத்துடன் மல சல கூடமும் மக்களின் பாவனைக்கேற்றவாறு புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து வியாபாரிகளும், பொதுமக்களும் நன்மை அடைந்துள்ளனர். (த-115)

# குடாநாட்டில் கூட்டுறவு அமைப்புக்களுக்கு இலகு கடன் திட்டம் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ்.குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு இலகு கடன்வழங்கும் திட்டம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்று கூட்டுறவாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தக் கடன் வழங்கும் திட்டத்தை முன்னெடுக்க கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் இலகு கடன் வழங்குவது பற்றி ஆராயப்பட்டதாகவும், இதில் இத்திட்டத்தை முன்னெடுக்க கூட்டுறவு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வட மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் திணைக்கள அதிகாரிகள் இதுவரை இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லையெனக் கூட்டுறவாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-224)

# ஆரம்பப் பிரிவு மாணவருக்கான வாசிப்பு முகாம் இன்று

கோப்பாய்,ஓக.4

புத்தகலட்டி சிறி விஷ்ணு வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வாசிப்பு முகாம் இன்று புதன்கிழமை மு.ப 10 மணிக்குப் பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம் பெறும்.

இதில் விருந்தினர்களாக சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை அதிபர் எஸ்.மகேந்திரராஜா, யாழ்.கல்வி வலய ஆரம்ப கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (எ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேசத்துக்கென தனியாக பிரதேசசபை அமைக்கக் கோரிக்கை

## வளங்களைச் சீராகப் பேண வலியுறுத்து

கண்டாவளை, ஓக. 4

கண்டாவளைப் பிரதேசத்துக்கென தனியான ஒரு பிரதேசசபை அமைப்பதற்கு கோரிக்கைகள் பல பொது அமைப்புகளாலும் விடுக்கப்பட்டுள்ளன.

கண்டாவளைப் பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது முன்னர் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் உப பணிமனையாக தொழிற்பட்ட பின்னர் இப்பகுதிக்குத் தனித்தனி பிரதேச செயலர் பிரிவாக இயங்க அனுமதிக்கப்பட்டது. 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தனித்தனிப் பிரதேச செயலர் பிரிவாக கரைச்சியும் கண்டாவளையும் தொழிற்படுகின்ற போதும் இவ்விரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒரு பொதுவான பிரதேச சபையாக கரைச்சி பிரதேச சபையே செயற்படுகின்றது.

தற்போதைய நிர்வாக ஒழுங்கின் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒரு பிரதேச செயலர் பிரிவு இருக்க வேண்டும். ஆனால், இங்கு அவ்வாறு இருக்காமை குறைபாடாகவே காணப்படுகின்றது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவானது 209 சதுர கிலோமீற்றர் பரப்பினையும், 15,478 சனத்தொகையையும் கொண்டது. கரைச்சிப் பிரதேசசபை 410.96 கிலோ மீற்றர் பரப்பினைக் கொண்டது. இவ்விரு பிரதேச செயலர் பிரிவுகளையும் சனத்தொகையையும் தனியொரு பிரதேச சபையால் நிர்வகித்து தேவைகளைப் பூர்த்தி செய்வது என்பது கடினமான காரியம்.

மேலும் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வீதிகள், சுடலைகள், சந்தைகள், பொதுக்கிணறுகள், மலசல கூடங்கள் பொது நூலகங்கள், ஆயுள்வேத வைத்தியசாலைகள் போன்றவற்றை சரியாக பராமரிக்க முடியாதிருப்பதுடன் பிரதேச சபையால் ஆற்றப்படுகின்ற முக்கிய பணிகளில் ஒன்றான வரட்சி கால நீர் விநியோகம் போன்ற செயற்பாடுகள் சரியான முறையில் மேற்கொள்ள முடியாமல் இருப்பதனால் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர். கழிவு அகற்றல், கட்டாக்காலி நாய் ஒழிப்பு, வீடுகள், கடைத் தொகுதிகள் கட்டுவதற்கான அனுமதிகள், இறைவரி அறவீடு, அனர்த்த முகாமைத்துவ சேவைகள் போன்ற சேவைகளைச் சரியாக மேற் கொள்ள இப்பிரதேசத்துக்குத் தனியான பிரதேச சபை இல்லாமை தொடர்ந்தும் குறைபாடாகவே காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் தற்போது 21 முன்பள்ளிகள் மற்றும் சிறுவர் பூங்காக்கள் என்பன காணப்படுகின்றன. இவற்றைப் பராமரிப்பதும் பிரதேச சபையே எனினும் போதிய நிதி ஒதுக்கீடு இன்மை காரணமாக இவற்றினைப் பராமரிப்பதும் கடினமானதாகவே உள்ளது. அத்துடன் பிரதேச சபை நிதி நிர்வாகத்தின் கீழ் வரும் சனசமூக நிலையங்களும் உரியவாறு பராமரிக்கப்படாமை கண்கூடாகக் காணமுடிகின்றது.

மேலும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவானது 5 பொதுச்சந்தைகளையும் இப்பிரதேசத்தின் ஆறுகளான கனகராயன் ஆறு, பன்னங்கண்டி ஆறு, நெத்தலி ஆறு போன்ற ஆறுகளில் இருந்து கிடைக்கும் இயற்கை வளமான மணல் அகழ்வுக்காக அறவிடப்படும் இறை கட்டணமும் வட பாகத்தில் பிரசித்தி பெற்ற புளியம்பொக்கனை ஆலயத்திலிருந்து கிடைக்கும் பிரதேச வருமானங்கள், சோலை வரிகள் மற்றும் ஏனைய அனுமதிக் கட்டணங்கள் போன்ற வருமானங்கள் அதிகமாக கிடைக்கின்ற போதும் இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்குச் செல விடப்படாது ஏனைய பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது மிகவும் வருந்தத் தக்கதாகும்.

இந்த நிலையை கருத்தில் கொண்டு கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் தனியான ஒரு கண்டாவளை பிரதேச சபை ஒன்றை அமைத்து இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு பல தரப்பாலும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

(ஐ-432)




# கிளிநொச்சியில் வலய மட்டத்திலான ஆங்கில தினப் போட்டிகள் இன்றும் நாளையும்

கிளிநொச்சி,ஓக.4

கிளிநொச்சி வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் பங்கு பற்றவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தனியொரு வலயமாக கிளிநொச்சி வலயம் காணப்படுவதனால் கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டியாகவும் இதுவே அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோர் மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவர். (ஐ-405)

# மன்னாரில் தீவிரமாகப் பரவும் டெங்கைக் கட்டுப்படுத்த படையினரும் பொலிஸாரும் இணைந்து சிரமதானம்

மன்னார்,ஓக.4

மன்னாரில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. மன்னாரில் இராணுவத்தினரும், காவல் துறையினரும் பெருமளவு இப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் ஆள்கொல்லி டெங்கு நோய் வெகுவேகமாகப் பரவி வருகின்றது. இதன் விளைவாகத் தினமும் ஒருவராவது மரணம் அடைகிறார்.

இதன் விளைவாக டெங்கு ஒழிப்புப் பணிகள் அரச சுகாதாரப் பணிமனையால் முடுக்கிவிடப்பட்ட போதும் பொது மக்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கவேயில்லை.

எனவே இப் பணிக்காக காவல்துறையினரும், பாதுகாப்புத் துறையினரும் ஈடுபடத் தீர்மானித்தனர். அதன் விளைவாக பெரும் எடுப்பில் சிரமதானப் பணிகள் நடைபெறுகின்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகரம் முழுவதும் இப்பணிகள் புயல் வேகத்தில் நடைபெற்றன. இதில் மன்னார் காவல் துறையினரும் பாதுகாப்புத் துறையினருமே முழு வீச்சில் ஈடுபட்டனர்.

அதேபோல் நேற்று முன்தினம் மன்னார் பொது வைத்தியசாலையில் முழு நாள் சிரமதானம் செய்யப்பட்டது. மன்னார் நகர படைப்பிரிவு நகரக் கொமாண்டர் தலைமையில் தள்ளாடி கட்டளை அதிகாரி மேஜர் மைத்திரி டயஸ் ஏற்பாட்டில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

(ஐ-80)

# கிளிநொச்சியில் மீண்டும் தொலைத்தொடர்புக் கோபுரம்

கிளிநொச்சி,ஓக.4

கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. ஸ்ரீலங்கா ரெலிக்கொம் வளாகத்தில் ஏற்கனவே நீண்டகாலமாக நிறுவப்பட்டிருந்த தொலைத்தொடர்புக் கோபுரம் யுத்தத்தின் போது முழுமையாக சேதமாகியிருந்தது.

இக் கோபுரம் மீண்டும் புதிதாக நிர்மாணிக்கப்படுவதால் கிளிநொச்சிப் பகுதியில் தொலைத்தொடர்பு வேலைகள் விஸ்தரிக்கப்படுவதுடன், மேம்பாடடையக் கூடிய நிலையும் காணப்படுகிறது.

(ஐ-405)

# மன்னாரில் பாடசாலைகளை மூடி சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு

மன்னார்,ஓக.4

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இதன் ஓர் அங்கமாக மன்னாரில் இயங்கி வரும் சகல பாடசாலைகள், கல்லூரிகள் அனைத்தும் அன்று மூடப்பட்டு மாணவ, மாணவிகளும் ஆசிரியர்களும் டெங்கு ஒழிப்பு சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏபல் ஹவ்வில், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செபஸ்தியன் ஆகியோர் தலைமையில் இந்தப் பணிகள் நடைபெற்றன.

கொடிய ஆள்கொல்லி நோயான டெங்கு மன்னாரில் மிகவும் வேகமாகப் பரவி பலரையும் காவு கொண்டது. சென்ற வாரம் மட்டும் சுமார் நால்வர் மரணமடைந்தனர். கொடிய வரட்சி நிலவும் மன்னார் மாவட்டத்தில் 'டெங்கு' வேகமாகப் பரவி வருவது அனைவருக்கும் புரியாத புதிராகும்.

இருந்த போதும் அனைத்து அரச திணைக்களங்கள், சுகாதாரப் பணிமனைகள், இராணுவ முகாம்கள், அனைத்தும் 'டெங்கை' ஒழிப்பதில் வெற்றி பெறுவோம் என நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

மன்னாரில் இயங்கும் நூற்றுக் கணக்கான பாடசாலைகளிலும் சில கல்லூரிகளிலும் 'டெங்கு' ஒழிப்பு முழுநேர சிரமதானம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தனர். (ஐ-80)


# கிளிநொச்சி அதிபர்கள் கூட்டம் நாளை

கண்டாவளை,ஓக.4

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக் கிழமை மு.ப 11 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.


கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுள்ளார்.

(ஐ-432)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பெற்றோரை இழந்து கல்வி கற்கும் 4 மாணவர்களுக்கு பிரான்ஸில் வசிக்கும் இராசநாயகம் திருந்தாஸ் என்பவரால் துவிச்சக்கர வண்டியும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் மாணவர்களுடன் அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.

(படம்: சிவகுபன்)



கொக்காவில் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 172 மீற்றர் உயரமான தொலைத் தொடர்புக் கோபுரத்தைப் படத்தில் காணலாம்

(படம்: சிவகுபன்)

# பரந்தன் வீதி புனரமைப்பு

கிளிநொச்சி,ஓக.4

ஏ-9 வீதியில் பரந்தன் - உமையாள் புரம் அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள பகுதி திருத்தப்பட்டுள்ளது.

இப்பகுதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்பட்டது. இதனால் இவ்வீதியால் பயணம் செய்வோர் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதேபோன்று ஆனையிறவுக்கு அண்மையிலும் நீண்டகாலமாக திருத்தப்படாது சேதமடைந்த பகுதி காணப்படுகின்றது. அத்துடன் ஏ-9 வீதி மேடு, பள்ளமாகக் காணப்படுவதனால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக உள்ளது. இதனை விரைவில் சீர்ப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் முயல வேண்டும் என பயணிகள் கோருகின்றனர். (405)

# முச்சக்கர வண்டிகளை பதிவு செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிப்பு

கண்டாவளை,ஓக.4

கிளிநொச்சி மாவட்டதில் உள்ள சகல முச்சக்கரவண்டி உரிமையாளர்களையும் பதிவு செய்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட முச்சக்கர ஊர்தி உரிமையாளர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறியவர்களில் பழைய சங்கப் பதிவில் சேவையில் ஈடுபட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் இதுவரை தமது சங்கத்தில் பதிவினை மேற் கொள்ளாது இருப்பவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக முச்சக்கர ஊர்தியுடன் தமது சங்கத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சங்கத்தில் புதிய, பழைய பதிவினை மேற்கொள்ளாது சேவையில் ஈடுபடும் முச்சக்கர ஊர்தி உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பதிவுகள் தொடர்பான தங்களது சான்றுகள் இருப்பின் எதிர் வரும் 12 ஆம் திகதி தமது சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் முச்சக்கர ஊர்தி உரிமையாளர் சங்கம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளது. (ஐ-432)

# பளையில் ஆறு பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

பளை,ஓக.4

பளை பிரதேச சபையும், பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

பளை பிரதேச சபையும் பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

பளை பிரதேசத்தில் உள்ள ஆறு பாடசாலைகளிலும் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டு பாடசாலை வளாகங்கள் துப்புரவு செய்யப்பட்டன.

பளை நகரம், பளை கிராமப் பகுதிகள் தோறும் ஒலிபெருக்கி மூலம் டெங்கு ஒழிப்பு பிரசாரம் தீவிரமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ-432)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நகர அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை அலுவலகத்தை மூட எதிர்ப்பு

## கிழக்கு மாகாணசபையில் தீர்மானம்

அம்பாறை, ஓக.04

அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு கல்முனையில் நிறுவப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தை மூடிவிடுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சென்ற வாரம் நடைபெற்ற கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வின் போது மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ. றஸாக்(ஜவாத்) இது தொடர்பான கவனயீர்ப்புப் பிரேரணையை சமர்ப்பித்தார்.

மேற்படி கோரிக்கையை வலியுறுத்தி அவர் அங்கு உரை நிகழ்த்துகையில்,

''தமிழ், முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு 2003 ஆம் ஆண்டு கல்முனையில் நிறுவப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகம் 2005 ஆம் ஆண்டு முழு அந்தஸ்துடன் மாகாண அலுவலகமாகத் தரமுயர்த்தப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டது.

''எனினும் 2008 ஆம் ஆண்டு இம்மாகாண அலுவலகம் திருகோணமலைக்கும் மாவட்டக் காரியாலயம் அம்பாறை நகருக்கும் இட மாற்றம் செய்யப்பட்டன. அத்துடன் கல்முனை உப அலுவலகமாகத் தரம் குறைக்கப்பட்டது.

தற்போது இவ்வலுவலகத்தையும் மூடி விடுவதற்குத் திரைமறைவில் துரித முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது மிகவும் கவலைக்கும் கண்டனத்துக்கும் உரிய விடயமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரகடனம் செய்யப்பட்ட 11 உள்ளூராட்சி மன்றங்களுள் அம்பாறை, லஹுகல தவிர்ந்த ஏனைய ஒன்பது சபைகளும் தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைக் கொண்டவையாகும்.

ஆகையால் கல்முனை அலுவலகமானது இம்மக்களின் நலன்களுக்கும் தேவைகளுக்கும் மிக இன்றியமையாத ஒரு காரியாலயம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்நிலையில் இவ்வலுவலகத்தை மூடிவிட்டு, இதன் பணிகளை அம்பாறை மாவட்டக் காரியாலயத்துடன் இணைத்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதன் மர்மம் என்ன?

இந்நடவடிக்கை தமிழ் பேசும் மக்களின் மனங்களில் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துவதுடன் ஜனாதிபதியினால் திறப்புவிழா செய்யப்பட்ட ஓர் அலுவலகத்தை மலினப்படுத்துவதாகவும் ஜனாதிபதியின் உத்தம தன்மைக்கு களங்கம் ஏற்படுத்துவ தாகவும் அமைந்துள்ளது.

எனவே, கிழக்கு மாகாணசபை இந்நடவடிக் கையை வன்மையாகக் கண்டித்துத் தனது எதிர்ப் பைத் தெரிவிப்பதுடன் அதனை உடன டியாகத் தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியை வலி யுறுத்திக் கேட்டுக்கொள்கிறது என்றார். (ளி)

# மீள்குடியேற்றத்தின் பின்னர் வெருகலில் பெரும் எண்ணிக்கையான மக்கள் விவசாயம்

திருகோணமலை, ஓக. 04

மீள்குடியேற்றத்தை அடுத்து, பெரும் எண்ணிக்கையான மக்கள் வெருகல் பிரதேசத்தில் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் காணிப் பிணக்குகள் தொடர்பான முறையீடுகளே வெருகல் பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கின்றன என வெருகல் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் தெரிவித்தார். பயிற்சிப்பட்டறையொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெருகல் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கிழக்கு மாகாணக் காணி நிர்வாகத் திணைக்களம், நோர்வேஜியன் அகதிகள் பேரவை ஆகியவற்றின் அனுசரணையுடன் உத்தியோகத்தர்களுக்காக இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார உரையாற்றுகையில்:- ''யுத்தத்தாலும், ஆழிப்பேரலை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட வெருகல் பிரதேச மக்களுக்கு நாம் சேவையாற்ற வேண்டும். இந்த நோக்கோடுதான் இந்தப் பயிற்சி வகுப்பு முதன்முதலாக இங்கு பணிபுரியும் அலுவலர்களுக் காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.'' - என்றார்.

''எமது திணைக்களத்தில் பயிற்சி வகுப்பு களை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் கிடையா. எனினும் எமது திணைக்களத்துடன் இணைந்து சேவையாற்றும் நோர்வேஜியன் அகதிகள் பேரவை இதற்கு உதவுகிறது. இதற்காக நாம் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் இவ்வாறான பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதற்கு இப்பேரணி உதவ வேண்டும் என்றும் அவர் இதில் கேட்டுக்கொண்டார்.

நோர்வேஜியன் அகதிகள் பேரவை திட்ட இணைப்பாளர் பேசுகையில்:-

''இங்குள்ள பிரதேச மக்களுக்கு உதவிகள் புரிய வேண்டும் என்ற நோக்கோடு இப் பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை உத்தியோகத்தர்கள் தக்கவகையில் பயன்ப டுத்தி, மக்களுக்கான சேவையை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டும்'' - என்றார். (ளி)

# நாட்டின் பல பாகங்களில் மீண்டும் சதொச விற்பனை.

திருகோணமலை, ஓக. 04

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இயங்காமலுள்ள சதொச விற்பனை நிலையங்களை மீண்டும் திறக்கக் கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் கிழக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களிலும் 15 சதொச விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

புதிதாக சதொச விற்பனை நிலையங்களும் நிறுவப்படவுள்ளன. இதனால் அதிகமான இளைஞர், யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பும் கிட்டும் என அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ளி)




# கிழக்கில் சுதேச மருந்து உற்பத்தி நிலையம்

மட்டக்களப்பு, ஓக. 04

கிழக்கு மாகாணத்தில் முதற்றடவையாக சுதேச மருந்து உற்பத்தி நிலையமொன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண ஆயுர்வேத ஆணையாளர் டாக்டர் இந்திராணி தர்மராஜா தெரிவித்துள்ளார்.

இந்த சுதேச மருந்து உற்பத்தி நிலையம் திருகோணமலையில் திறந்து வைக்கப்படும்.

உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் மாகாணத்திலுள்ள 49 ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

சுதேச மருத்துவ நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகள் கிழக்கு மாகாணத்துக்குப் போதுமானவையாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ளி)

# 90 வீதமான குற்றவாளிகள் தப்பி விடுகின்றனர் நுவரெலியா நீதிபதியின் திடுக்கிடும் தகவல்

நுவரெலியா, ஓக. 04

இலங்கையில் 90 சதவீதமான குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படுவதில்லை என நுவரெலியா மாவட்ட நீதிபதி சமன் காரியவாசம் தெரிவித்துள்ளார்.




சமாதான மன்றத்தினால் நுவரெலியாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சட்டம் தொடர்பில் பொலிஸார் மத்தியில் காணப்படும் விளக்கமின்மையே குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கான முதன்மைக் காரணி என அவர் சுட்டிக்காட்டினார்.

''குற்றச்செயல் தொடர்பான வழக்கு விசாரணைகளின்போது பொலிஸார் தமது வாதங்களை உயரிய தரத்தில் முன்வைக்க வேண்டியது மிகவும் அவசியம். அவர்களது வாதங்கள் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்றவர்கள் முன்வைக்கும் வாதங்கள் போன்று இருக்க வேண்டும் ''- என்றார் நீதிபதி.

முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக் கடமைகளுக்காகப் பொலிஸார் கடமையில் அமர்த்தப்படுவதனால் சில வேளைகளில் வழக்கு விசாரணைகளின் போது அவர்கள் நீதிமன்றங்களுக்கு வருவதில்லை எனவும் தெரிவித்தார் அவர்.

நீதியை வழங்கவேண்டியது நீதிமன்றங்களின் கடமை என்ற போதிலும், 100சத வீதம் நீதியையும் நியாயத்தையும் நீதிமன்றங்களில் எதிர்பார்க்க முடியாதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிணக்குகள் ஏற்படும்போது அவற்றைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள மக்கள் பழகிக் கொள்ளவேண்டுமென நீதிபதி வலியுறுத்தினார். (ளி)

# வடமேல் மாகாணத்தில் ஆயுள்வேத வீட்டுத் தோட்டம்

ஆயுள்வேத வீட்டுத் தோட்டச் செய்கையில் பொது மக்களை ஈடுபடுத்தும் விசேட வேலைத் திட்டம் ஒன்று வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாகாண ஆயுள் வேதத் திணைக்களம் இதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டச் செய்கையில் மக்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடல் ஆரோக்கியத்தைத் தரக்கூடிய, போஷாக்குமிக்க, முழுநிறைவான உணவுகளை மக்கள் உண்பதற்குத் தூண்டுவதும் இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாகும். இதன் படி உடல்நலத்திற்கு உகந்த பழவகைகள் மற்றும் மரக்கறிகளை நடுவதற்கு பொது மக்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். (ளி)

## மாகாண சபையின் கட்டுப்பாட்டில் இருக்கும்

# சிலாபம் மாவட்ட வைத்தியசாலையை அரசின் கீழ் கொண்டுவருவதற்கு முயற்சி

சிலாபம், ஓக.04

மாகாண சபையின் கீழ் இயங்கிவரும் சிலாபம் மாவட்ட வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான முன்மொழிவு வடமேல் மாகாண சபையில் அதன் சுகாதார, தேசிய வைத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அசோக வடிகமங்காவவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் மாவட்ட வைத்தியசாலை அண்மையில் மாகாண சபை நிதி மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டது. எனினும் மக்களின் தேவைக்கேற்ப மேலதிக வசதிகளை ஏற்படுத்த அங்கு நிறையவே செய்ய வேண்டி உள்ளது.

கடந்த வாரம் சிலாபம் மாவட்ட வைத்தியசாலைக்கு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வருகை தந்திருந்தார். ''எதிர்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வைத்தியசாலை அரசின் நிதி உதவி மூலம் அபிவிருத்தி செய்யப்படும்'' என்று அப்போது தொரிவித்திருந்தார்.

இதனை அடுத்தே சிலாபம் வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான முன்மொழிவை மாகாண அமைச்சர் சமர்ப்பித்துள்ளார். (ளி)

# வடமேல் மாகாண பொருளாதார நிலையம் 2 வருடங்களாகியும் மூடியே கிடக்கிறது

சிலாபம்,ஓக 04

7 கோடி ரூபா செலவில் வாரியப்பொல கலகெதர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட வடமேல் மாகாண பொருளாதார மத்திய நிலையம் இரண்டு வருடங்களாகியும் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது.

நிலையத்திற்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் முடிவடைந்துவிட்ட போதும் அது [illegible] கிறது எனக் கவலை தெரிவித்த பிரதேச வாசிகள், அதனை உடனடியாகப் பாவனைக்குத் திறந்து விடவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

வாரியபொல, நிகவெரடிய, கல்கவை, யாப்பஹுவா ஆகிய பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டது. அப்பொழுது கிராமியக் கைத்தொழில் மற்றும் சுயதொழில் வாய்ப்பு அபிவிருத்தி அமைச்சராக இருந்த [illegible]வின் ஆலோசனையை அடுத்து இந்த நிலையம் உருவாக்கப்பட்டது. (ளி)

# 4 வயது சிறுமி மீது பலாத்காரம் நுவரெலியா இளைஞன் கைது

நுவரெலியா ஓக.03

கொட்டியாகலைத் தோட்டத்தில் நான்கு வயதுச் சிறுமி ஒருத்தியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் 19 வயது இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளான்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பொகவந்தலாவை பிரதேசத்தில் அமைந்துள்ளது கொட்டியாகலை தோட்டம்.

குற்றத்தைப் புரிந்தவர் என்று சந்தேகிக்கப்படும் நபரும் அதே தோட்டத்தைச் சேர்ந்தவரே என்று பொலிஸார் தொரிவித்தனர். சிறுமியை மறைவிடம் ஒன்றுக்கு இழுத்துச் சென்ற சந்தேகநபர் அவளை பலாத்காரம் செய்ய முற்பட்டுள்ளார் எனவும் சிறுமி கதறி அழுததைக் கேட்டு அங்கு ஓடிச் சென்ற அயலவர்கள் அவளை மீட்டதுடன் சந்தேகநபரையும் பிடித்தனர் என்றும் பொலிஸார் கூறினர்.

பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுமி பின்னர் மேலதிக மருத்துவ பரிசோதனைகளுக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சந்தேகநபரை பொகவந்தலாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் றோஹித வணிகசேகர ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினார். அவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் சந்துன் வித்தான உத்தரவிட்டார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைச்சிக் கோழி விற்பனை

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் தினமும் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- மல்ரி பாம் சென்ரர்,
61, சேர் பொன். இராமநாதன் வீதி, கலட்டி.
தொ.பே:- 021 7912783.

## Australia UK and Canada போன்ற நாடுகளுக்கான Migration and Student Visa

தொழில் அதிபரா? வர்த்தகரா? பட்டதாரிகளா?
(Engineers, Doctors, Accountants, IT Digree and Nursing)

**மாபெரும் இலவசக் கருத்தரங்கு**

காலம்: 2010 ஓகஸ்ட் 7ஆம் திகதி
இடம்:-Cosy Hotel &Restaurant,
No.15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
Jaffna: Mr.M.Selvam - 0774454646/0777849853
82/12A, Chetty Street, Nallur.

வடமராட்சி-0773696904
தென்மராட்சி - 0775143946
Note: உங்கள் சுயவிவரக் கோவையுடன், ஆவணங்களையும் கொண்டு வரவும்.

Student Visa U.K. Min.Qualification O/L

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No,22A, Frankfort Place, Bambalapitiya
Colombo-04, Srilanka.
Tel: 011 2508443/Mob: 0777 849853, 0718246941
Web:www.etbclanka.com E-mail:etbc@etbclanka.com

## STUDENT VISA (SPOT ADMISSION)

* UK, Australia,Malaysia, Singapore,Belarus,Russia
  - சகல விதமான கற்கை நெறிகளுக்கும்( including Medicine, Engineering )
  - வங்கி நிலுவை ஏற்பாடுகள்.
* Skilled Migration - Canada.

Consultation by.
Dr.M.Mylashan MBBS (Sri Lanka)
Director,
Overseas Students' Programme (pvt)LTD
T.P : 0777 250555, 0715231023

Kopay South,
Jaffna.


# கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 65 ஆயிரம் பேருக்கு வீடுகள் இல்லை

கொழும்பு, ஓக. 4

நாட்டில் வீடில்லாமல் பன்னிரண்டு லட்சம் குடும்பங்கள் உள்ளனர். அவர்களுக்காக பன்னிரண்டு லட்சம் வீடுகள் நிர்மாணிக்க வேண்டியுள்ளன. அதில் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 65 ஆயிரம் வீடுகள் தேவையாக உள்ளன என்று வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அதிகார சபையின் தலைவர் ஜயந்த சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை அறவிட்டு அந் நிதி மூலம் மேலும் பல வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்கு உதவிவருகின்றது. ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சஜீத் பிரேமதாச அண்மையில் ஊடகங்களில் வீடமைப்புக் கடன் பற்றி தெரிவித்த கருத்து முற்றாக முரண்பட்டது.

'காலம்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாச காலத்தில் அறவிட வேண்டாம் என ஆர். பிரேமதாச அன்று சொல்லியிருந்தார். ஆனால் தற்போதைய அதிகார சபை வங்குரோத்து நிலையையடைந்தால் அக் கடன்களை மீள மக்களிடமிருந்து அறவிடுகிறது என்று சஜீத் பிரேமதாச ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். எனினும் அவ்வாறு ஆர். பிரேமதாச குறிப்பிடவில்லை. 1988.08.31 திகதி தொடக்கம் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாத காலத்தில் உணவு முத்திரை பெறும் குடும்பத்தினர் பெற்ற வீடமைப்புக் கடனையே அறவிடப்படமாட்டாது என அன்று 1992.01.23 திகதி பத்திரிகையில் வீடமைப்பு அதிகார சபை விளம்பரப்படுத்தியிருந்தது.

அதன் பிறகு பத்து லட்சம், பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டங்களென 48 கோடியே 50 லட்சம் ரூபா கடன் மக்களிடமிருந்து அறவிடவேண்டியுள்ளது. இக் கடன்களை பெற்றோர் கடனைச் செலுத்த தவறியுள்ளனர். இதனையே தற்போது அறவிடுகின்றோம். உதாரணமாக ஒரு மாதம் 532 ரூபா செலுத்துகின்றனர். அதில் 500 ரூபா மூலதனமும் மிகுதி எடுத்த கடனுக்கான வட்டி 32 ரூபா ஆகும்.

இந்நிதிகளை சேகரிப்பதற்கென கடன் அறவிடுவோர்க நியமித்துள்ளோம். அவர்கள் வீடமைப்புத் திட்டங்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று கடனை அறவிடுகின்றனர். கடன் அறிவிட்டு முடிந்ததும் அவர்கள் வீட்டுரிமைப் பத்திரமொன்றையும் பெறமுடியும்.

இந்நிதிகளை மீள அறவிட்டு தற்பொழுது வீடில்லா குடும்பங்களுக்கு வீடொன்றை நிர்மாணித்துக்கொள்ள இரண்டு லட்சம் ரூபா நிதி வழங்கப்படு கின் றது. இந்தத் திட்டம் நாட்டில் உள்ள சகல மாவட்டத்திலும் உள்ள மாவட்ட வீடமைப்பு அதிகார சபைகள் ஊடாக வழங் கப்பட்டு வருகின்றது.

இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு ஒரு மாவட்டத்தில் 5 இராணுவக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு 'செவன' உதவித்திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டுவதற்கு இலவசமாக வீடமைப்பு உதவித் திட்டம் இரண்டு லட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. இத்திட்டம் இன்று கொழும்பில் சவ்சிரிபாயவில் அமைச்சர் விமல் வீரவன்ஸவால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. - இப்படி வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் கூறினார். (சி)

## தற்செயல் நிவாரண நிதி கிடைத்தது

கைதடி, ஓக 4

தென்மராட்சிப் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக சமூகசேவைத் திணைக்களத்திற்கு தற்செயல் நிவாரணத்திற்கு விண்ணப்பித்த சிலருக்கு கொடுப்பனவுக்குரிய காசோலைகள் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சமூகசேவைத் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் த.தங்கமணி (சரசாலை தெற்கு), அ.தங்கமலர் (கைதடி தெற்கு), அ.தங்கமணி (கைதடி தெற்கு) ஆகியோருக்கு முதலாம் கட்டமாகவும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ப.நவமலர் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு) என்பவருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாகவும் ரூபா 10,000 வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-288)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக 4

யாழ்.மாவட்ட செயலகத்தில் கிராம சேவையாளர்களுக்கான "தேச வழமை சட்டம்" தொடர்பான கருத்தரங்கு செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இக் கருத்தரங்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், சட்டத்தரணி சுந்தரலிங்கம் ஆகியோர் தொகுத்து வழங்கினர். மக்களுக்கான சேவைமுறை, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தல், தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்ற பெற்றுக்கொடுத்தல் என்பன பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. (எ-314)


## உடன் விற்பனைக்கு

வவுனியா, கோயில்குளம் மகா வித்தியாலயத்தின் முன்புறமாக அமைந்துள்ள சுற்றுமதிலுடன் கூடிய 3 ½ பரப்பு 9 குளி அமைவான காணி உடன் விற்பனைக்குண்டு.

தொ.பே. 0214904816, 0779103857


## கண்ணீர்க் காணிக்கை

யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற்துறைத் தலைவர் கலாநிதி சிறீசற்குணராசா அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் சிவக்கொழுந்து பொன்னம்மா (இராசம்மா)**

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது இதயபூர்வமான கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
கணிதபுள்ளி விபரவியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(101431)

## மரண அறிவித்தல்

### முத்தையா தணிகாசலம் J.P.

(ஓய்வுபெற்ற ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு கல்வி வலயம், பகுதிநேர விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை நிரந்தர வதிவிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட முத்தையா தணிகாசலம் நேற்று (02.08.2010) திங்கட்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - விசாலாட்சி சவுந்தரம் ஆகியோரின் அன்பு மருமகனும் பவளராணியின் அன்புக் கணவரும் பாமினி, பாபுஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காந்தரூபனின் (U.K.) அன்பு மாமனாரும் சுப்பிரமணியம், தவமணி, கணேசம்மா, செல்லநாயகி, நவமணி தெய்வேந்திரராசா (U.K.), ஆனந்தராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி காலஞ்சென்றவர்களான இராமநாதன், பாலேந்திரா மற்றும் கோபாலகிருஸ்ணன், டில்லிராணி, யோகேந்திரன், காலஞ் சென்ற தங்கமலர் மற்றும் நல்லம்மா, செல்வவதி, சிவகுரு நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர் களான கந்தசாமி, அரசரட்ணம் மற்றும் கந்தையா ஆகியோரின் சகலனும் நிவேதன், சர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மு.சுப்பிரமணியம் (சகோதரன்),
அ.அருட்செல்வன் (U.K.),
சி.காந்தரூபன் (மருமகன்-U.K.),
த.பாபுஜி (மகன்),
அ.அஜந்தன் (இத்தா).

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
0774737127

(101409)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் சிவயோகம்



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சிவயோகம் நேற்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-இராசமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற மூத்ததம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் மூத்த சகோதரியும் தங்கராசா (கனடா), பாலச்சந்திரன் (கனடா), புஸ்பராசா (கனடா), தவராசா (கனடா), செல்வராணி, ஆனந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணசிங்கம் (லங்கா சிமெந்து நிறுவனம்), பகீரதன் (ஆசிரியர், கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி), ராஜேஸ்வரி (குஞ்சு), மாலினி, சகுந்தலாதேவி, றஜனி, மலர்விழி ஆகியோரின் மைத்துனியும் திருமதி சுபா சயீவன், நிஷாந்தன், ஜனார்த்தன், சுகி, தாரணி, கோகுலன், நவநீதன், பிரிந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும் அகிலா, கவிதா, சஞ்சீவன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (04.08.2010) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். மைத்துனர்: பகீரதன்.

### திருமதி தர்மலிங்கம் செல்லம்மா



கீரிமலை வீதி, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கணேஸ்வரம், அளவெட்டியை (அனிங்கிலடிப் பிள்ளையார் கோயிலடி) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் செல்லம்மா நேற்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் சின்னட்டி -சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் இராசம்மா, மகாலிங்கம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாகரன், மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.08.2010) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் அளவெட்டி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் அலுக்கை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
அளவெட்டி. கருணாகரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் ரகசியம்

உங்களுக்கு எரிச்சல் வருமாப்போல ஒரு கேள்வி கேட்கட்டுமா?

நெல்லிக்காய் ஏன் நெல்லிக்காய் மாதிரி இருக்கு? அது ஏன் அவரைக்காய் மாதிரி இருக்கக் கூடாது!

உங்களுக்கு கோபம் வருவதுக்குள்ள நானே சொல்ல வந்த விடயத்துக்கு வந்துடறேன்.

இயற்கை இந்த உருவங்களில் சில ரகசியத்தை மறைத்து வைத்திருக்கிறது.

நம் உடம்பிற்குள் எத்தனையோ உறுப்புக்கள் இருக்கின்றன. நமது உடம்பில் உள்ளே இருக்கும் சில உறுப்புகளுக்கும் காய் - பழம் இவற்றின் உருவத்திற்கும் சில ஒற்றுமை இருக்கின்றது.

உதாரணமாக நம் உடம்பில் இதயம் இருக்கிறது. தாமரை மொட்டும் அதுமாதிரியே உள்ளது.

நம் உடம்பில் சிறுநீரகம் உள்ளது. அவரை விதையும் முந்திரியும் அது போலவே இருக்கின்றன. இயற்கையில் அமைந்திருக்கிற உருவ ஒற்றுமை தற்செயலாக அமைந்ததாக இருக்குமா?

இல்லை இதுக்கு ஏதாவது அர்த்தம் இருக்குமா? ஆயுர்வேதம் இதைப்பற்றி ஓரளவுக்கு ஆராய்ச்சி பண்ணியுள்ளது.....

அதாவது இந்த உருவ ஒற்றுமை சம்பந்தமாக நம் முன்னோர்கள் கொஞ்சம் ஆராய்ச்சி பண்ணி இருக்கிறார்கள்.

இப்பொழுது 'இந்தியன் வோல்நட்' என்று சொல்கிறோம் அல்லவா..... அந்த வாதுமை உடைய உருவம் எப்படி என்றால்.....

மேலே கடினமான ஓடு.... உள்ளே அந்த ஓட்டில் ஒட்டாமல் சுளை தனியாக இருக்கும்!

நமது தலைக்கும் இந்த அமைப்புக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. மனிதனுக்கு மண்டை ஓடு கடினமானதாக இருக்கும்.

உள்ளே மூளை - மண்டை ஓட்டில் ஒட்டாமல் தனியாக இருக்கும்! ஒற்றுமை புரிகிறதா!

வாதுமையுடைய மேல் ஓடுதான் மண்டை ஓடு.

அதற்குள் இருக்கிற சுளைதான் மூளை!

சரி அதுக்கு என்ன இப்போது என்றா கேட்கிறீர்கள்?

மத்திய கிழக்கு நாடுகளில் இருப்பவர்களும் ரஷ்யாவில் வடபகுதியில் இருப்பவர்களும் இந்த 'வாதுமை'யை எதற்கு உபயோகப்படுத்துகிறார்கள் தெரியுமா?

மூளை வளர்ச்சிக்கு 'டானிக்' கா உபயோகப்படுத்துகிறார்கள்! அப்படி என்றால் ...

உருவத்துடைய ஒற்றுமைக்கும் அதனுடைய உபயோகத்துக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிற மாதிரி தெரியவில்லையா!

அதுதான் இயற்கை மறைத்து வைத்திருக்கும் ரகசியமாக இருக்குமோ?

அவரை விதை இருக்கின்றது தானே! சிறுநீரகம் மாதிரி தானே இருக்கு! அமெரிக்காவிலும் ஒரு பெரிய அவரை இனம் இருக்கு! அதற்கு பெயரே சிறுநீரக அவரை!

அவரை விதையும் நமது உடம்பில் இருக்கிற சிறுநீரகமும் உருவத்தில் ஒரே மாதிரியாக இருக்கு! இல்லையா?

இப்பொழுது ஆச்சரியம் என்னவென்றால்... சிறு நீரகத்தைச் சரியாக வேலை செய்ய வைப்பதற்கு அவரை விதையில் இருந்து மருந்து தயாரிக்கிறார்கள்.

அதாவது இந்த அவரை விதை ஒரு சிறந்த "Diuretic" ஆகப் பயன்படுகிறது! அது மட்டுமல்லாமல் இரத்தத்தில் உள்ள சர்க்கரைஅளவைக் குறைப்பதற்கும் அவரைத் தோல்கள்தான் உபயோகப்படுகிறது.

அது இருக்கட்டும்.....

மனிதனுடைய உயிரணுவை Sperm என்று சொல்லுவார்கள்! மைக்ரஸ்கோப் மூலமாக அதைப் பார்க்கலாம்.

தலை - நடுப்பகுதி - வால் இப்படி மூன்று பகுதி இருக்கும். அதில்! ஆண் - பெண் உயிரணுக்கள் ஒன்று சேர்ந்த உடன் அந்த Spermஇன் நடுப்பகுதியும் - வாலும் தனியாகப் போய்விடும். தலைப்பகுதி மட்டும் இருக்கும்! மனிதன் எனும் பயிர் உருவாக ஆரம்ப விதை இதுதான்!

இது எப்படி இருக்கும் தெரியுமா? 'எள்' விதை மாதிரி இருக்கும்! நம் முன்னோர்கள் ஆண் - பெண் மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கு இந்த 'எள்'ளைத் தான் கொடுப்பது வழக்கம்.

அப்புறம்.....

இதய கமலம் என்று சொல்வோம்.

கமலம் என்றால் தாமரைப் பூ! அது காலையிலே மலர்கிறது. மதியம் விரிகிறது - மாலையில் சுருங்குகிறது!

நம் இதயமும் அதே மாதிரி சுருங்கி விடுகிறது.

இதயத்தின் நடவடிக்கையும் - தாமரையின் நடவடிக்கையும் ஒன்றாக இருக்கிறது இல்லையா?

இப்பொழுது பாருங்கள்... இருதய பலவீனத்தைப் போக்குவதற்கு தாமரை தான் உபயோகப்படுகிறது!

கொய்யாப்பழம் இருக்கிறதே அதை தலைகீழாக வைத்து பார்த்தா... அதோட உருவமும் கர்ப்பப்பையினுடைய உருவமும் ஒத்து இருக்கும்! Uterus என்று சொல்றாங்களே அது தான்!

கருப்பைக் கோளாறுகளைச் சரி செய்யக் கொய்யாப்பழம்தான் உபயோகப்படுகிறது!

நெல்லிக்காயை கண்ணிற்கு நேரே வைத்து பாருங்கள்! நடுவில் விதை மூழ்கி இருக்கிறது மாதிரியே தெரியும்! நமது கண்ணும் அப்படித் தான் கருவிழி நடுவில் இருக்கும்!

கண் சம்பந்தமான ''டானிக்'' நெல்லிக்காயில் இருந்து தயாராகிறது!

அவரை விதை மாதிரியே - முந்திரி பருப்பில் இருந்து சிறு நீரகம் சம்பந்தமான மருந்து தயார் செய்கிறார்கள்!

இதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால்.... நம் உடம்புதான் பிரபஞ்சம்....

இந்த பிரபஞ்சம்தான் நம் உடம்பு!

என்ன நிறைய குழப்புகிறேனா..?

படைப்பு இரகசியங்கள் ஏராளம் இருக்கு.... இது வரைக்கும் நாம புரிந்து கொண்டது ஒரு துளிதான்! இப்ப நான் உங்களிடம் சொன்னதை எல்லாம் கொஞ்ச நாளிற்கு முன் என் சிநேகிதன் ஒருத்தனிடம் ரொம்ப சீரியசா சொல்லிக் கொண்டிருந்தேன்..... அவன் குதர்க்கமா ஒரு கேள்வி கேட்டான்.

அவரைக்காய் - நெல்லிக்காய் - கொய்யாக்காய்.... என்று சொல்கிறாய் அது எல்லாம் சரி.....

பூசணிக்காய் ஏன் பந்து மாதிரி இருக்கிறது...? புடலங்காய் ஏன் பாம்பு மாதிரி இருக்கிறது....? இப்படி எல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டான். முழிச்சுப் போயிட்டேன்! தெரிந்ததை சொல்லலாம்... தெரியாததை எப்படி சொல்ல முடியும்! ஆனைக்கு அர்றம்னா குதிரைக்கு குர்றம்மா?

ஏன் சே சர்... நீங்களே சொல்லுங்கள்! உருளைக் கிழங்கு போண்டா என்றா உள்ளே உருளைக் கிழங்கு இருக்கும்! அதுக்காக மைசூர் போண்டா என்றால்... உள்ளே மைசூரா இருக்கும்'

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பொன் மொழிகள்

* மாமரம் வெட்டிய இடத்தில் தளைக்கிறது முருங்கையில் வெட்டி எறிந்த துண்டுகூட தழைக்கிறது; அழிவை எதிர்க்கும் ஆவேசத்தை மரங்களிடம் இருந்து படியுங்கள்.
* பெண்களுக்கு ஒன்று சொல்கிறேன் நீங்கள் சில விடயங்களுக்கு அடிமைகளாக இருக்கும் வரையில் உங்களை அடிமைகளாக வைத்திருப்பார்கள். அவற்றிலிருந்து நீங்கள் வெளியேறி விட்டால் ஆண்களால் உங்களை அடிமைப்படுத்த முடியாது.
* முடியாது என்று சிலந்திகூட ஒதுங்குவதில்லை. முதுகெலும்புள்ள மனிதன் ஒதுங்கலாமா?
* கற்றுத் தரமாட்டார்கள்... நீங்களாகக் கற்றுக்கொள்ளுங்கள்! பிறர் கற்றுத் தந்தால் என்ன? என்கின்ற எதிர்பார்ப்பு சார்பு மனப்பான்மையை உருவாக்குகிறது, உங்கள் செயல்திறனை சிந்தனை சக்தியைக் குறைக்கிறது!
* அதிக விடயங்கள் அறிந்த மனிதர் தன் முக்கியத்துவத்தை ஒரு போதும்இழக்க முடியாது. ஈடுபாடு ஆழமானால் மேம்பாடு காத்திருக்கிறது.
* நமது மத நூல்களில் சொல்லப்பட்ட சில விடயங்கள் மறு பரிசீலனைக்குரியவை. தவறானவை... என்கிற தெளிவு ஒவ்வொரு மதத்தவனுக்கும் ஏற்பட்டு விட்டால் பூமியில் இரத்தம் பாயாது! யுத்தம் நேராது!
* தன்னம்பிக்கையோடு இரு. அது தளரும் போது தட்டிக் கொடுத்து முறுக்கேற்றும் நண்பர்களைப் பெறு... அதற்கும் வழியில்லையா? இறை நம்பிக்கையைப் பயன்படுத்து.
* எவ்வளவு பெரிய பலசாலியும் தனக்கேற்ற குழுவுடன் இணைகிற போதுதான் அதி உயர்வான வெற்றியை பெறுகிறான்!
* திறமை சாலிகள் தோற்பதில்லை; அவர்களைப் பிறர் தோற்கடிக்க முடிவதில்லை.
* அடிமையாக ஆசைப்படும் மக்கள் நிலைமை ஆபத்தமானது! அடிமையாக்க ஆசைப்படும் சுயநலத் தலைமை ஆபத்தானது! சுய மரியாமையுடன் வாழுங்கள் கௌரவம் நிச்சயம்.. கௌரவமான வெற்றி சர்வநிச்சயம்!

தொகுப்பு: பு.கட்ரிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடர் ஒளி புலமைச்சுடர் நாடு முழுவதும் நடத்தும்
## தரம் 5 புலமைப்பரிசில் இறுதி கருத்தரங்குத் தொடர் - 2010

**சுடர் ஒளி பத்திரிகை நாடு முழுவதும் உள்ள தமிழ் மாணவர்களின் நலன் கருதி ஏற்பாடு செய்துள்ள 10 நாள் கருத்தரங்கு தொடர்கள்.**

*தேசிய ரீதியில் புகழ்பெற்ற சுடர் ஒளி புலமைச்சுடர் வளவாளர்களின் கருத்தரங்குச் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு!*

காலம்:
09.08.2010 தொடக்கம்
19.08.2010 வரை

நமக்கு நாமே முன்னோடிகள்

# கருத்தரங்குப் படிமுறைகள்

✱ படிமுறை 01

09.08.2010 தொடக்கம் 19.08.2010 வரை நாள்தோறும் "உதயன்" நாழிதழுடன் மாவட்ட ரீதியாகப் புகழ்பெற்ற ஆசிரியர்களின் இறுதி எதிர்பார்ப்பு மாதிரி வினாத்தாள்கள் I, II வெளிவரும்.

✱ படிமுறை 02

மாணவர்கள். இவ் வினாத்தாள்களை அன்றைய தினம் பகுதி ஒன்றை 45 நிமிடங்களிலும், பகுதி இரண்டை 1 மணி 15 நிமிடங்களிலும் சுயமாகச் செய்துபார்க்க வேண்டும்.

✱ படிமுறை 03

முன்னைய தினம் வெளிவந்த வினாத்தாள்களுக்கு விடைகளும், விடைகாணும் விளக்கக் குறிப்புக்களும், புள்ளிகளும் மிக விவரமாக மறுநாள் பத்திரிகையில் வெளிவரும்.

✱ படிமுறை 04

மறுதினம் வெளிவரும் விடைக்குறிப்புக்களுடன் மாணவர்களின் விடைகளை ஒப்பீடு செய்து பெற்றோர் மற்றும் மூத்தவர்கள் அவற்றைத் திருத்தி புள்ளியிட்டுக் கொள்ளவேண்டும்.

✱ படிமுறை 05

மாணவர்கள் மற்றும் பெற்றோர் வினாக்கள் தொடர்பான விடைகளைக் கணிப்பிடுவதில் ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் அவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும்.

✱ படிமுறை 06

குறித்த சந்தேகங்களை விடைகுறிப்பு வெளிவந்த தினத்தில் இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை உரிய ஆசிரியருடன் தொலைபேசி மூலம் கலந்துரையாடி தெளிவுபெற்றுக்கொள்ளலாம்.

✱ இறுதிப்படிமுறை

மாணவர்கள் 09.08.2010 முதல் 19.08.2010 வரை சுடர் ஒளி பத்திரிகையைப் பெற்று மேற்படி படிமுறைகளை ஒழுங்காக மேற்கொண்டு ஒவ்வொரு பிரபல ஆசிரியரின் கருத்தரங்குச் சேவையையும் ஆலோசனைகளையும் வீட்டில் இருந்தவாறே பெற்றுப் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

# கருத்தரங்கு வினாத்தாள்கள் தொடர்பான விவரங்கள்



**திரு.யு.எல்.எம்.சாஜித்**
அம்பாறை மாவட்ட சிரேஷ்ட முன்னணி ஆசிரியர்
வெளிவரும் திகதி 09.08.2010



**திரு.எஸ்.தீபன்.**
வவுனியா மாவட்ட முன்னணி ஆசிரியர்
வெளிவரும் திகதி 10.08.2010



**திரு.ஐ.சம்சுதீன்**
அம்பாறை மாவட்ட பிரபல ஆசிரியர்
வெளிவரும் திகதி 11.08.2010



**புன்னியாமீன்,**
**மஸீதா. புன்னியாமீன்**
இலங்கையின் மூத்த முன்னணி இணை ஆசிரியர்கள், கண்டி
வெளிவரும் திகதி 12.08.2010





**திரு.எஸ்.தயாளலிங்கம்**
**திரு.பி.பத்மநேசன்**
திருமலை மாவட்ட முன்னணி இணை ஆசிரியர்கள்
வெளிவரும் திகதி 13.08.2010





**திரு.ஏ.சந்திரபவன்**
புலமைப்புலரி ஆசிரியர், கொழும்பு
வெளிவரும் திகதி 14.08.2010



**திரு.சண்.சுதர்ஷன்**
குறிஞ்சி வெளியீட்டு ஆசிரியர்
கண்டி
வெளிவரும் திகதி 16.08.2010



**திரு.எம்.சந்திரகுமார்**
ஜனாதிபதி விருது பெற்ற ஆசிரியரும்
பிரபல புத்தக எழுத்தாளரும், மட்டக்களப்பு
வெளிவரும் திகதி 17.08.2010



**திரு.வே.அன்பழகன்**
யாழ் மாவட்ட முன்னணி ஆசிரியர்
வெளிவரும் திகதி 18.08.2010



**திரு.பி.அம்பிகைபாகன்**
இலங்கையின் மூத்த முன்னணி ஆசிரியர்
கொழும்பு
வெளிவரும் திகதி 19.08.2010

பெற்றோர்களே, மாணவர்களே!

வரையறுக்கப்பட்ட பிரதிகள் மட்டுமே அச்சிடப்பட இருப்பதால் உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள "உதயன்" விற்பனை முகவரிடம் இன்றே முற்பதிவு செய்துகொள்வதன் மூலம் உங்களுக்குப் பிரதிகள் கிடைப்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
புலமைச்சுடர் ஆசிரியர் - சுடர் ஒளி, 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14
தொலைபேசி இலக்கங்கள் - புலமைச்சுடர் ஆசிரியர்பீடம்: 0115738855/ 071-4273035
யாழ் விநியோகப்பிரிவு: 0215677222 கொழும்பு விநியோகப் பிரிவு: 0115737599,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் - 03 பகுதி - I

* பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. ''சர்வதேச முதியோர் தினம்'' கொண்டாடப்படுவது,
1) ஜூன் 01. 2) டிசம்பர் 11.
3) ஒக்டோபர் 01. 4) செப்டெம்பர் 16.

02. குடித்தொகை 7 பில்லியன் ஆவது,
1) 2015 இல். 2) 2025 இல். 3) 2035 இல். 4) 2050 இல்.

03. ஒரு நாட்டின் உள்ளேயே முழுமையாக அமையப்பெற்ற நாடுகள்,
1) சன்மரினோ, லெசோத்தோ.
2) கொசோவா, சுவாசிலாந்து.
3) வத்திக்கான், கம்பியா. 4) அன்டோரா, காசா.

04. தென்கிழக்காசியாவின் இரு எண்ணெய்வள நாடுகள்,
1) தாய்லாந்து, பிலிப்பைன்ஸ். 2) இந்தோனேசியா, மலேசியா.
3) தாய்லாந்து, மியன்மார். 4) இந்தோனேசியா, புரூனி.

05. ''சென்ரோ'' என்பது,
1) லண்டன் நகரின் மையப்பகுதி.
2) புவனஸ்அயர் நகரின் மத்திய பகுதி.
3) சென்னை நகரின் சேரிகள்.
4) ஸ்ரேலின் கருமையக் குடியிருப்பு.

06. படத்தில் காட்டப்பட்டுள்ள வலயத்தில் முக்கியம் பெறும் கைத்தொழில்,



1) இலத்திரனியல் தொழில்.
2) மோட்டார் வண்டித் தொழில்.
3) இரும்புருக்குத் தொழில்.
4) பருத்தி நெசவுத் தொழில்.

07. அரேபியாவின் ''பட்வின்'' இனத்தவரின் குடியிருப்புப் பாங்கு,
1) வட்டவடிவக் குடியிருப்பு.
2) கொத்தணிவடிவக் குடியிருப்பு.
3) நேர்கோட்டு வடிவக் குடியிருப்பு. 4) குழுமிய குடியிருப்பு.

08. உலகிலே தகர உற்பத்திக்குப் பெயர்போன நாடுகள்,
1) பிரேசில், மெக்சிக்கோ. 2) இந்தியா, மடகஸ்கார்.
3) தென் ஆபிரிக்கா, மொறோக்கோ.
4) மலேசியா, பொலிவியா.

09. இந்தியாவில் இறுதியாக உருவான புதிய மாநிலம்,
1) ஜார்க்கண்ட். 2) உத்தராஞ்சல்.
3) சதீஸ்கார். 4) மிஜோம்.

10. தற்காலத்தில் அணுமின்சக்தி உற்பத்தியில் முதன்மைபெறும் நாடுகள்,
1) ஐக்கிய அமெரிக்கா, உக்ரேன், ஈரான், வடகொரியா.
2) ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி.
3) ரஷ்யா, ஜப்பான், சீனா, ஈரான்.
4) ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரேசில்.

11. $G_5$ நாடுகளின் அமைப்பு உருவாக்கப்பட்ட ஆண்டு,
1) 2006. 2) 2007. 3) 2008. 4) 2009.

12. தென்னரைக் கோளத்தில் பாற்பண்ணை வியாபாரத்தில் சிறந்து விளங்கும் இரு நாடுகள்,
1) டென்மார்க், நியூசிலாந்து. 2) ஆஜென்ரீனா, இந்தியா.
3) அவுஸ்திரேலியா, நியூசிலாந்து.
4) அவுஸ்திரேலியா, நெதர்லாந்து.

13. ''அயினுஸ்'' என்போர்,
1) அவுஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள்.
2) பிரேசிலின் மலைவாழ் குடிகள்.
3) ஜப்பானில் வாழும் ஆதிவாசிகள்.
4) ஆபிரிக்காவின் நாடோடி மந்தைமேய்ப்போர்.

14. படத்தில் நிழற்றிக் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் செய்கை பண்ணப்படும் பிரதான பயிர்கள்,




1) A - நெல், B - சணல்.
2) A - கோதுமை, B - செம்பனை.
3) A - இறப்பர், B - கரும்பு.
4) A - தேயிலை, B - பருத்தி.

15. கொழும்பு - வெல்லவாயவை இணைக்கும் நெடுஞ்சாலை,
1) $A_2$ 2) $A_4$ 3) A.Sp.1 4) $A_{14}$

16. 2011 இல் இலங்கையில் நடைபெறவுள்ள குடிக்கணிப்பு,
1) 13ஆவது குடிக்கணிப்பு. 2) 14ஆவது குடிக்கணிப்பு.
3) 15ஆவது குடிக்கணிப்பு. 4) 16ஆவது குடிக்கணிப்பு.

17. உலகின் மூன்று பிரதான இரும்புத்தாது உற்பத்தி மையங்கள்,
1) சிங்பும், மெசாபி, க்றிவொய்ரொக்.
2) டுலுத், மெனோமினி, மயூர்மாந்.
3) டொன்பாஸ், குஸ்பாஸ், அசன்சோல்ஸ்.
4) அஹமெட்பாட்-பரோடா, கறஜாஸ், கிருணா.

18. தற்காலத்தில் இலங்கை அதிகளவில் தைக்கப்பட்ட ஆடைகளை ஏற்றுமதி செய்யும் நாடு,
1) ஐரோப்பிய ஒன்றிய நாடுகள். 2) ஜப்பான்.
3) இந்தியா. 4) ஐக்கிய அமெரிக்கா.

19. சிறு தெங்கு முக்கோண வலயத்தை இணைக்கும் பகுதிகள்,
1) கொழும்பு, குருநாகல், சிலாபம்.
2) அநுராதபுரம், பொலநறுவை, கண்டி.
3) தங்காலை, மிரிஸ்ஸ, கிரிந்த.
4) மித்தெனியா, தங்காலை, நன்ன.

20. தெற்குப் பொதுச்சந்தை அமைப்பின் அங்கத்துவ நாடுகள்,
1) தென்னாபிரிக்கா, சிம்பாப்வே, சாம்பியா, மடகஸ்கார்.
2) ஆஜென்ரீனா, பரகுவே, உருகுவே, பிரேசில்.
3) பெல்ஜியம், லக்சம்பேக், நெதர்லாந்து.
4) மாலைதீவுகள், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிலி.

21. ''கமநெகும'', ''மகநெகும'' போன்ற திட்டங்கள்,
1) வறுமை ஒழிப்பு, கிராமிய அபிவிருத்தி தொடர்பானது.
2) சிறு கைத்தொழில் ஊக்குவிப்புக்கள் தொடர்பானது.
3) விவசாய அபிவிருத்தி தொடர்பானது.
4) குடிவரவு-குடியகல்வு தொடர்பானது.

22. மானிட அபிவிருத்திக் குறிகாட்டியின் மூலக்கூறுகள்,
1) வயதுவந்தோர் எழுத்தறிவு வீதம், சிசுமரண வீதம், பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு.
2) தலாவருமானம், மனித சுதந்திரச் சுட்டி, எழுத்தறிவு வீதம்.
3) சிசுமரண வீதம், மனித சுதந்திரச் சுட்டி, தலா வருமானம்.
4) கொள்வனவு சக்தி, பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு, எழுத்தறிவு வீதம்.

23. சேதுக் கால்வாய்த் திட்டத்தினால் அதிகம் பயனடையவுள்ள இந்தியத் துறைமுகம்,
1) தூத்துக்குடி. 2) சென்னை.
3) நாகபட்டினம். 4) கொல்கொத்தா.

24. வடகடல் மீன்பண்ணையில் அமைந்துள்ள கடலடித்தள மேடை,
1) கிராண்ட்பாங். 2) டொக்கர்பாங்.
3) சென்பியரிபாங். 4) வோர்ஜ்.

25. இலங்கையின் மூன்றாவது சர்வதேச விமானநிலையம் அமைக்கப்படவுள்ள இடம்,
1) வீரவெல. 2) திஸ்ஸமகாராம.
3) ஹிங்குராங்கொட. 4) இரணைமடு.

26. மகாவலித் திட்டத்தில் அதிகளவில் நெல் விளைவிக்கப்படும் பிரிவு,
1) C பிரிவு. 2) L பிரிவு. 3) G பிரிவு. 4) H பிரிவு.

27. படத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ள கைத்தொழில் மையங்கள் A, B, C என்பவை முறையே,




1) A - ஹிரோசிமா, B - கோபே, C - கியோட்டா.
2) A - ஹிரோசிமா, B - ஒசாகா, C - கியோட்டா.
3) A - கோபே, B - ஒசாகா, C - நாகோயா.
4) A - கோபே, B - ஒகயாமா, C - டொட்டொரி.

28. பின்வருவனவற்றில் மத்தியதரைப் பயிர்ச்செய்கை நடைபெறும் பகுதிகள்,
1) கலிபோர்னியா, சிலி, தென்னாபிரிக்கா.
2) அவுஸ்திரேலியா, இத்தாலி, கயானா.
3) தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, போலந்து.
4) சிலி, கலிபோர்னியா, மெக்சிக்கோ.

29. ''கொத்மலை'' தரைக்கீழ் நீர்மின் திட்டத்திற்கு உதவி வழங்கிய நாடு,
1) பிரித்தானியா. 2) ஜேர்மனி.
3) சுவீடன். 4) சீனா.

30. 2010 இல் 16ஆவது சார்க் உச்சி மாநாடு நடைபெற்ற இடம்,
1) இஸ்லாமாபாத். 2) காத்மண்டு.
3) டாக்கா. 4) திம்பு.

31. ''தங்கொட்டுவ'' கைத்தொழிற் பூங்கா அமைந்துள்ள மாவட்டம்,
1) புத்தளம். 2) கம்பஹா.
3) மாத்தளை. 4) அம்பாந்தோட்டை.

32. படத்தில் காட்டப்படும் துறைமுகங்கள் A, B, C என்பன,




1) A - பேர்த், B - சிட்னி, C - அடிலெயிட்.
2) A - பிரிமண்டில், B - டவுன்ஸ்வில், C - மெல்போர்ன்.
3) A - பேர்த், B - பிரிஸ்பேன், C - அடிலெயிட்.
4) A - பிரிமண்டில், B - மெல்போர்ன், C - சிட்னி.

33. ''ரான்ஸ்வால்ஸ்'' சிறப்புப்பெறுவது,
1) இரும்புத் தாதிற்கு. 2) நிலக்கரிக்கு.
3) தங்கத்திற்கு. 4) பெற்றோலியத்திற்கு.

34. இலங்கையில் தற்பொழுது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகளவு நிதி ஒதுக்கப்படும் துறை,
1) கல்வி. 2) பாதுகாப்பு.
3) மருத்துவ - சுகாதாரம். 4) போக்குவரத்து.

35. 2009 இல் இலங்கை அதிகளவில் இறக்குமதிகளை மேற்கொண்ட நாடுகள்,
1) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான், ரஷ்யா.
2) சவுதி அரேபியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா.
3) ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து.
4) இந்தியா, சிங்கப்பூர், சீனா, ஈரான்.

36. இலங்கையில் குடும்பத் திட்டமிடல் சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு,
1) 1955 2) 1953 3) 1963 4) 1965

37. ஆபிரிக்காவில் அதிக சனத்தொகையைக் கொண்டுள்ள நகரங்கள்,
1) கெய்ரோ, லாகோஸ், கின்சாசா.
2) கெய்ரோ, அடிஸ் அபாபா, நைரோபி.
3) லாகோஸ், நைரோபி, கெய்ரோ.
4) லாகோஸ், கேப்ரவுண், கின்சாசா.

38. இலங்கையில் சிறு ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையம், தாழ்நிலத் தேயிலை ஆராய்ச்சி நிலையம் என்பன அமைந்துள்ள இடங்கள் முறையே,
1) குண்டசாலை, தலவாக்கலை. 2) மாத்தளை, கல்கம்பொல.
3) அகலவத்தை, லுணுவில. 4) டின்பீல்ட், பல்லேகல.

39. வடக்கின் வசந்தம் (உத்துரு வசந்தய) திட்டத்தில் தற்போது வடமாகாண புனரமைப்பு, அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட காலப்பகுதி,
1) 2010 - 2015. 2) 2010-2012.
3) 2009 - 2012. 4) 2009 - 2015.

40. ஐ.நா அமைப்பு எந்த ஆண்டினை ''மக்கள் தொகை வருடம்'' எனப் பிரகடனம் செய்தது?
1) 1974 2) 1964 3) 1954 4) 1946

(மிகுதி நாளை)

ஆசிரியர்: திரு.M.செல்வா, B.A.(Hons) Geo.Spl, பரம்பரனம். NEC கல்வி நிலையம் (யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

### தருபவர்: வித்யா

**மேடம்**



பெரிய அளவில் சிரமத்தைக் கொடுக்கும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடியும். தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். தொழில் ரீதியாக புதியவர்கள் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உங்களுக்கு பிடித்த ஒன்று மற்றவர்களுக்கு பிடிக்காமல் போகலாம்.

**இடபம்**



எதிலும் மற்றவர்களுக்கு நாணயம், நம்பிக்கை ஏற்படும் வகையில் செயற்படுவீர்கள். வியாபாரிகள் பழைய வாடிக்கையாளர்கள் மூலம் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரிக்கும். கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரும்.

**மிதுனம்**



நினைத்ததைச் சாதித்து நிம்மதி பெறும் நாள். சொந்த, பந்தங்கள் தொடர்பான விசேட நிகழ்ச்சிகளுக்காக ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நீங்கள் செய்த உதவிக்கு ஒருவர் பதில் உதவி செய்யலாம். நீண்ட நாள்களாக உங்களை குழப்பக் கொண்டிருந்த பிரச்சினை ஒன்று முடிவுக்கு வரும்.

**கடகம்**



சிலர் உங்களிடம் பேச்சுக்கொடுத்து இரகசியங்களைப் பெற முற்படுவர். வருமானத்தை அதிகரிக்க வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். நீண்ட நாள் நண்பர் ஒருவரை வெளியில் செல்லும்போது சந்திக்கலாம். திட்டமிட்ட வேலை ஒன்றை சோம்பலால் மாற்றி அமைப்பீர்கள். மருத்துவச் செலவுகள் நேரலாம்.

**சிங்கம்**



இறைவழிபாட்டின் மூலம் இன்னல்களைக் குறைக்க வேண்டிய நாள். கிடைக்கும் நேரத்தை வீணடித்துவிட்டு பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு பறரின் தொல்லைகளுக்கு ஆள்படலாம். நினைத்த காரியங்கள் நடப்பது தள்ளிப் போகலாம். செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி**



புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம். சக ஊழியர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட செயல்களில் வெற்றி கிடைக்கும். கடிதங்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம். உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**துலாம்**



பெரிய மனிதர் ஒருவரை திடீரென சந்திக்கலாம். தொல்லை கொடுத்தவர்கள் வேறு இடங்களுக்குச் செல்வர். அயலார் ஆதாயம் பெறும் காரியம் ஒன்றைச் செய்வீர்கள். தேக ஆரோக்கியத்திற்காக சிறு தொகையைச் செலவு செய்வீர்கள். தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும் நாள். உற்சாகமாகச் செயற்படும் நாள்

**விருச்சிகம்**



குடும்பப் பெரியவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கொடுக்கல், வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். உங்களின் யோசனைகளுக்கு நண்பர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். உங்களின் பலவீனத்தை சிலர் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**தனுசு**



சுபச் செய்திகள் வீடு தேடி வரும் நாள். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். உறவினர்கள் வழியில் கசப்பான அனுபவங்களைச் சந்திக்கலாம். பொதுவாழ்வில் உள்ளோர் அல்லது அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**மகரம்**



பொழுதுபோக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். பொறுமையாகச் செயற்பட்டு எந்த விடயத்திலும் சாதனை படைப்பீர்கள். மாலை நேரத்தில் சிறிய அளவில் பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்கு பிடித்தமான ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றைக் குறைந்த விலைக்கு வாங்கலாம்.

**கும்பம்**



கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள். தொழில் ரீதியாக சிறு நெருக்கடிகளைச் சந்திக்கலாம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்குவர். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பயணங்கள் பலன் தரும் விதத்தில் அமையும்.

**மீனம்**



உள்ளம் மகிழும் செய்தியை தொலைபேசி வழியில் கேட்கலாம். பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். திடீர் செல்வுகள் இருந்தாலும் அதைச் சமாளிக்க புதிய வரவுகள் வந்து சேரும். மனைவி அல்லது பெண்கள் வழியில் இனிமையான அனுபவங்களைப் பெறலாம். அனுகூலமான நாள்.

---


## பனை அபிவிருத்திச் சபையின் 32 ஆவது ஆண்டு விழாவும் சபையின் முதலாவது தலைவர் அமரர் கே.சி.நித்தியானந்தா அவர்களின் நினைவு விழாவும்

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் அவர்களின் தலைமையில் பனை அபிவிருத்திச் சபையின் 32ஆவது ஆண்டு விழாவும் சபையின் முதலாவது தலைவர் அமரர் கே.சி.நித்தியானந்தா அவர்களின் நினைவு விழாவும் 07.08.2010 ஆம் திகதி சனிக்கிழமை பனை, தென்னை வள அபிவிருத்திச் கூட்டுறவுச் சமாசத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. இதன் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கலந்துகொள்வார்கள். இவ்வைபவத்திற்கு சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(சி/569635)

## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி நகரத்தில் கடைகளுக்கு முன்பாக வியாபாரப் பொருள்களைக் (குறிப்பாக அஸ்பெஸ்ரஸ் சீற், கம்பி போன்றவை) வீதியோரங்களில் வைக்கப்பட்டுள்ளன. இவை பாதசாரிகளுக்கு மிகவும் அசௌகரியமாக இருப்பதுடன் விபத்துகளும் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அத்துடன் அயற்கடை உரிமையாளர்களுக்கும் அசௌகரியங்கள் ஏற்படுத்துவதாக எமக்கு முறையீடுகள் செய்யப்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் எதிர்வரும் 10.08.2010 இற்குள் பொருள்களை அகற்றவேண்டுமென தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

பொன். நித்தியானந்தன்,
சிறப்பு ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி/569638)


## சுவரொட்டிகள் ஒட்ட விசேட பலகைகள்

கொழும்பு,ஒக.4

கொழும்பு மாநகருக்குள் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு விசேட பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன என்று கொழும்பு மாநகர சபையின் விசேட ஆணையாளர் ஓமர் காமிர் தெரிவித்தார்.

சுமார் 100 விசேட பலகைகள் இதற்காக பொருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுவர்களிலும், மின்கம்பங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறான சுவரொட்டிகள் விசேட பலகைகளில் மாத்திரம் ஒட்டப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 3 வாரங்களின் பின்னர் இந்தப் புதிய திட்டத்தைப் பின்பற்றத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (சி)


**வீடு விற்பனைக்குண்டு**

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொ.பே. 0776146434

**புறொயிலர் விற்பனைக்கு**

உடன்சுத்தம் செய்யப்படும் புறொயிலர் கோழி கிலோ 480/= மட்டும். திங்கள் புதன், சனி, ஞாயிறு 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

குமரன் பாம்,
227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

**நல்லெண்ணெய் விற்பனைக்குண்டு**

தரமான T.R.C. நல்லெண்ணெய் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு ஒரு போத்தல் 300/=
தொடர்புகளுக்கு: ஆஷா பாம்சி
பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0214922408, 0776537645

**கணனி விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள P-4 Computers Full set மற்றும் கணனிப் பொருள்கள் என்பன உத்தரவாதத்துடன் உடன் விற்பனைக்குண்டு. (விலை 14750/- மட்டும்)
தொடர்பு: Sky Computer system,
162, Main street, Jaffna.
T.P. 0212221417

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, விதானையார் வீதியில் வைரவர் கோயிலுக்கு அண்மையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவை இல்லை)
T.P.- 0718561208 (101410)




உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 669 திகதி 02-08-2010

வெற்றி எண்கள்

04 24 39 47 B (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 29,705,470/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 29,705,470/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 424 | 1,000/= | 424,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 659 | 1,000/= | 659,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16955 | 60/= | 1,017,300/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8100 | 40/= | 324,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 199810 | 20/= | 3,996,200/= |
| | | மொத்தம் ரூ. | 7,252,500/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 600256104-5-35 |
| நுவரேலியா | 600252906-0-30 |
| மாத்தளை | 600244932-6-36 |
| கொழும்பு | 600248477-3-13 |
| குருநாகல் | 600241102-2-12 |
| புத்தளம் | 600252450-7-37 |
| அம்பாந்தோட்டை | 600248108-7-37 |
| மொணராகலை | 600243945-9-19 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,652,500/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 30,246,820/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2010 ஒகஸ்ட் 05 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கணித மேதை சிறீநிவாசன் ராமானுஜன் 17 வயதிலேயே அரும்பெரும் சாதனை புரிந்தவர்



1913 ஆம் ஆண்டு சென்னை தபால்தலை முத்திரையிடப்பட்ட கடிதம் ஒன்று கேம்பிரிஜ் பல்லைக்கழகத்தின் பிரபல்யமான கணிதவியல் பேராசிரியர் ஜி.எச்.ஹார்டிக்கு வந்து சேர்ந்தது. கடிதத்தில் கணிதம் தொடர்பான சில தேற்றங்களும் சூத்திரங்களும் காணப்பட்டன. இவை தொடர்பாக எழுதப்பட்டிருந்த வாசகத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. ''கனம் ஐயா! சென்னை தபாலகத்தில் வருடம் 20 பவுண் சம்பளத்தில் பணிபுரியும் ஒரு எழுதுநர் நான் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இப்பொழுது அநேகமாக 23 வயதாகின்றது. எனக்கு பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பாடசாலையை விட்டு விலகியதன் பின்னர் எனது ஒய்வு நேரங்களை கணிதத்துறையில் பயன்படுத்தி வருகிறேன். புதிய வழியொன்றை நான் தேடி நிற்கின்றேன்....'' என்று எழுதப்பட்டிருந்தது. இவ்வாறான கடிதங்கள் பேராசிரியர் ஹார்டிக்கு வழக்கமாகவே வந்து சேர்வதுண்டு. ஆனால் இந்தக் கடிதத்தில் காணப்பட்ட கணிதத் தேற்றத்தில் ஏதோ முக்கியத்துவம் - குறிப்பிடதக்க அம்சம் காணப்பட்டது. '' அது கடினத்தன்மையாகவிருந்தாலும் கருத்தைக் கவர்வதாய் இருந்தது'' என்று பின்னர் ஹாட்டி கூறியிருந்தார்.

முன்பின் தெரியாத இந்த இந்திய இளைஞரை இங்கிலாந்துக்கு வருமாறு அழைப்பதென அவர் தீர்மானித்தார்.

இந்த வகையில் தான் சிறிநிவாசன் ராமானுஜன் பேராசிரியர் ஹார்டியுடன் இணைந்து இங்கிலாந்தில் பணியாற்றினார்.

இதன் பின்னர் முன்பு எந்தக் காலத்திலும் இல்லாத வகையிலான கணித மேதையாக ராமானுஜன் வெளிப்படலானார்.

ராமானுஜன் பொதுவில் தனக்குத்தானே கற்பித்துக் கொண்டவர். குழந்தை மேதையாகத் திகழ்ந்தவர். 1914-1918 ஆம் ஆண்டு காலத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அவர் இருந்த காலத்தில் 3000 கணிதத் தேற்றங்களை உருவாக்கியுள்ளார். பேராசிரியர் ஜி.எச்.ஹார்டி, ஜே.ஈ.லிட்டில்வூட் ஆகிய மேதைகளின் மேற்பார்வையில் அவர் இவைகளைப் படைத்தார். ''தனது திறமைகளுக்கு தனது குடும்பமும் குலதெய்வமான நாமகிரி அம்பாளுமே காரணம் என்று அவர் கூறிக்கொள்வார். ஒரு கணித சமன்பாடு காணப்படும்போது அவ்விடத்தில் தெய்வத்தின் எண்ணம் ஏற்படாது போகுமானால் அதில் எதுவித அர்த்தமுமே இல்லாது போகும்'' என்பார்.

ராமானுஜனின் வரலாற்றை எழுதிய றொமேர்ட் கானிகன் கடவுளை அறிந்த மனிதர் என்று ராமானுஜனை வர்ணிக்கிறார்.

1887ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி ராமானுஜன் தமிழ்நாட்டில் ஈரோட்டில் உள்ள தனது பாட்டனார் வீட்டில் பிறந்தார். அவர் ஒரு வயதாய் இருக்கும்போது அவரது தாயார் தமது கணவர் வேலைபார்த்த ஊரான கும்பகோணத்துக்கு அவரைக் கொண்டு சென்றார். அங்கிருந்து உயர் நிலைப் பள்ளியில் 1898 இல் சேர்ந்து படித்தார். அங்கு கல்வி சார் விருதுகள் பலவற்றை எல்லாவித பாடங்களுக்கும் வென்றெடுத்தார். 1900 ஆண்டளவில் கணிதத்துறையில் அவரது கவனம் செல்லலாயிற்று. அதனால் ஏனைய பாடங்களில் அக்கறை இல்லாமல் போய்விட்டது. இதனால் உயர் நிலைப் பள்ளியின் தேர்வு பரீட்சையில் தோல்வியுற்றார். பரீட்சையில் தோற்றாலும் கணிதத்துறையில் அவர் மேலும் மேலும் முன்னேறினார். பலவற்றைக் கண்டு பிடித்தார். தானே முயன்று புதிய கணித முறைகளை நிறுவினார். இதனால் வரலாற்றில்இதுவரை தோன்றியுள்ள மிக மிக உயர்ந்த தனித்துவமான எண் கணித மேதைகளில் ஒருவர் என்ற புகழை எட்டினார். ராமானுஜனின் கண்டுபிடிப்புக்களில் சிலவற்றை அவைகளின் தத்துவங்கள், தேற்றங்களின் ஆழத்தை இன்னமும் பலர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று கூறப்படுகின்றது. 17 வயதாகும்போது பல புதிய கண்டுபிடிப்புக்களை அவர் சாதித்திருந்தார்.

## வேலை தேடும் படலம் ஆரம்பம்

ராமானுஜனின் தகுதியைப் புரிந்து கொள்ளாத அவரது தாயார் 10 வயதான ஒரு சிறுமியை அவருக்கு மணமுடித்து வைத்தார். திருமணத்தின் பின்னர் ராமானுஜன் தொழில் தேட ஆரம்பித்தார். புதிய பொறுப்புக்கள் தொழில் செய்யவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருந்தன. கணிதக் குறிப்புப் புத்தகங்களுடன் மதறாஸ் (இன்று சென்னை) நகரைச் சுற்றி வரலானார். 1912 ஆம் ஆண்டளவில் சென்னை கணக்காளர் நாயகம் காரியாலயத்தில் ஒரு தொழில் கிடைத்தது. ஒரு நண்பர் இங்கிலாந்திலுள்ள அறிஞர்களுடன் தொடர்பு கொள்ளும் படி ஆலோசனை கூறினார். அதன் மீது கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் இருந்த எச்.எம்.பேக்கர், ஈ.டபிள்யூ. ஹொட்சன் மற்றும் ஜி.எச்.ஹார்டி போன்ற அறிஞர்களுக்கு கடிதம் எழுதினார். அவர்களில் ஹார்டி ராமானுஜனின் கண்டுபிடிப்புக்களில் ஆர்வம் கொண்டார். ஹார்டியிடமிருந்து வந்த கடிதம் ராமானுஜனுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. '' உங்களில் ஒரு நண்பரை நான் இனம் கண்டு கொண்டுள்ளேன். எனது உழைப்பினை பரிவோடு நீங்கள் கவனித்திருக்கிறீர்கள். நான் ஏற்கனவே அரைவாசி பட்டினி கிடக்கும் மனிதன். எனது மூளையைப் பாதுக்காத்துக் கொள்ள எனக்கு உணவு தேவை. அதுவே எனது முதல் அக்கறையாகவிருக்கிறது. உங்களிடமிருந்து கிடைக்கும் எந்தவொரு அனுதாபக் கடிதமும் புலமைப் பரிசு ஒன்றை பெற்றுக் கொள்ள உதவியாகவிருக்கும்'' என்று ராமானுஜன் பதில் எழுதியிருந்தார்.

## கேம்பிரிஜ்ஜுக்கு அழைப்பு

1914 ஆம் ஆண்டு ராமானுஜனை கேம்பிரிஜ்ஜுக்கு வரும்படியாக ஹார்டி எழுதினார்.

பின்னர் ராமானுஜன் பற்றி பேராசிரியர் குறிப்பிட்ட போது, தாம் கணிதத்துறைக்கு செய்துள்ள மிகப் பெரிய பங்களிப்பு என்னவென்றால் ராமானுஜனைக் கண்டு பிடித்ததுதான் என்று தெரிவித்துள்ளார். இயுளர் (Euler) போன்ற கணித மேதைகளுக்கு ராமானுஜனை அவர் ஒப்பிட்டுள்ளார்.


கேப்பிரிஜ்ஜுன் தத்துவஞான சங்கத்தின் உறுப்பினராக 1918 ஆம் ஆண்டு 18 ஆம் திகதி ராமானுஜன் தெரிவு செய்யப்பட்டார். மூன்று நாள்களின் பின்னர் றோயல் சொசைட்டியின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1918 ஆம் ஆண்டு 10ஆம் திகதி கேம்பிரிஜ் ட்ரினிட்டி கல்லூரியின் வருகை விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

ராமானுஜன் மாபெரும் கணித மேதையாகவிருந்த போதிலும் வாழ்க்கை முழுவதும் உடல் நிலை பாதிக்கப்பட்டவராய் இருந்துள்ளார். இது இங்கிலாந்திலிருக்கும் போது மோசமடைந்தது. அதனால் நாடு திரும்ப விரும்பினார். இங்கிலாந்தில் இருந்த போது பெரும்பாலும் 30 மணிநேரம் கணிதக் குறிப்புக்களை எழுதுவார். பிறகு 20 மணிநேரம் உறங்குவாராம். பிராமண சம்பிரதாயங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றிய அவர் தமது உணவை தாமே சமைத்துக் கொள்வார். மரக்கறி உணவையே உண்பார்.

ராமானுஜன் உடல் நிலை மோசமடைந்தமையால் 1919 பெப்ரவரியில் இந்தியாவிற்குப் பயணமானார். உடல் நிலை சற்று மேன்மை கண்டாலும் 1920 ஏப்ரல் 26 ஆம் திகதி காலமானார்.

ராமானுஜன் தாம் இறக்கப்போகும் திகதியை சரியாகக் கணித்து வைத்திருந்தார் என்றும் இறுதிக்காலத்தில் தனது மனைவியை அழைத்து தாம் இறப்பது பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று கூறி தமது கணிதக் கண்டுபிடிப்புகளுக்காக வரும் கொடுப்பனவுகளைப் பயன்படுத்தி வாழும் படியும் தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

# மாரடைப்பை ஏற்படுத்தும் கல்சியம் மாத்திரைகள்




உடலில் எலும்புகள் வளர்ச்சியடையவும், வலுப்பெறவும் கல்சியம் மாத்திரைகள் வழங்கப் பட்டு வருகின்றன. ஆனால், அந்த மாத்திரைகளால் மாரடைப்பு நோய் அதிக அளவில் ஏற்படுவது தெரியவந்துள்ளது.

நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அயன்ரெய்ட் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். இவர்கள் 12 ஆயிரம் பேரிடம் இந்த ஆய்வை நடத்தினர்.

அவர்களில் 30 சதவீதம் மாரடைப்பு மற்றும் இதய நோயாளிகள் கல்சியம் மாத்திரை சாப்பிடுபவர்கள் எனத் தெரியவந்தது. இதில் பெரும்பாலானவர்கள் வயதான பெண்கள்.

மாரடைப்புத் தவிர வலிப்பு ஏற்பட்டு இதன் மூலம் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையும் இம்மாத்திரையால் ஏற்படுவதும் தெரியவந்தது. எனவே, தேவையில்லாமல் கல்சியம் மாத்திரைகள் சாப்பிடக் கூடாது என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கல்சியம் மாத்திரைகள் இதய நோய்களை ஏற்படுத்தாது என முந்தைய ஆய்வுகள் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# பொதுமையைப் புகல்கிறேன், பொறுத்திடுங்கோ!

வில்லங்கமான ஒரு தலைப்பை உதயனில்
விகட கவி மூலம் தந்து விட்டான்
சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை இதில்'
நல்லவை யிருந்தால் வந்திடுவீர்

படிப்பைத் தொடங்கிய ஆண்களிலே பலர்
படிப்பைத் தவிர மற்றெல்லாஞ் செய்ய
முடிவு ஒன்றையோ குறிக்கோளாய்க் கொண்ட
பெண்ணினம் முன்னேறுவ துண்மையையா

பரீட்சைகளிலும் இது தெளிவு உயர்
பதவிகளிலும் அவரே தேர்வு
ஆனாலும் எம் தமிழ்ப்பெண்களிற்கு அந்த
விகடகவியின் கவி முறுகலாச்சு

ஆனென்ன? பெண்ணாலும் என்னவுஞ் செய்யலாம்
என்று கூறிடும் பெண்ணினமே
ஹோர்மோனின் (Hormone) வேறுபாட்டிற்கு என் செய்வீர்
கொஞ்சம் அடங்கியே ஆதல் நன்று

வேலையற்ற ஒரு ஆணாலும் பெரும்
வீடு வளவுடன் சீர் தனமும்
ஏன் கொடுத் தெடுக்கிறார் என்பதையும் புரிந்தால்
எந்தக் கதையும் நீர் பேசமாட்டீர்

நாற்பது ஐம்பது தாண்டினாலும் ஒரு
நாயகனைப் பெண் தேடுவது ஏன்?
தாற்பரியத்தைப் புரிந்து கொண்டால் பெண்கள்
தமக் கடக்க மான தொழில் தெரிவர்

பெண்ணுக்காய் ஆணங்கே காத்திருக்கத் தாயின்
பாலுக்காய் (பாசத்துக்காய்) சேயும் பார்த்திருக்க
அம்மா அகாலத்தில் அலுவலகத்தில்
என்னிட நெஞ்சம் இறுகலையோ

வேலைக்குப் போகும் பெண்களின் குண்ணின்றி
உணர்வுகளையும் கொஞ்சம் பார்த்தால்
நசி மெழுகித் தான் வாழ்கின்றார் இதைப்
புரியாமலும் இங்கே எவருமில்லை

ஆற்றல் மிகுந்தவர் எம் பெண்கள் இதை
அகிலமே ஏற்று மகிழுதையா
ஆனாலும் குடும்பம் என்றொரு கோயிலின்
குலவிளக்காயிருப்பதும் தேவையன்றோ?

ஆண் பெண்ணிருவரும் உழைத்தாலே இங்கே
வாழலாம் என்பது எதிர்காலம்
ஆனாலும் அதனுள்ளே குடும்பப் பெண்ணாகிவிட
அதற்கேற்ற தொழிற் தெரிவு அவசியமே

பணத்தைப் பெறுவதற்காக இங்கே
பலப் பல தொழில்கள் இருந்தாலும்
குணத்துடன் வாழக் குறிப்பிட்ட தொழிலையே
தேர்ந்து நாம் வாழ்வதும் ஏனோ ஐயா?

விதிவிலக்குகள் நிறைய உண்டு அந்த
வீண்கதை எமக்கிங்கே தேவையில்லை
எதுசரி எதுபிழை என்பதுவும் வேண்டாம்
பொதுமையைப் புகல்றேன் பொறுத்திடுங்கோ.

யதார்த்த வாதி.

ஆண்களையும் வாழவிடுங்கள் என்ற தலைப்பில் 11.07.2010 ஆம் திகதிய உதயனில் பிரசுரமான 'விகடகவி'யின் கவிதையின் பேசுபொருள் தொடர்பாக வாசகர்களின் கருத்துக்களைக் கவிதையில் வடித்து அனுப்புமாறு கேட்டிருந்தோம். வாசகர்கள் பலரிடமிருந்து கிடைத்த கவிதைகளில் ஒன்று இங்கு பிரசுரமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.06.1993

* விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் யுத்தக் கைதிகளை அவர்கள் மேற்கொண்டு வரும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறும் அவர்களை விடுவிக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் எனவும் அரசாங்கம் கோரியுள்ளதாகத் தெரிவிப்பு.

* கொழும்பிலும், வடக்கு - கிழக்கிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதற்காக இராணுவத்தரப்பு தனது புலனாய்வுத்துறையை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

17.06.1993

* கொழும்பு அகதிமுகாமில் உள்ள சுமார் 500 தமிழ் அகதிக் குடும்பங்கள் தம்மை மட்டக்களப்பில் மீளக்குடியமர்த்தும் திட்டத்தை ஆட்சேபித்து நேற்று முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் 39 யுத்தக் கைதிகளின் உறவினர்கள் அவர்களைப் பார்வையிடுவதற்காக கொழும்பில் இருந்து இன்று யாழ்ப்பாணம் புறப்படுவதாகத் தெரிவிப்பு.

18.06.1993

* பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஒரு நாள் இந்திய நல்லெண்ண விஜயம் ஜனாதிபதி விஜயதுங்காவின் பணிப்பின் பேரிலேயே மேற்கொள்ளப்படுவதாக வெளியுறவு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு.

* தற்பொழுது தமிழகத்தில் தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பேல விரைவில் கொழும்பு திரும்புவார் எனத் தெரிவிப்பு.

19.06.1993

* விடுதலைப் புலிகளால் கொழும்பு நகருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாரிஸில் வைத்து பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு.

* உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை விடுவிக்க உதவுமாறு அரசிடம் கோரிக்கை விட்டு தோல்வி கண்டுள்ளோம். அதனால் விடுதலைப் புலிகளின் தலைவரிடம் அத்தகைய கோரிக்கை நேரில் சந்தித்து வலியுறுத்துவோம் என விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தெரிவிப்பு.

20.06.1993

* பாதுகாப்புப் படையினர் தடுத்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் கைதிகளின் பட்டியலைத் தராவிட்டாலும், தமிழ் மக்கள் மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்குமானால் சிங்கள யுத்தக் கைதிகளை விடுவிக்கத் தாம் தயார் என விடுதலைப் புலிகள் தரப்பு தெரிவிப்பு.

* உண்ணாவிரதம் இருந்து வரும் சிங்கள யுத்தக் கைதிகளை யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகர சந்தித்துப் பேசியதாகத் தெரிவிப்பு.

21.06.2010

* இன்று புதுடில்லிக்கு விஜயம் செய்யும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசியல் நிலை குறித்தும் இலங்கை இந்திய பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்தும் இந்தியப் பிரதமருடன் பேச உள்ளதாகத் தெரிவிப்பு.

* அரசு யுத்த நிறுத்தம் செய்தால் சமாதானத்துக்கு வாய்ப்பு உண்டு என யாழ். வந்து திரும்பிய ''செடக்'' வெளிநாட்டு சமாதானக் குழுவினர் தெரிவிப்பு.

22.06.2010

* யுத்தக் கைதிகளை விடுவிப் பதற்கு விடுதலைப் புலிகளிகள் விதித்த நிபந்தனைகளை ஏற்று, தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு அரசு இனக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

* கடந்த 9 நாள்களாக உண்ணா விரதம் மேற்கொண்டு வந்த 39 யுத்தக் கைதிகளும் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக்கைவிட்டு இருப்பதாகத் தெரிவிப்பு.

23.06.1993

* தான் வழங்கிய உறுதி மொழியை மீறும் விதத்தில் கடந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பணிகளுக்கு என கிடைத்த வெளிநாட்டு நிதி உதவிகளின் பெரும் பகுதி நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை முன்னெடுப்பதற்காக அரசினால் செலவிடப்பட்டுள்ளது என உலக வங்கிக் குழு ஒன்று தெரிவிப்பு.

* அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன் பாட்டை அடுத்து விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த 5 யுத்தக் கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

24.06.1993

* கைதிகள் விடுவிப்பு விடயத்தில் தமது நிபந்தனைகளுக்கு அரசை இணங்கச் செய்ததன் மூலம் அழுத்தம் கொடுத்து அரசைப் பேச்சுக்கு அழைக்கும் தமது மதிநுட்பத்தை புலிகள் நிரூபித்து இருப்பதாகத் இராணுவ நிபுணர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு தனது விசேட பிரதிநிதியை அனுப்பியமை புலிகளின் கை ஓங்கியுள்ளதைப் புலப்படுத்துகிறது என பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

25.06.1993

* விடுதலைப் புலிகள் புதைத்து வைத்த தரைக் கண்ணி வெடிக்கே டென்சில் கொப்பேக்கடுவ உட்பட படை அதிகாரிகள் 10 பேர் அராலித்துறையில் பலியானதாக கொமன்வெல்த் விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவிப்பு.

* வடக்குக்கு விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை அரசு நீக்கியதற்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு உருவாகி வருவதாக செய்திகள் தெரிவிப்பு.

26.06.1993

* சிமெந்துக் கூட்டுத்தாபன காங்கேசன்துறை தொழிற்சாலையை அடுத்த மாதம் 15 ஆம் திகதியுடன் முடப்படவுள்ளதாகத் சிமெந்துக் கூட்டுத்தாபன நிர்வாகம் காங்கேசன்துறை தொழிற்சாலை ஊழியர்களின் தொழிற்சங்கத்துக்கு அறிவிப்பு.

* பூநகரிப் பாதையூடாக உணவுவாகனங்களை யாழ். குடாநாட்டுக்குள் அனுமதிப்பது குறித்து பேச்சுக்களை நடத்த ஐ.நா. தூதரக அதிகாரிகள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிப்பு.

27.06.1993

* யாழ். குடாநாட்டுக்கு மாதாந்தம் தேவைப்படும் தடை நீக்கப்பட்ட பொருள்களின் அளவுகளின் விவரம், ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவிடம் விடுதலைப் புலிகளால் இன்று கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

* மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் புதிதாக 7 முகாம்களை அமைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

28.06.1993

* கொழும்பில் இருந்து தாம் இந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கு பிரேமதாஸ அமைச்சரவையில் இருந்த அமைச்சர் ஒருவரே உதவினார் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம தெரிவிப்பு.

* வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்குத் தடை செய்யப்பட்டிருந்த பொருள்களின் தடை நீக்கம் குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த வெள்ளிக்கிழமை வெளியானதாகத் தெரிவிப்பு.

29.06.1993

* இலங்கை அரசிடமிருந்தும் சிங்களக் கட்சிகளிடமிருந்தும் அனுகூலமான சமிக்ஞைகள் கிடைக்குமானால் தாம் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாக அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.

30.06.1993

* முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலையை அடுத்து கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இருவார காலத்தில் 8 ஆயிரத்துக்கும் மேலான தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவிப்பு.

* யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கம் முறிவடைந்ததையடுத்து வடக்குக்கான பொருளாதாரத் தடை மீண்டும் முழு அளவில் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக இராணுவத்தரப்பு தெரிவிப்பு.

# இலங்கைப் பணியாளர்களுடன் கப்பல் சோமாலிய கடற்கொள்ளையரால் கடத்தல்

கொழும்பு, ஓக. 04

இலங்கைப் பணியாளர்கள் பணிபுரிந்த கப்பல் ஒன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் நேற்றுமுன்தினம் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்துக் கடத்தியுள்ளனர்.

சோமாலியாவில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய கடற்படை இக்கடத்தலை உறுதிப்படுத்தியது.

இக்கப்பலை நோக்கி கொள்ளையர்கள் சிறிதுநேரம் துப்பாக்கித் தாக்குதல் நடத்திவிட்டு கப்பலில் ஏறி அதைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். இக்கடத்தல் நடவடிக்கையை அறிந்து அக்கப்பலுடன் தொடர்புகளை மேற்கொள்ள முயற்சி எடுத்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை என்று ஐரோப்பிய ஒன்றிய கடற்படை தெரிவித்தது.

அக்கப்பல் கடத்தப்பட்டபோது பயணத்துக்கு உகந்தது என சர்வதேச ரீதியாக சிபார்சு செய்யப்பட்ட கடற்பயண வழியாலேயே அது பயணித்துக்கொண்டிருந்தது.

கடத்தல் நடவடிக்கையை முறியடிக்க கப்பலை நோக்கி ஹெலிக்கொப்டர் அனுப்பப்பட்டபோதும், அதற்கிடையில் கொள்ளையர்கள் கப்பலை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துவிட்டனர் என்று ஐரோப்பிய ஒன்றியக் கடற்படை மேலும் கூறியது.

அந்தக் கப்பலில் இலங்கை, எகிப்து, பாகிஸ்தான், மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பணியாளர்கள் பணியாற்றி வந்தனர். பனாமாவில் பதிவுசெய்யப்பட்ட அந்தக் கப்பல் கடத்தப்பட்டமை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய கடற்படை விசாரணையை மேற்கொண்டு வருகிறது.

(சி)

# உள்ளூர் விமான சேவையை ஆரம்பிப்பதற்கு அரசு திட்டம்

கொழும்பு, ஓக. 04

உள்ளூர் விமானசேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

விமானக் கொள்வனவுக்குரிய பத்திரம் அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள் பிரதி அமைச்சர் தயாசிறித்த திசேரா தெரிவித்தார்.

உள்ளூர் விமானசேவையை இந்த வருட இறுதிக்குள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கட்டுநாயக்கா, கொழும்பு மற்றும் யாழப்பாணம் ஆகிய பிரதேச மக்களின் வசதி கருதி இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள் பிரதி அமைச்சர் தயாசிறித்த திசேரா மேலும் தெரிவித்தார். (சி)

# தமிழ்க் கட்சிகளின் அரங்கம் தமது நம்பகத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும்

கொழும்பு, ஓக. 04

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் தமது நடவடிக்கைகளையும் நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்த வேண்டும். வடக்கு, கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து எம்மைப் பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்துள்ளனர். அவர்களது நலனே எமக்கு முக்கியம் எனக் கூட்டமைப்பு ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் முதலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். சில கட்சிகள் அரசில் அங்கம் வகிக்கின்றன. மேலும் அதில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்குகின்றன. மீள்குடியமர்த்தலில் காணப்படும் சிக்கல் நிலை, மீள்குடியமர விடாமல் இராணுவம் தடுப்பது குறித்து அமைச்சர் டக்ளஸ் எதுவும் தெரிவிக்கவில்லை. தமிழ்க் கட்சிகளின் அரங்கம் குறித்து திருப்தியடைந்தால் அதில் இணைவது குறித்து ஆலோசிப்போம்.

- இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் சொன்னார்.

(சி)

# உள்ளூராட்சி மன்றங்கள் குறித்து முறையிடுவதற்கு விசேட பிரிவு

கொழும்பு, ஓக. 04

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு விசேட பிரிவொன்றை ஸ்தாபித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களூடாக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில், மக்கள் இந்தப் பிரிவுக்கு நேரடியாகத் தகவல்களை வழங்க முடியுமென உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளை, 011 2328428 அல்லது 011 2328282 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு தெரிவிக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார். (சி)

# தனியார் வானொலி மீது தாக்கு : சந்தேக நபர்களைக் கைதுசெய்க!

## பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஓக. 04

'வெற்றி எவ்.எம்.' தனியார் வானொலி நிறுவனம் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அத்துடன், சம்பவம் குறித்த விசாரணை அறிக்கையை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

கடந்த வாரம், குறித்த நிறுவனத்தின் அலுவலகத்துக்குள் புகுந்து, முகமூடியணிந்த ஆயுததாரிகள் சிலர் அங்கிருந்த சொத்துக்களைச் சேதப்படுத்தினர். அத்துடன், நிறுவனத்தின் செய்திப் பிரிவில் கடமையாற்றி வந்த இரு ஊழியர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இருப்பினும், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சதேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் சம்பவத்தின் போது முகமூடி அணிந்திருந்தமையால் அவர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் பொலிஸார், கோட்டை நீதிவானிடம் கூறினர்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

## திருக்கார்த்திகைத் திருவிழாச் சிறப்பிதழ் 04.08.2010



### மாவை முருகனை கார்த்திகை உற்சவத்தில் தேடிச் சென்று வழிபடுவோம்

மாவையம்பதியின் விசேடம் மாருதப் புரவீகவல்லியினால் சிறப்புறப் பெறு கின்றது.கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையால் முருகன் கார்த்திகேயன் என்னும் பெயர் பெறுகின்றான்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் விசேடம் பெற்று விளங்குவது மாவைக்கந்தன் ஆலயம். நக்கீரதேவர் திருமுருகாற்றுப்படையிலே முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களையும் அலங்கரிக்கின்றார். அருணகிரிநாதர் திருப்புகழ்பாடி முருகன் புகழைப் புனைந்து உரைக்கிறார்.

குமரகுருபர சுவாமிகள் தமது முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழில் முத்தப் பருவத்தில் முருகப் பெருமானின் பெருமைகளை மிகவும் அருமையாகச் சொல்வதையும் காணலாம்.

மாவைக்கந்தன் ஆறுதிரு முகங்களையும், பன்னிரண்டு திருக்கரங்களையும் அழகிய ஞானவேலையும் கொண்டு விளங்கும் காட்சி மிகவும் அற் புதமானது. மேலும் வள்ளி, தெய்வயானை என இரண்டு சக்திகளும் இச்சா சக்தியாகவும், கிரியா சக்தியாகவும் துலக்கம் தருகின்றன. எங்களுக்கு ஞானத்தைத் தரும் ஞானவேல் ஞானாசக்தியாக விளங்கி அருள் தருகின்றது.

மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் வரும் கார்த்திகை உற்சவத்தில் - ஆடி மாதக் கார்த்திகை உற்ச வம் மாவை முருகனுக்குப் பெரும் விசேடமுடையது. இன்றைய புண்ணிய நாளில் எல்லாம் வல்ல மாவைக் கந்தனை அடியார்களாகிய நாம் அனைவரும் தேடிச்சென்று மாவைக் கந்தனை எமது மன திருத்தி வழிபாடு செய்வோமாக.

கா.சிவபாலன்

### தானங்களில் சிறந்தது அன்னதானம்

உலகு என்பது உயர்ந்தோர் மாட்டு உயர்ந்தோரால்தான் நாடும் உயிரினங்களும் நல்வாழ்வோடு துளிர்ந்து நிற்கும். பிறக்கின்ற அனைத்தும் இறக்கின்றன. மலர்கின்ற அனைத்தும் வாடுகின்றன. எழுகின்ற அனைத்தும் வீழ்கின்றன. தோன்றுகின்ற அனைத்தும் மறைந்தே விடுகின்றன. இறப்பன அனைத்தும் புதியவை பிறப்பதற்குக் காரணமாகின்றன. மறைபவைகூட புதியவை தோன்று வதற்குக் காரணமாகின்றன. இதுவே உலகின் மாபெரும் வேள்வியெனக் கருதப்படுகின்றது.

இந்தப் பிரபஞ்சத்தில் தாய், தந்தை, மனைவி, மக்கள் உறவினர், வீடுவளவு எனும் அனைத்துச் செல்வங்களையும் ஒருநாள் இழந்துதான் ஆகவேண்டும். இறந்த பின்பும் சேகரஞ்செய்த செல்வங்களும் இழந்துதான் போகும். எனவேதான் சுக துக்கங்களை அற்ப மெனத் தள்ளிவிட்டு சில தர்ம சேவை களில் ஈடுபட்டு, அத் தர்மங்களூடாக சிவ புண்ணிய சேமிப்புக்களைச் சேகரித்து சிவகதி சேரும் வாய்ப்பினைப் பற்றி சைவ சித்தாந்த நூல்கள் அறியத்தருகின்றன.

உயிரினங்கள் அனைத்தையும் சிவமயமாகவே சைவர்கள் கருதுகிறார்கள். இவர்களது வளர்ச்சிக்கும், வளர்ச்சியால் பெறும் பேறுகட்கும் , இவை சிறப்போடு வாழ நாம் ஏதோ ஒரு வகையில் உதவுகிறோம். இதுதான் மகேஸ்வர பூசை. இவ் மகேஸ்வர பூசையின் ஓர் அங்கமே அன்னதானம். தானங்கள் பலவாறாக இருப்பினும், பசிக்கு உணவு கொடுக்கும் தானமே முதன்மை பெறுகிறது. எவ்வளவுக்கு எவ்வளவு அன்னதான நிகழ்வுகள் தோற்றங் கொள்கிறதோ அவ்வளவிற்கு அவ்வளவு சிவசானித்தியம் தானாகவே பரந்து, வளர்ந்து தோற்றங்கொள்ளும். இதனால் அருமையான சைவ சமுதாயமும் சிவனருளால் தீர்க்கமான சுகங்களோடு இனிதே வளரும்.

எங்கும் மகேஸ்வர பூசை மலர்வதாக. சரவணப் பொய்கையில் தோற்றங் கொண்ட சரவணபவ குழந்தைகளுக்கு பாலூட்டி வளர்த்துவிட்ட கார்த்திகைப் பெண்களால் தோற்றங் கொண்ட திருக் கார்த்திகை விழாவில், சகலரும் அன்னதானம் செய்தும் அன்னதானங்களில் இணைந்தும், பங்கு கொண்டும் கார்த்திகைக் குமரனது திருவருளுக்கு ஆளாகுவோமாக.

சி.சொருபன், பொறுப்பாளர்
மாவைக்கந்தன் மகேஸ்வரபூசைத் தொண்டர் சபை.

### ஆசியுரை



சிவபூமியென திருமூலரால் அறியப்பட்டதே இன்றைய ஸ்ரீலங்கா பிரதேசம். சீரும் சிறப்போடும் திருவருட் கடாட்சத்தோடு வாழ்ந்த அக்கால மக்கள் சைவப்பண்பாடுகளையும், கலாசாரங்களையும் உள்ளது உள்ள படியே பேணிப் பாதுகாத்தமையால்தான் இன்று சைவ சமூகம் நிலைத்து நின்று ஏதேதோ செய்கிறது. ஆறுமுகநாவலர் சைவ சிந்தனைகளினூடாக சைவ மாண்பின் பேறுகளை மக்கட்கு எளிதில் விளங்கக் கூடியதாக பாரிய சேவைகளை முன்னெடுத்த போதிலும், அதனைத் திருமூலர் காலத்து சைவ மாண்போடு இணைத்துப் பேச இயலாதுள்ளது.

ஈழ நாட்டின் சைவ மாண்புகளையும் பண்பாடுகளையும் அடியோடு அழித்த கைங்கர்யம், பறங்கிப் பட்டாளங்கள் இங்கே நுழைந்து ஆற்றிய படுபாதகச் செயல்களே மிக மிக முக்கிய அங்குரார்ப்பணமானது. பறங்கிப் பிரவேசம் மறையவே, தொடர்ந்து இப்போதும் கறையானைப் போன்று மெல்ல மெல்ல, அதுவும் வெகு நுட்ப தந்திரங்களினூடாக இன்று சைவசமய அழிவிற்கு உரம் போடப்படுகின்றது.

இன்று சைவாலயங்களில் சைவப் பெருமக்களது ஆடை அலங்காரம், நடையுடை பாவனை, ஆராதனை செயற்பாடுகள் அனைத்தும் மாறுபட்டதோர் வழியில் நகர்வதும் சைவசமய அழிவுக்கு வித்தாகிறது.

சைவர்களது அங்க அடையாளங்களி லொன்று விபூதி அணிதல். இது மிக முக்கியமானது. நெற்றியில் விபூதி தரித்து, திலக மிட்டு, வேட்டி, சால்வையை சிவசக்தி மயமாக அணிந்து வழிபடுதலே சிவ சாயுஜயத்தை பெற வழியெனச் சிந்தாந்த சாஸ்திரங்கள் அறியத்தருகின்றன.

சைவமக்கள் நெற்றியில் திருநீறும் திலகமுமிட்டு காட்சிதரும் போது ஜனாதன, தர்மங்கள் தானாகவே உயிர் கொண்டு பரவி வளருமென தர்ம சாஸ்திர நூல்கள் இயம்புகின்றன. திலகபூஷணம் ஒருவனது ஞானக்கண்ணைத் திறந்து விடும்.

மகாலஷ்மியாக பவனிவர வேண்டிய மகளிர் பலர், வெருளிகளைப் போன்று தலைவிரி கோலமாகவும், கோமாளிகள் போன்ற உடையோடும், கையிலே எதை யெல்லாமோ அமுக்கிய பைகளோடும், இன்னும் வேறு பறங்கிப் பாவனை களோடும் ஆலய வளாகங்களில் கூடுவது பார்க்கவே பயங்கரமாகவும் அலங்கோல மாகவும் விளங்குகிறது. இதைத் தடுத்து நிறுத்த எவ்வகையாலும் இயலாதுள்ளது.

சைவ சமூகத்தவர்களாகிய நாம் எமது கலாசார சின்னங்களையும், பண்பாடுகளையும், செயற்பாடுகளையும் துணிந்து நின்று நிறைவு செய்தால் எம்மீதான ஆதிக்கங்கள் கூட தானாகவே நிமிரும். சிவத் தமிழர்களது அரசுரிமை கூட வலுப்பெற்று இறுக்மடையும். இதற்காகவே ஆலயங்களும், சைவ ஸ்தாபனங்களும் உருப்பெற்றன. ஆலய தரிசனங்களில் உயரிய தத்துவங்களும், அத் தத்துவங்களது அனுசரணையில் மனித வாழ்வு சீரும் சிறப்புடனும் மேலோங்கி நிற்குமென ஆகம சான்றுகள் உள்ளன. இதனால் அமைதியும் நல்வாழ்வும் சாந்தியும் அபரிமிதமாகவே பரந்து நிற்கும்.

சாந்தியென்பதும், மந்திரங்களாகவே கணிக்கப்படுகிறது, மந்திரங்களை உச்சரிப்பதற்கு முன்பாக ஓம் என்றும் இறுதியில் ஓம்சாந்தி என்றும் மும்முறை ஓதப்படுவது வழமை.

துன்பங்களினின்று விடுபடவே ஓம் சாந்தி என மும்முறை உச்சாடனம் செய்யப்படுகிறது. எனவே இந்த ''ஓம் சாந்தி'' மந்திரத்தை அனைவரும் தினமும் மும்முறை ஓதுவார்களாயின், நம்பிக்கையாக யாவரும் இன்பநிலையை அடைய முடியும்.

எனவே, ஆலயங்களை முன்வைத்து ஆராதனைகளாலும், அர்ச்சனைகளாலும், விழாப் பொலிவுகளது காட்சியாலும் இந்த சாந்தி மந்திரத்துடன் திருக்கார்த்திகை தினத்தில் வழிபாடுகளை முன்னெடுப் போமாக.திருக்கார்த்திகை விழா பொலிவு கண்டு அனைவரும் இன்புற்றிருக்க மாவைக்கந்தன் அருள்வாராக என ஆசீர்வதிக்கிறேன்.

மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவை ஆதீனகர்த்தா

### ஆடிக் கார்த்திகை மகிமையைப் பாடுவோம்

ஆடிக் கார்த்திகைத் திருநாள் இன்று
அழகனின் புகழ்பாடும் நன்னாள்
ஆடிந டமிடும் மாமயில் வாகனன்
சுகந்தனின் அடியவர்
நாடியே தேவர் துயர்கெட வேலை
எறிந்துமே சூரனுடல்
கடிதினில் விழ்ந்திரு கூறென வாகிட
ககனத் துயர்தேவர்
கூடி மகிழ் ந்தவர் குதூகல நிலைபெற
குவலயம் இதில்மாவை
ஒடியே வந்தவர் ஆடிக் - கார்த்திகைத்
திருநாள் மகிமையுற
சூடிய கடம்பும் துலங்கிட வள்ளி
தெய்வானை அம்மனொடும்
சுந்தர மயிலமர் கார்த்திகைக் குமரன்
கந்தனின் புகழ்பாடுவோம்.

ச.முகதேவன்,
தெல்லிப்பழை.





### மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிக்கு உதவுவோம் வாரீர்!

இலங்கைத் திருநாடு ஒரு சிவபூமி. இலங்கையின் வடபால் பல சைவ ஆலயங்கள் உள்ளன. அவற்றுள் ஆயிரத்து இருநூறு வருடங்களாக நிலைத்து நின்று சைவத்தமிழர்களது வாழ்வினுள் இரண் டறக் கலந்து எம் சைவ அடியார்களுக்கு வேண்டும் வரங்களைத் தந்து நிற்பது அங்கே வாழ்வு பெற்ற மாருதப் புரவீக வல்லியின் மாவிட்டபுரம்.

கந்தசாமியின் அற்புதங்கள் பலப்பல. நம்நாட்டின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியது, இன்று மக்கள் தாராளமாக லட்சக்கணக்கில் வழிபட வழிவகுத்துள்ளது. எத்தகைய இடையூறு இருந்தும் பக்தர்கள் தூய பக்திமனம் கொண்டு பிரார்த்தனையையொட்டி எம்பெரு மானின் பூசைகள், விழாக்கள் எதுவித தடைகளுமின்றி மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ து.சண்முக நாதக் குருக்கள் அவர்களின் வழிகாட்டலில் நடைபெற்று வருவது ஒரு புண்ணியச் செயலே.

மாவிட்டபுரம் சிறந்த சைவ மணம் கமழும் கிராமம். இங்கு பல பிரபல்யமான சிவாச்சாரியார்கள் தோன்றி இலங்கைத் திருநாட்டுக்குப் பல சைவத் தொண்டுகள் செய்தனர். இப்பழைமை வாய்ந்த ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. ஒன்று, தலைசிறந்த அந்தணப் பெருமக்கள். சிறந்த நிர்வாகம் எல்லோராலும் போற்றப்படுவது மற்றொன்று.

நெடுங்காலமாக ஆலய முன் வாசலில் கம்பீரமான இராஜகோபுரம் மாவிட்டபுரத்தில் எழுந்து நிற்கிறது. இப்பெரு அழகை எப்படி விவரிக்க முடியும். எம்பெருமான் திருக்கரத்தில் வைத்திருக்கும் வேல் எங்குமே காண முடியாத அற்புத அமைப்பு. விலைமதிக்க முடியாத நவரத்தினங்களுடன் காட்சி அளிக்கின் றது.

இப்பெருமை மிக்க ஆலய அருகில் அமைந்துள்ளது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவ மக்களின் பெரும் சொத்தான கீரிமலை. இங்கு ஆடி அமாவாசையில் சிறப்பாக விரதம் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் நீராடுவார்கள்.

மாவைக் கந்தனது உற்சவங்கள் 25 தினங்களாக இடம்பெறும்போது தினமும் அபிஷேகம், அலங்கார பூசைகள், ஆராதனைகள், பிரார்த்தனைகள் நிறைவு பெற அருள் பாலித்துள்ளது. உற்சவங்கள் தினமும் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பி.ப 4 மணி வரை நிகழும். இம்முறை விசேடமாக யாழ்.மாவட்டத்தில் பல பகுதி களில் இருந்து போக்குவரத்துச் சேவை ஆலயம் வரை நடைபெறுகிறது. வாகனங் களும் இம்முறை ஆலயம் வரை செல்லலாம். மேலாளராக இருந்து தம் கடமை களைச் செய்து வரும் மூத்த சிவாச்சாரியார் மாவை ஆதீனம் ஸ்ரீ து.சண்முகநாதக் குருக்கள் ஐயா அவர்கள் பாராட்டுக் குரியவர்.

இம்முறை மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய மகேசுவர பூசைத் தொண்டர் சபை சிறந்த விரிவான சகல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். தண்ணீர்ப் பந்தல், அன்ன தானம் என்பன சிறப்பாக நடைபெறு கின்றன.

புகழ்பெற்ற முருகன் ஆலயத்துக்குத் தொண்டர்சபையினர் பெரும் கடமை களைப் பொறுப்பேற்று தொண்டுகள் புரிகிறார்கள்.

பல சிறப்புக்களைக் கொண்ட மாவைக் கந்தன் ஆலயத்தில் இப்போது ஆகம முறைப்படி கருங்கல் திருப்பணி விரைவாக பூர்த்தியாகி மகாகும்பாபிஷே கத்தை அதி விரைவில் தரிசிக்கும் பாக்கியத்தை மக்கள் பெறுவர். புலம் பெயர்ந்த சைவ மக்களும் இலங்கைத் திருநாட்டின் மக்களும் பிரார்த்தனை செய்து வரும் மாவிட்டபுரம் கந்தசாமியின் திருவடிகளை வணங்கி, எல்லோர் வாழ்வும் சிறப்புற அமையப் பிரார்த்திப்போமாக. எல்லோரும் ஒத்துழைப்பு நல்குவோமாக.

அருள்மிகு கந்தசாமி கோவிலுக்கு இலங்கையில் மட்டும் அல்லாமல் வெளி நாட்டுப் பக்தர்களும் ஆலயத் திருப்பணி வேலைகள் சிறப்புற நடைபெறவும், கும்பாபிஷேகத்தை தரிசிக்கவும் ஆவலோடு காத்து இருக்கின்றார்கள்.மாவைக் கந்தன் ஆலயத்திருப்பணிக்கு வெளிநாட்டில் உள்ள பக்தர்கள் உதவிட வேண்டுகிறோம்.

பரோபகாரமணி கே.கே.சுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கழகங்களுக்கிடையேயான கலாசார, இலக்கியப் போட்டி முடிவுகள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி 'கெக்குழு' சிறுவர் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:

*பிரிவு - 1*

முதலாம் இடம் - பரமேஸ்வரன் பானுஜா, இரண்டாம் இடம் - ஜெயக்குமார் தமஸ்வினி, மூன்றாமிடம் - ஜெயக்குமார் ஜதுர்சன்.

*பிரிவு - 2*

முதலாமிடம் - நவரத்தினராசா கபில்ராஜ், இரண்டாமிடம் - ஜெயக்குமார் யதுசிகா, மூன்றாமிடம் - செல்வராசா தயானா.

*பிரிவு - 3*

முதலாமிடம் - செல்வராசா றெஜிமோகம், இரண்டாமிடம் - இராசசிங்கம் அனுஸ்மாலா, மூன்றாமிடம் - பரமேஸ்வரன் சுகன்ஜா.

**கிராமிய நடனம்**

*பிரிவு - 1*

முதலாமிடம் - செல்வராசா நடன பைரவி.

*பிரிவு - 2*

முதலாமிடம் - தயாபரன் டிசாயினி, இரண்டாமிடம் - அன்ரன் இராசேந்திரன் டிருசா.

*பிரிவு - 3*

முதலாமிடம் - இராசசிங்கம் அனுஸ்மாலா, இரண்டாமிடம் - குமாரசாமி யனுசா.

**பேச்சுப் போட்டி**

*பிரிவு - 1*

முதலாமிடம் - ஜெயராசா வினித், இரண்டாமிடம் -அன்ரன் டேவிற் அனெற் சாருக்கா, மூன்றாமிடம் -பாலக்கிருஸ்ணன் நவறோச்.

*பிரிவு - 2*

முதலாமிடம் - செல்வம் கேமப்பிரியா, இரண்டாமிடம் - முத்துலிங்கம் கம்சிகா, மூன்றாமிடம் - யோசப்பு டெனிஸ்ரா.

*பிரிவு - 3*

முதலாமிடம் - தயாபரன் தமிழினி, இரண்டாமிடம் - தமிழ்ச்செல்வன் தர்சிகா, மூன்றாமிடம் - பாஸ்கரன் லக்ஸ்சலா.

**அறிவிப்பாளர் போட்டி**

*பிரிவு - 1*

முதலாமிடம் - பரமேஸ்வரன் பானுஜா, சில்வெஸ்ரர் ஜென்சின்.

*பிரிவு - 2*

இரண்டாமிடம்-யோப்பின் அன்ரனி டிலக்ஸ்சன், மூன்றாமிடம் - சிறிநாகறஞ்சன் நிதுஜா.

*பிரிவு - 3*

முதலாமிடம் - ராசசிங்கம் அனுஸ்மாலா, இரண்டாமிடம் - பாஸ்கரன் சியாமளா, மூன்றாமிடம் -கிறேசியன் அனோஜன்.

**ஓவியம்**

*பிரிவு - 1*

முதலாமிடம் - ஏபன்கலிங்ரன் வெஸ்ரிற் ஜீவா இரண்டாமிடம் - குணாளன் மேரி சங்கீதா.

*பிரிவு - 2*

முதலாமிடம் - டவின்ஸ்ரன் ராதா, இரண்டாமிடம் - யோசெப்பின் அன்ரன் டிலகஸ்சன், மூன்றாமிடம் - சாந்தமூர்த்தி சூரியா.

*பிரிவு - 3*

முதலாமிடம் - பர்மநாதன் டஜித்தா, இரண்டாமிடம் - பகீரதன் தசரதன், மூன்றாமிடம் - அம்பிகைபாகன் மிதுர்சன்.

**சிறுகதைப் போட்டி**

*பிரிவு - 2*

முதலாமிடம் - நேமிதா ரவிச்சந்திரன், இரண்டாமிடம் - செல்வம் ஹேமப்பிரியா, மூன்றாமிடம் - குகலோஜன் ஹம்சத்வனி.

*பிரிவு -3*

முதலாமிடம் - தயாபரன் தமிழினி, இரண்டாமிடம் - பிரான்சிஸ் றோசலிற் தமிழினி, மூன்றாமிடம் - கிறிஸ்துராசா செல்சியா.

**கிராமிய நடனம் (குழு)**

*பிரிவு - 2*

முதலாமிடம் - பிள்ளை நிலா, இரண்டாமிடம் - மலரும் மலர்கள், மூன்றாமிடம் - இளந்தென்றல்.

*பிரிவு - 3*

முதலாமிடம் - இளங்கதிர், இரண்டாமிடம்-மலரும்மலர்கள், மூன்றாமிடம்-அஸ்வினி.

**குறுநாடகம்**

முதலாமிடம் - பிள்ளைநிலா, இரண்டாமிடம் - அஸ்வினி, மூன்றாமிடம் - மலரும் மலர்கள். (எ-313-318)

# என்று தீரும்....

*(06ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வைத்திருப்பதன் நோக்கம் தான் என்ன? இவர்களை விடுதலை செய்தால் மீண்டும் ஒரு கிளர்ச்சி அமைப்பை உருவாக்கி விடுவார்கள் என அரசு அஞ்சுகிறதா?

இவ்வாறான விடயங்களை எப்படிக் கையாள்வது என்பதில் அரசுக்கு அனுபவம் நிறைய இருக்கிறது. ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களின் விடுதலை ஒரு முன்னுதாரணம்.

கிளர்ச்சியின் பின்னர் தமது தோழர்கள் விடுவிக்கப்பட்டமைக்கு மக்களின் தொடர்ச்சியான - வலுப்பெற்ற போராட்டங்களே காரணம் என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கூறுகிறார்.

அப்படி எனில், தமிழ்மக்கள் அரசியல் கைதிகள் விடயத்தில் போராடாமல் இருப்பதுதான் அவர்கள் விடுவிக்கப்படாமைக்கான காரணமா என்ற கேள்வி எழுகிறது.

புலிகள் எத்தனை பேர் சரணடைந்தனர் என்பதை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஆனால், புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட எத்தனைபேரை தாம் தடுத்துவைத்துள்ளனர் என்பதை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. புலிகளுடன் நேரடியாகக் களமாடியவர்களின் எண்ணிக்கையையே அறிவிக்கும்போது ஏன் அரசியல் கைதிகளின் எண்ணிக்கையை அறிவிப்பதில் மட்டும் அரசு தயக்கம் காட்டுகின்றது?

இன்னொரு விடயத்தையும் நாம் இங்கு கவனத்தில் எடுத்தேயாகவேண்டும். புலிகளுடன் இணைந்து நேரடியாக சமரிட்டவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்படுகின்றனர்.

ஆனால், குழந்தையுடன் சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு மறுக்கிறது. இது எந்தவகையில் நியாயம்?

முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதையோ - திருமணம் செய்துவைப்பதையோ - விடுவிப்பதையோ - தவறு எனக் கூறமுடியாது. ஆனால், குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்களுக்கே இச்சந்தர்ப்பம் வழங்கப்படும்போது ஏன் அரசியல் கைதிகள் விடயத்தில் மட்டும் அரசு அசமந்தப்போக்கை கடைப்பிடிக்கிறது? தமிழனாகப் பிறந்த ஒரே காரணத்துக்காக ஒன்றரை வயதுக் குழந்தை முதல் 72 வயது முதியவர் வரை சிறைக்குள் குற்றச்சாட்டு எதுவும் இன்றியும் விசாரணை இன்றியும் வாடவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்காவிடினும் அவர்களுக்கப் பிணை வழங்கி அவர்களை அவர்களது குடும்பங்களுடன் சேர்ப்பதற்காவது அரசு காத்திரமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்.

மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களின் மூலம்தான் தாம் விடுவிக்கப்பட்டோம் என்று ஜே.வி.பி. கூறுவதைப்போன்று தமிழர்களும் போராட்டங்களை நடத்தி தமிழ் அரசியல் கைதி களை மீட்க களம் இறக்குவதற்கு முயற்சிக்கத்தான் வேண்டுமா?

கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்து வதாலோ, அமைச் சர்கள் அங்கு சென்று அபி விருத்திப் பணி களில் பங்கேற்பதாலோ தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. பதிலாகத் தமிழர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.


**விற்பனைக்கு**

குடத்தனை 10ம் கட்டையில் 163 பரப்பு வயல் காணி உடன் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு

**0777-561341**



## இறைபணி சிறக்க
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தென்னிந்திய திருச்சபை நெடுந்தீவில் 7 ஆண்டுகள் பணி நிறைவையும் தனது குருத்துவப் பணியில் 15 ஆண்டுகள் பணியினையும் நிறைவு செய்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் எமது அன்பிற்குரிய அருட்தந்தை ஜோன் செல்வம் குடும்பத்தினரை மேலும் இறைபணி செய்ய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி
**எட்வேட்ராசா** (றஞ்சன்)
குடும்பத்தினர்
*(கியூமெடிக்கா அம்புலன்ஸ், ஓட்டுநர்)*


## அரசாங்க அறிவித்தல்
### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
### மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கான
# கூறுவிலை கோருதல்

யாழ்.மாவட்ட செயலக வளவில் உள்ள சகல மலசலகூடங்களையும் அதனுடன் தொடர்புள்ள ஏனையவற்றையும் துப்புரவு செய்வதற்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக தகவல்களை செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 04.08.2010ஆம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்வதுடன் கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100.00உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00உம் செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாவட்ட செயலக மலசலகூடங்களைத் துப்புரவு செய்தலுக்கான கூறுவிலைகள்" எனக் குறிப்பிட்டு 25.08.2010ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல்வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப. 11 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் 04.08.2010ஆம் திகதி தொடக்கம் 23.08.2010ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்ட செயலர்,
யாழ்.மாவட்டம்.

(சி/569648)


**காணி விற்பனைக்குண்டு**

மட்டுவில் தெற்கில் வராலிக்காடு என்னும் வளவில் 20 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ பிரித்து விற்கப்படும்.

*தொடர்பு:*



# கொவிசெத
**உத்தியோகப்பூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு இலக்கம் **766**
சீட்டிழுப்பு திகதி **02.08.2010**

எழுத்து **X** — வெற்றி இலக்கங்கள் **01 57 59 64**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,644,400.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 10 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 314 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 618 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15316 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 8714 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 218198 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 34484 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,379,800.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 21,168,201.60**

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுசன் அதிரடியாக ஓட்டங்களை குவித்தபோதும் யாழ்ப்பாணக் கல்லூரி - சென்றல் ஆட்டம் சமநிலையில்!

வலி.வடக்கு,ஓக.4

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவுனருக்கான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்று சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் 17 வயதுப் பிரிவினருக்கான ஆட்டமொன்றில் யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 29.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

வதுசனன் 8 நான்குகள் 2 ஆறுகள் உட்பட 75 ஓட்டங்களை 66 பந்துகளில் விரைவாகப் பெற்றுக் கொண்டார். கோகுலன் 13, லக்சன் 12 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 34 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பெஞ்சமின் நிரோசன் 6.2 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கஜேந்திரன் 3 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் மதுசன் 5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சோபிநாத்சுவான் 7 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 37 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

152 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 44.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பெஞ்சமின் 5 நான்குகள், ஒரு ஆறுடன் 34, தனஞ்செயன் 24, பெண்டில்கரன் 19 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 43 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்ரீவண்ணன், கிஷாந்தன், டார்வின், கோகுலன் முறையே 11, 15, 19, 33 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களையும் லக்சன், வதுசனன் முறையே 16,19 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (ஐ-86)

## மின்னொளியில் இன்று ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.4

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதியாட்டங்கள், அரை இறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை மின்னொளியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:

* அரை இறுதியாட்டம் - இரவு 8.30 மணி - அச்சுவேலி விக்னேஸ்வரா வி.க. எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க.
* கால் இறுதியாட்டம் - இரவு 7.30 மணி -ஆவரங்கால் மத்தி வி.க. எதிர் நாயன் மார்கட்டு பாரதி வி.க. (ஐ-23)

## காலிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக.4

குருநகர் தூயஒளி வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கால் இறுதியாட்டங்கள் நாளை வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

* பிற்பகல் 3.45 மணி - எவறெஸ்ட் வி.க. எதிர் ஞானமுருகன் வி.க.
* பிற்பகல் 5 மணி - பாடும்மீன் வி.க. எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வி.க.

(ஐ-23)

## வடமாகாண வீரர்களிடையே மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.4

அரியாலை சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமாகாண ரீதியில் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டம், பெண்களுக்கான 15 மைல் ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் அரியாலை சனசமூக நிலைய செயலாளரிடம் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு போட்டியாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-23)

## மின்னொளியில் கரப்பந்தாட்டம்; கைதடி, காங்கேசன் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.4

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 55ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்தவாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகம் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குமரன் நகர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக அணி எதிர்த்து விளையாடிய குமரன் நகர் விளையாட்டுக்கழக அணியை 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது.

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டது. (ஐ-23)

## தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்கள் தெரிவு விரைவில்

### யாழ்.வீரர்களும் பங்குகொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஓக.4

இலங்கைத் தேசிய உதைபந்தாட்ட அணிக்கு வீரர்கள் தெரிவு இடம்பெறவுள்ளது.

இந்த வீரர்கள் தெரிவில் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த உதைபந்தாட்ட வீரர்களும் பங்குகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே உதைபந்தாட்ட கழகங்களில் தங்களது கழகத்தில் உள்ள சிறந்த வீரர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் செயலாளரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இந்தப் பெயர், விவரங்கள் விரைவில் உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு தேசிய அணித் தெரிவில் எமது வீரர்களும் பங்குகொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-23)




## மாகாண விளையாட்டுப் போட்டி; யாழ்.மாவட்டம் தொடர்ந்து முதலிடம்

வவுனியா,ஓக.4

வவுனியாவில் நடைபெற்று வரும் மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் மாவட்டம் 256 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் நிற்கிறது.

கடந்த சனிக்கிழமை முதல் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த விளையாட்டுப் போட்டிகளில் மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் மாலைவரை இடம்பெற்ற போட்டிகளில் யாழ்.மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

வவுனியா 174 புள்ளிகளையும் மன்னார் 78 புள்ளிகளையும் கிளிநொச்சி 11 புள்ளிகளையும் முல்லைத்தீவு 7 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (ஒ-319-86)

## தீவகக் கழகங்களின் உதைபந்தாட்டம்; வேலணை ஐயனார் வி.க. சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஓக.4

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகத்தின் 59ஆவது ஆண்டு நிறைவையொட்டி தீவக மட்டத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தை சுவீகரித்தது.

கடந்தவாரம் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதியது.

வேலணை ஐயனார் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (ஐ-23)

## அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.4

குருநகர் தூயஒளி வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சென்.மைக்கல் விளையாட்டுக்கழகமும் றோயல் விளையாட்டுக் கழகமும் இந்த ஆட்டத்தில் மோதுகின்றன. (ஐ-23)

## வடக்கு மாவட்டங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டம்; ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் யாழ்.அணிகள் சம்பியன்

வவுனியா,ஓக.4

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வவுனியாவில் நடத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளில் கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியனாகின.

கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.

யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 101:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை 41:03 என்ற புள்ளி அடிப்படையில் வென்று மாகாணச் சம்பியனானது. (ஐ-23)



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின்போது யாழ்.மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராகப் பதவியேற்று பிரதம விருந்தினராகச் சமுகமளித்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண விளையாட்டுத் துறையின் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை மற்றும் வட வலய மக்கள் வங்கியின் முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா ஆகியோருக்கு நினைவுப் பரிசில்களை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அதிகாரியின் விஜயத்தால் தமிழருக்கு எந்தப் பயனுமில்லை!

## தமிழக பா.ஜ.க. தலைவர் ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



சென்னை, ஓகஸ்ட் 04

இலங்கைக்கு இந்தியப் பிரதிநிதியை அனுப்புவதால் அங்குள்ள தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை - என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கை செல்லும் இந்தியப் பிரதிநிதி அங்குள்ள உண்மை நிலையை ஆராய வேண்டும் என்றும், அதை விடுத்து ஒப்புக்குச் சென்று விட்டு, மஹிந்த ராஜபக்ஷவின் புகழ்பாடுவதுபோல் அமைந்து விடக்கூடாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கைக்கு இந்திய அரசு கொடுத்துள்ள பணம் தமிழர்களின் மறுவாழ்வுப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளதா என்பதை இந்த விஜயத்தின்போது கண்டறிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து திங்கட்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் மறுவாழ்வுப் பணிகளைப் பார்வையிட இந்தியாவில் இருந்து பிரதிநிதி ஒருவர் அனுப்பப்படுவார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையை ஏற்றுத்தான் பிரதிநிதியை இந்தியா அனுப்ப உள்ளது என்று இலங்கை அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதில் எது உண்மை என்பதை மத்திய அரசு விளக்க வேண்டும். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உலக அரங்கில் மரியாதையை ஏற்படுத்துவதற்காக இந்திய அரசு பிரதிநிதியை அனுப்புகிறதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கைக்கு இந்தியப் பிரதிநிதியை அனுப்புவதால், இலங்கைத் தமிழர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. இந்தப் பிரதிநிதி தமிழர்களுக்கான நலத் திட்டப்பணிகளைப் பார்வையிடத்தான் செல்கிறார். நலத்திட்டப்பணிகள் செயற்படாத பட்சத்தில் இலங்கையை இந்தியா கண்டிக்கப் போவதில்லை.

இலங்கைக்குச் செல்லும் இந்தியப் பிரதிநிதி அங்குள்ள உண்மை நிலையை ஆராய வேண்டும். முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலையை அறிந்து கொள்ள வேண்டும். அதை விடுத்து ஒப்புக்குச் சென்று விட்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புகழ்பாடுவதுபோல் அமைந்து விடக்கூடாது. இந்திய அரசு கொடுத்துள்ள பணம் தமிழர்களின் வாழ்விற்காகச் செலவிடப்பட்டுள்ளதா என்பதைத் தெளிவாக ஆராய வேண்டும். -இப்படி அவர் தெரிவித்தார்.

## இந்தியச் செய்திகள்

# காஷ்மீரில் இன்னும் ஓயவில்லை கலவரம்; நேற்றுமுன்தினம் மட்டும் ஐவர் மரணம்!

ஸ்ரீநகர், ஓக. 04

காஷ்மீரில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், துணை இராணுவத்தினருக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடந்த மோதலில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 5 பேர் பலியாகினர். மேலும் 60 பேர் காயமடைந்தனர்.

இதனால், கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து நேற்றுமுன்தினம் வரை பலியானோர் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்தது.

காஷ்மீர் மாநிலத்தில் பிரிவினைவாதக் கட்சிகள் சார்பாக போராட்டம் நடைபெற்று வருகிறது. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள துணை இராணுவம் மற்றும் பொலிஸார் மீது கற்களை வீசியும், வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியும், பொலிஸ் நிலையங்களுக்குத் தீ வைத்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே, சில வாரங்களுக்கு முன் நடந்த பயங்கரக் கலவரத்தில் சுமார் 20 பேருக்கு மேல் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். தற்போது, கடந்த வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் கலவரம் மூண்டுள்ளது. கலவரம் காரணமாக காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள 9 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு நீடிக்கிறது. தெற்கு காஷ்மீரில் உள்ள புல்வமா மாவட்டத்தில் இருக்கும் காக்போரா என்ற இடத்தில் ஊரடங்கு உத்தரவை மீறிப் போராட்டம் நடைபெற்றது.

மேலும் பல இடங்களிலும் கலவரம் வெடித்தது. கலவரத்தை அடக்கப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

நேற்றுமுன்தினம் மட்டும் பல்வேறு இடங்களிலும் மொத்தம் 60 பேர் காயமடைந்தனர். மருத்துவமனையில் இறந்த தாரிக் அகமது உட்பட 6 பேர் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் பலியாகியுள்ளனர். எனவே, கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்றுமுன்தினம் வரை பலியானோர் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை -

காஷ்மீர் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. முதல்வர் ஒமர் அப்துல்லாவின் வேண்டுகோளை ஏற்று பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

# பாட்டியைப் பார்க்க அமெ. சென்ற ராகுல் காந்தி டில்லி திரும்பினார்

## 2 நாட்களில் வருகிறார் சோனியா

புதுடில்லி, ஓக. 04

பாட்டியைப் பார்க்க அமெரிக்கா சென்ற ராகுல்காந்தி நேற்றுமுன்தினம் டில்லி திரும்பினார். சோனியா காந்தி இன்னும் 2 நாட்களில் புதுடில்லி திரும்புவார் என காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர், தொடங்கிய நாள் முதல் விலைவாசி உயர்வுப் பிரச்சினை காரணமாக கடும் அமளியில் நடந்து வருகிறது. மேலும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன் இந்தியா வருகை, அவருடனான சந்திப்பு போன்ற பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளில் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி பங்கேற்கவில்லை.

இதுபோன்ற முக்கியமான காலக்கட்டத்தில் சோனியா ஒருபோதும் புதுடில்லியை விட்டு வெளியே சென்றதில்லை.

அவரது 80 வயதான தாயார் பாலா மாயினோவின் உடல்நலம் பாதிக்கப்பட்டதால், தனது மகன் ராகுல் காந்தி மற்றும் குடும்பத்தினருடன் சோனியா அமெரிக்கா சென்றார்.

இந்த நிலையில் பாட்டியைப் பார்க்க அமெரிக்கா சென்ற ராகுல்காந்தி நேற்றுமுன்தினம் புதுடில்லி திரும்பினார். அவர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்றார். சோனியா காந்தி இன்னும் 2 நாட்களில் நாடு திரும்புவார் என காங்கிரஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மது மயக்கத்தில் விடிய விடியக் கூத்து; மாணவ, மாணவிகள் 300 பேர் கைது

புனே, ஓக. 04

நண்பர்கள் தினத்தன்று இரவு மது பானங்களைப் பருகி, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டமாக அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்த 300 மாணவர் - மாணவிகளைப் பொலிஸார் கைது செய்தனர்.



புனே அருகில் கத்கி என்ற இடத்தில் பிரசித்தி பெற்ற சிம்பயோசிஸ் நிர்வாக பயிற்சியியல் கல்லூரி உள்ளது. இந்தக் கல்லூரியைச் சேர்ந்த எம்.பி.ஏ. மாணவ, மாணவிகள் நண்பர்கள் தினத்தைக் கொண்டாட ஒரு பண்ணை வீட்டுக்குச் சென்றனர். அங்கு இரவு விடிய, விடிய நண்பர்கள் தினத்தை உற்சாகமாக கொண்டாடினர்.

மது பானங்களை பருகி, ஆட்டம், பாட்டம், கொண்டாட்டமாக அமர்க்களப்படுத்தினர். இவர்கள் போட்ட சத்தம் காரணமாக அந்தப் பகுதியினர் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை.

இதைத்தொடர்ந்து உள்ளூர்வாசிகள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர். அதன் பேரில் பொலிஸார் அந்தப் பண்ணை வீட்டைச் சுற்றிவளைத்தனர். குடிபோதையில் ஆடிப் பாடிக்கொண்டிருந்த 300 மாணவ - மாணவிகளை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் 100 மாணவிகளை மட்டும் எச்சரித்து விட்டு விட்டனர்.

# இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்து

நாகப்பட்டினம், ஓக. 04

தமிழக மீனவர்களை இலங்கை அரசு கொன்று குவிப்பதைக் கண்டிப்பதுடன், மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், கச்சதீவை மீட்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு மனிதநேய மக்கள் கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நாகையில் மனித நேய மக்கள் கட்சியின் பொதுக்குழு கூட்டம் மாவட்ட செயலர் செய்யது முபாரக் தலைமையில் நடந்தது. இந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

சிறுபான்மையினரின் சமூக, பொருளாதார நிலை குறித்து ஆய்வு செய்ய மத்திய அரசு நியமித்த நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா ஆணையத்தின் பரிந்துரைப்படி முஸ்லிம் மற்றும் இதர சிறுபான்மையினருக்கு கல்வி, வேலைவாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

முஸ்லிம் சமுதாயத்திற்கு தமிழக அரசால் தற்போது வழங்கப்படும், 3.5 சதவீத இட ஒதுக்கீடு போதுமானதல்ல. கல்வி, வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டின் விகிதாசாரத்தை அதிகரிக்க வேண்டும்.

தமிழக மீனவர்களை இலங்கை அரசு கொன்று குவிப்பதைக் கண்டிப்பதுடன் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், கச்சதீவை மீட்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாங்கண்ணி புதிய அகல ரயில் பாதைப் பணிகளை விரைந்து முடித்து ரயில் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்படி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தி.மு.கவை எவராலும் வீழ்த்த முடியாது

## கட்சிக்காக பிள்ளைகளைப் பலி கொடுக்கவும் தயார் என்கிறார் கருணாநிதி

கோவை, ஓக. 04

தி.மு.கவை யாராலும் வீழ்த்த முடியாது; வீழ்ந்தாலும் எழுந்து நிற்கும் தைரியம் நமக்கு மட்டுமே இருக்கிறது - என்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி கூறினார்.

கோவை வ.உ.சி. பூங்கா மைதானத்தில் திங்கட்கிழமை இரவு நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டத்தில் அவர் மேலும் பேசியவை வருமாறு -

செம்மொழி மாநாட்டைத் தொடர்ந்து மற்றொரு மாநாடு நடைபெறுகிறதோ என எண்ணும் அளவுக்கு வ.உ.சி. பூங்கா மைதானம் நிரம்பியுள்ளது. செம்மொழி மாநாட்டுக்கு வெளிநாட்டு அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள் வரும்போது, ஏதோ தி.மு.க. கட்சி மாநாடு என எண்ணிவிடக் கூடாது, அத்தகைய சிறு எண்ணம்கூட மாநாட்டில் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே தி.மு.க. கொடிகள், விளம்பரத் தட்டிகளை அகற்றுமாறு கூறினேன்.

இனிமேல் எந்தளவுக்கு வேண்டுமானாலும் தி.மு.க. கொடிகளை நடுங்கள், தோரணங்களைத் [illegible] வீழ்த்துவதற்கு இடம் கொடுப்பவர்கள் அல்லர் நாம். தி.மு.கவை யாராலும் வீழ்த்த முடியாது. வீழ்ந்தாலும் எழுந்து நிற்கும் தைரியம் நமக்குமட்டுமே இருக்கிறது. தி.மு.க. என்பது ஒரு அரசியல் கட்சி மட்டு மல்ல; சமுதாய இயக்கம். தி.மு.க. நடத்துவது அரசியல் நிகழ்ச்சிகள் அல்ல, சரித்திரச் சுவடுகள், வரலாற்று ஏடுகள். அதில் ஒன்றுதான் செம்மொழி ஏடாக வந்தது.



எனது வீட்டில் உள்ள சொத்துகள், ஸ்தாபன உடமைகள் பங்கு பிரிக்கப்பட்ட போது எனது மனைவிமார்கள், அழகிரி, ஸ்டாலின், தமிழரசு, முத்து என பிரிக்கப் பட்டது. மிச்சம் இருந்தது கோபாலபுரத்தில் உள்ள வீடு மட்டும்தான். அதையும் எனது காலத்துக்குப் பின்னர் மருத்துவமனைக்குப் கொடுத்து விடுங்கள் என்று ஒரு அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. அதுதான் எனது வரலாற்றில் முக்கியமான இடம். வீடு, வாசல், சொத்து இவற்றைப் பற்றியெல்லாம் என்றும் கவலைப் பட்டது இல்லை. எனது சொத்தாக நினைப்பது தி.மு.க. கொடிதான்.

அதைப்போல அழகிரியையோ, முத்துவையோ, ஸ்டாலினையோ பலிகொடுத்து விட்டு தி.மு.கவை, தமிழகத்தை வளர்க்க வேண்டும் என்றால் அதற்கு ஒருபோதும் தயங்க மாட்டேன். ஏனென்றால் தனது மகனையே தேர்க்காலில் இட்டு பலி கொடுக்கச் சொன்ன மனுநீதிச் சோழன் பிறந்த திருவாரூரில் பிறந்தவன் நான்.

கட்சிப் பணியை வாழ்க்கையாக நடத்திக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து மைனாரிட்டி அரசு என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறுகிறார். இதனால், கவலைப்படப் போவதில்லை. சிறுபான்மைச் சமூகத்தை மைனாரிட்டி என்பார்கள். அதைப்போல தி.மு.க .சிறுபான்மையினருக்காக எப்போதும் பாடுபடக் கூடியது. இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹக்கானி ஆதரவுத் தீவிரவாதிகளை ஒடுக்க பாக். எல்லையருகே அமெ. படைகள் குவிப்பு

வாஷிங்டன், ஓக. 04

ஹக்கானி ஆதரவு தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக பாகிஸ்தான் எல்லை அருகே அமெரிக்கா படைகளைக் குவித்து வருகிறது.

ஆப்கானிஸ்தானிலுள்ள தலிபான் தீவிரவாதிகளில் ஒரு பிரிவினர் ஜலாலு தீன் ஹக்கானி தலைமையில் செயற்பட்டு வருகின்றனர். இவர்களை அதிபயங்கரமானவர்கள் என்று அமெரிக்கா கூறிவருகிறது.

ஹக்கானி பாகிஸ்தானில் வடக்கு வசிரிஸ்தானில் பதுங்கியிருக்கிறார். அவரை கொலை செய்யும் நோக்கத்துடன்தான் அமெரிக்கா பலதடவைகளில் ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தியது. ஆனால், இந்தத் தாக்குதல்களிலிருந்து அவர் தப்பிவிட்டார்.

இதனால் ஹக்கானியை ஒடுக்கும்படி பாகிஸ்தானை அமெரிக்கா வலியுறுத்தி வந்தது. ஆனால், பாகிஸ்தான் ஹக்கானியை ஒடுக்குவதில் தயக்கம் காட்டியது. இதைத் தொடர்ந்து ஹக்கானியை ஒடுக்குவதில் அமெரிக்கா தீவிரம் காட்டிவருகிறது.

கிழக்கு ஆப்கானிஸ்தான் பகுதியிலுள்ள பக்தியா, கோஸ்ட், கார்டேஸ், லோகர், கஜ்னி ஆகிய மாநிலங்கள்தான் ஹக்கானிக்கு செல்வாக்கானவை. அங்கு இதுவரை அமெரிக்கா பெரியளவில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

ஹக்கானிக்கு ஆதரவாக 3 ஆயிரம் முதல் 4 ஆயிரம் தீவிரவாதிகள் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்குவதற்காக இந்தப் பகுதிகளில் இராணுவத்தை அமெரிக்கா குவித்து வருகிறது. இது பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதிகளாகும். இந்த இராணுவத்தினர் எல்லையின் இருபகுதி களிலும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

இந்தத் தகவல்களை அமெரிக்க இராணுவ அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ் தெரிவித்திருக்கிறார்.

# ஒபாமாவுக்கு ஈரான் ஜனாதிபதி சவால்

தெஹ்ரான், ஓக. 04

உலகப் பிரச்சினைகளுக்கு யாரிடம் சரியான தீர்வு இருக்கிறது என்பது குறித்து தொலைக்காட்சியில் நேருக்கு நேர் விவாதம் செய்யத் தயாரா என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஈரான் ஜனாதிபதி அஹமதி நிஜாத் சவால் விடுத்திருக்கிறார்.

அணுசக்தி பிரச்சினையில் ஈரானுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கும் வகையில் ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்துதான் அவர் ஒபாமாவுக்கு சவால் விடுத்திருக்கிறார். உலகப் பிரச்சினைகளுக்கு மிகச் சரியான தீர்வுகள் எங்களிடம் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கேன்டோனீஸ் மொழி பேசுவோர் சீனாவில் ஆர்ப்பாட்டப் பேரணி

பீஜிங், ஓக. 04

சீனாவில் கேன்டோனீஸ் மொழியை அரசு புறக்கணிக்கிறது எனக் கூறி ஒரு பிரிவினர் போராட்டம் நடத்தினர்.

சீனாவில் 8 மொழிகள் பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்றன. இருப்பினும், மாண்டரீன் மொழிதான் அரசு மொழியாக உள்ளது.

ஹொங்கொங், குவாங்டாங், ஷாங்காய், மக்காவ் ஆகியவை உள்ளிட்ட பகுதிகளில் கேன்டோனீஸ் மொழி பெரும்பாலான மக் களால் பேசப்படுகிறது.

எனினும், தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் மாண்டரீன் மொழிகளில் தான் செய்திகளும், பொழுதுபோக்கு அம்சங்களும் ஒலிபரப்பப்படுகின்றன.

அதனால், கேன்டோனீஸ் மொழியைப் பேசும் மக்கள் முறைப்பாடு தெரிவித்து வந்தனர். குவாங்டாங் மாகாணத்தின் தலைநகர் குவாங்சோவில் பெரும்பாலான மக்கள் திங்கட்கிழமை ஒன்று திரண்டு தங்கள் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கக் கோரி பேரணி நடத்தினர்.

இரண்டரை மணிநேரம் இந்தப் பேரணி நடந்தது. வன்முறைகளைத் தடுக்க பலத்தப் பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டிருந்தது.

''சீனாவில் 7 கோடி மக்கள் கேன்டோனீஸ் மொழியைதான் பேசுகின்றனர். எனவே, இந்த மொழிக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும்'' என போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வற்புறுத்தினர்.

## உலக அரங்கில்

# பிரிட்டிஷ் பிரதமரின் கருத்துக்கு பாகிஸ்தான் அதிருப்தி தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஓக. 04

இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும் தீவிரவாதிகளுடான உறவைப் பாகிஸ்தான் துண்டித்துக்கொள்ளவேண்டும் என பிரிட்டிஷ் பிரதமர் கெமரூன் கூறிய கருத்தால் பாகிஸ்தான் கோபமடைந் துள்ளது.

பாகிஸ்தானுக்கான பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஆடம் தோம்ஸனை அழைத்து கெமரூன் கருத்துத் தொடர்பாக பாகிஸ்தான் தனது அதிருப்தியைத் தெரிவித் துள்ளது.

இஸ்லாமாபாத்திலுள்ள வெளியுறவு அலுவலகத்துக்குத் திங்கட்கிழமை ஆடம் தோம்ஸனை அழைத்து வெளியுறவு அமைச்சர் மெஹ்மூத் குரேஷி அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, ''கெமரூன் கருத்து ஏற்கத்தக்கதல்ல. பாகிஸ்தான் மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் கெமரூன் கருத்துத் தெரிவித் துள்ளார். இதற்குப் பாகிஸ்தான் அரசு சார்பிலும், ஒட்டுமொத்த மக்கள் சார்பிலும் அதிருப் தியை வெளிப்படுத்திக் கொள்கிறேன்'' என்றும் குரேஷி தெரிவித்துள்ளார்.

''பயங்கரவாதம் என்பது பொதுவான பிரச் சினை. இந்தச் சவாலை அனைத்து நாடுக ளும் ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் ஒரு நாட்டின் மீது பழியைச் சுமத்த முயற்சிக்கக் கூடாது'' என்றும் குரேஷி குறிப்பிட்டுள்ளார்.

''பிற நாடுகளைவிட பயங்கரவாதத்தால் பாகிதான்தான் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால் தீவிரவாதிகளை ஒடுக்க பாகிஸ்தான் உரிய நடவடிக்கையைத் தீவிர மாக எடுத்து வருகிறது. இதை யாரும் மறுக்க முடியாது'' என்றும் குரேஷி தெரிவித் துள் ளார்.

# தென் - வடகொரிய ஜனாதிபதிகள் சந்தித்துப் பேச இரகசிய ஏற்பாடு

சியோல், ஓக. 03

தென்கொரிய ஜனாதிபதி லீ மியூங்-பாக்கும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-இல்லும் சந்தித்துப் பேசுவதற்கு இரகசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என தென்கொரியாவில் வெளியாகும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

சமீபத்தில் தென்கொரியாவின் போர்க் கப்பலை வடகொரியா மூழ்கடித்தது. இதற்கு முன்னர் இரு நாடுகளின் ஜனாதிபதிகளும் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் இரகசியமாகச் செய்யப்பட்டு வந்தன என்றும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

வடகொரியாவுக்கு 3 இலட்சம் தொன் உரம் உட்பட பொருளாதார உதவிகளை வழங்க தென்கொரியா உறுதி அளித்திருந்தது. இந்த உதவியை இரு ஜனாதிபதிகளின் சந்திப்பு இடம்பெறுவதற்கு முன்னரே செய்துவிடுமாறு தென்கொரி யாவை வட கொரியா வலியுறுத்தியிருந்தது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.



வாஷிங்ரன் வந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, வெள்ளை மாளிகையில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஹெலிக்கொப்டரில் புறப்படுவதற்காக வெளியே வருகிறார்.

# மலேஷிய பொலிஸ் காவலிலிருந்து 20 ஆப்கன் கைதிகள் தப்பியோட்டம்

கோலாலம்பூர், ஓக. 04

ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 20 கைதிகள் மலேஷிய பொலிஸ் காவலிலிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இவர்கள் 20 பேரும் மலேஷியத் தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் குடியேற்ற அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள்.

இவர்கள் முன்புறம் உள்ள இரு கதவுகளின் கிரில் கம்பிகளை உடைத்து அங்கிருந்து தப்பியுள்ளனர். இவர்கள் அனைவரும் 25 முதல் 40 வயதுடையவர்கள்.

வெளிநாட்டுப் பணியாளர்கள், சட்ட விரோதமாக மலேஷியாவில் குடியேறுபவர்கள் ஆகியோர் குறித்து மலேஷிய துணைப் பிரதமர் முகைதீன், அமைச்சரவைக் குழுவுடன் திங்கட்கிழமை ஆலோசனை நடத்தினார்.

அதன்பின்னர் இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில், ''கைதிகள் தப்பிச் செல்வதற் குக் காரணமாக இருந்த அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

# பலஸ்தீன்த் தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது ரொக்கெட் வீச்சு!

ஜெருசலேம், ஓக. 04

பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் மீது திங்கட்கிழமை ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டது. பொழுதுபோக்கு விடுதிகளும், ஓய்வு இல்லங்களும் நிறைந்த எய்லாத் பகுதியை குறிவைத்து தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

5 ரொக்கெட்டுகளைத் தொடர்ந்து ஏவி இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ரொக்கெட்டுகள் வெடித்துச் சிதறியதில் எய்லாத் பகுதியில் நீண்டநேரம் தீ சுவாலை விட்டு எரிந்தது என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதம் குறித்து உடனடித் தகவல் கிடைக்கவில்லை என்று இஸ்ரேலிய இராணுவ வானொலி தெரிவித்துள்ளது.

எய்லாத் பகுதியில் குண்டு வெடிப்பது போல பலத்த சப்தம் தொடர்ந்து கேட்டது. ஆனால் அது ரொக்கெட் தாக்குதலால் எழுந்த சப்தம்தானா என்பது தெரியவில்லை என்று இஸ்ரேலிய பொலிஸ் துறைச் செய்தித் தொடர்பாளர் மிக்கி ரோசன்பெல்டு தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலை அடுத்து இஸ்ரேலின் எய்லாத் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்க வில்லை. எனினும், பலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகள்தான் இத் தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று இஸ்ரேல் அரசு சந்தேகிக்கிறது.

# பாக். பொதுத் தேர்தலில் முஷாரப்பின் கட்சி போட்டி

## வாக்குறுதிகள் தயாரிப்புப் பணி மும்முரம்

இஸ்லாமாபாத், ஓக. 04

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் புதிதாகத் தொடங்கியுள்ள அனைத்துப் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி (ஏபிஎம்எல்) அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

இந்தத் தேர்தலுக்கான வாக்குறுதிகளைத் தயாரிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. எப்படியும் தேர்தல் அறிக்கை செப்டெம்பர் மாதம் வெளியிடப்படும் என்று அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சௌத்ரி சபாஸ் ஹுசைன் பேட்டியொன்றில் தெரிவித் துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் முஷாரப் தாயகம் திரும்பி தீவிர பிரசாரத்தில் ஈடுபடுவார். அவர் எப்போது நாடு திரும்புவார் என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. இந்தத் திகதியும் செப்டெம்பரில் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு இப்பேட்டியை சௌத்ரி சபாஸ் அளித்துள்ளார். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒத்த கருத்துடைய முஸ்லிம் லீக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட எங்களது கட்சி முடிவெடுத்துள்ளது. எங்களது கட்சியுடன் சௌத்ரி சுஜா தலை மையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ கட்சியை இணைப்பதற்கான பணியும் நடந்து வருகிறது என்றும் சௌத்ரி சபாஸ் தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் முஸ்லிம் லீக் கட்சிகளை ஒருங்கிணைப்பதற்கு முஷாரப் கட்சி எடுக்கும் முயற்சிக்கு அங்கு ஆதரவும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளன. முஸ்லிம் லீக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முஷாரப் கட்சியின் முயற்சிக்கு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-என் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளது.

எனினும், முஷாரப் கட்சியின் முயற்சியை பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-ஜியா கட்சித் தலைவர் இஜாஜ்-உல்-ஹக் வரவேற்றுள்ளார்.

# மலையாள மொழியை சிங்கப்பூரில் ஊக்குவிக்க முடிவு

சிங்கப்பூர், ஓக. 04

சிங்கப்பூரில் மலையாள மொழியை ஊக்குவிப்பதற்காக இங்கு வாழ் இந்தியர்கள் மலையாள மொழிக் கல்விச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். இதன்மூலம் சிங்கப்பூர் பள்ளியில் மலையாளம் மூலம் கல்வி கற்க முயற்சிகள் செய்யப் படும்.

இம்முயற்சியை சிங்கப்பூரின் சட்ட அமைச்சர் க. சண்முகம் வரவேற்றுள்ளார். சிங்கப்பூரில் 25 ஆயிரம் மலையாளிகள் உள்ளனர்.

சிங்கப்பூரில் ஏற்கனவே பாடசாலைகளில் இரண்டாவது மொழிகளாக குஜராத்தி, ஹிந்தி, பஞ்சாபி, வங்காளம், உருது ஆகிய இந்திய மொழிகள் உள்ளன.

சிங்கப்பூரின் அதிகாரபூர்வ மொழிகளாக தமிழ், ஆங்கிலம், சீனம், மலாய் ஆகிய மொழிகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுரேந்திரன் வருண்ராஜ்
(தரம் - 3 மாணவன், கொக்குவில் ஸ்தான சீ.சீ. தமிழ் கலவன் பாடசாலை)



யாழ்.கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி, தாவடி, கொக்குவிலைப் வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரன் வருண்ராஜ் நேற்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுரேந்திரன் மற்றும் மதனிகா தம்பதியினரின் அன்பு மகனும் சுதர்ணிகா, பிறன்சிகா (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), மதிவிஜய் (கரந்தன் இராமுப்பிள்ளை மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தில்லைராசா - கருணாதேவி தம்பதியினரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ். வீதி,*
*தாவடி, கொக்குவில்.* (101437)
தகவல்: குடும்பத்தினர்.

## கந்தையா சதீஷ்குமார்



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதீஷ்குமார் 21.07.2010 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தையா - பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2010) வியாழக்கிழமை 114, Hanworth Road, Hounslow, TW 31 QZ எனும் இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாமகள் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில். 0771186548* (101445)
தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி இரத்தினேஸ்வரி குமாரவேல்

யாமாளை, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி குமாரவேல் கடந்த (01.08.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கந்தையா - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் குமாரவேலின் அன்பு மனைவியும், திருமதி வசந்தி பத்மநாதன் (பிரான்ஸ்), வசந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், பத்மநாதன் (பிரான்ஸ்), கதறின் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரான்ஸைச் சேர்ந்த டானி, பொறிஸ் ஆகியோரின் அம்மம்மாவும் Dr.இரத்தினகுமார் (லண்டன்), முருகரத்தினம் (அப்பன்-சுழிபுரம்), வன்னியநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.சறோஜினிதேவி (லண்டன்), சண்முகதேவி (சுழிபுரம்), சூரியகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.08.2010) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, சுழிபுரம் கிழக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம் கிழக்கு,*
*சுழிபுரம்.* (101449)
*0777351791, 021 3219758*
தகவல்:
வசந்தி பத்மநாதன் (மகள்)
கு.வசந்தகுமார் (மகன்).

## திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை



புத்தூரைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை நிரந்தர வசிப்பிடமாகவும் எம்.எஸ். வீதி, கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை 01.08.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னட்டி - லஷ்மி தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரேசு, பொன்னம்பலம், கந்தையா ஆகியோரின் மைத்துனியும் ஆச்சிப்பிள்ளை, முத்துப்பிள்ளை, மாணிக்கம் ஆகியோரின் மூத்த சகோதரியும் அற்புதமலர், சரஸ்வதி, சண்முகலிங்கம், யோகேஸ்வரி, புஸ்பவனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் அருமைத்துரை, முத்துலிங்கம், நித்தியகலா, சிவராஜா, தவநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராதாகிருஸ்ணன், யசோதா, ஜோதி, சுதர்சனன், கோபி, சிந்துஜா, சுகந்தன், தனுஷயா, சாதனா, சசீபன், திலக்ஷன் ஆகியோரின் பேர்த்தியும் அர்ச்சனா, ஜஸ்ஷியா, விபுசன், ஜெனனி, ஜெனனன், யுவன், கயல்விழி, தனுஷன், அபிநயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.08.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, ஆலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.S. *வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (101438)
தகவல்: குடும்பத்தினர்.

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஓக.4

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வீதி அகலமாக்கும் வேலைகளுக்காக உயர் அழுத்த மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் -

நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையின் யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ-323)

# சிரமதானம்

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் சிரமதானப் பணியில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு பாடசாலைகள் தோறும் தற்போது சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை முன்னிட்டே இப்பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து பாடசாலையையும் பாடசாலையின் முன்வீதியையும் துப்புரவு செய்தனர். (எ-313-317)

# முடிவுறும் நிலையில் கட்டடப்பணி

யாழ்ப்பாணம், ஓக.4

யாழ்.தொழில் நுட்பவியல் கல்லூரியின் வளாகத்தில் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 55 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் கட்டடப் பணிகள் ஒக்ரோபர் மாத அளவில் முடிவுறும் நிலையில் உள்ளது. அதன் பின்னர் சம்பிரதாய முறைப்படி இக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்று தொழில்நுட்பவியல் கல்லூரி மேலதிகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-315-316-317)

# தீவகத்தில் 300 பேருக்கு சத்து மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.4

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை ஜே/60, ஜே/58 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சிறார்கள், கர்ப்பிணிகள் உட்பட 300 பேருக்கு அண்மையில் சத்து மா வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சின்னமடு பொது மண்டபத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையம், போஷாக்குக் குறைந்த சிறுவர்கள், கர்ப்பிணிகளுக்கு போஷாக்குத் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)


## மணமகள் தேவை

கிறிஸ்தவ, 47 வயதுடைய, விவாகரத்துப் பெற்ற, எதுவித தீய பழக்கங்களும் இல்லாத, ஜேர்மன் பிரஜா உரிமையுடைய மணமகனுக்கு நற்குணமுடைய 45 வயதிற்குக் கீழ்ப்பட்ட மணமகள் விரும்பத்தக்கது.

தொடர்பு: T.P.: 0776717115

04.08.2010 புதிய பிரிவு ஆரம்பம்

கணனி கற்கை நெறி
Ms office
Internet & E-mail
கற்பித்தல் இலவசம்
மேலதிக விவரங்களுக்கு: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

நல்ல தண்ணீர் கிணறு, சுற்றுமதில் என்பவற்றுடன், யாழ். கல்வி வலயத்திற்கு அண்மையில் இல.151, செம்மணி வீதி, ஆடியபாதம் வீதி இருவழிப் பாதை கொண்ட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 9051432

## கடை/ வீடு தேவை

யாழ்.நகரச் சுற்றாடலில் அதாவது யாழ். நகரில் இருந்து கே.கே.எஸ். வீதியில் யாழ். இந்துக் கல்லூரிச் சந்தி வரைக்குமான பிரதேசத்திற்குள்ளும், கஸ்தூரியார் வீதியில் நாவலர் வீதிச் சந்தி வரைக்குமான பிரதேசத்திற்குள்ளும், நாவலர் வீதியில் ஆனைப்பந்திச் சந்தி வரைக்குமான பிரதேசத்திற்குள்ளும் வாகனம் தரித்து நிற்கக்கூடிய வசதியுடன் கடைத்தொகுதி அல்லது வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறான வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 071 4312730


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 28.01.1970 உதிர்வு 05.07.2010

## திருமதி சுதாகர் இரத்தினமலர்

*பாசமுடன் பாலூட்டிய அன்னையே!*
*பரிதவிக்க விட்டுச் சென்றதேனோ?*
*பாவிகள் நாம் பதறுகின்றோம் பாரம்மா*
*பார்வையாலே பாசக்கதை பேசிய அன்னையே*
*பாதிவழியில் எம்மைவிட்டுச் சென்றதேனோ*
*பாவிகள் நாம் அருகில் இருக்க*
*அரக்கன் வடிவில் வந்ததோ அரவம்*
*வையகம் உள்ளவரை உன் பெயர் நிலைத்திடும்.*
*ஓம் சாந்தி!*

இன்று (04.08.2010) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வு களிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கரம்பைக்குறிச்சி மேற்கு,
வரணி. (101440)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அமரர் சந்திரலிங்கம் சைலேந்திரன் (சைலன்)



இல.38, கோணாவளை வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்டிருந்த சந்திரலிங்கம் சைலேந்திரன் கனடாவில் 17.07.2010 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் சந்திரலிங்கம்-கலாவதி தம்பதியரின் அன்பு மகனும், சற்குணநாதன்-குணமணி தம்பதிகளின் (தையிட்டி) அன்பு மருமகனும், ரம்யாவின் (றமா) ஆருயிர்க் கணவரும், அசோக் (அமரர்), அகிலன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் பகீசுயனின் அன்புப் பெரியப்பாவும், கலைமதி, மதுரா ஆகியோரின் மைத்துனரும், சிவகுமாரின் (குவைத்) சகலனும், கதிரவேலு - செல்லம்மா தம்பதியரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2010) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இல.38, கோணவளை வீதி,*
*கொக்குவில்.*
T.P: 0776950048, 0213006603 (101442)
தகவல்: க.சந்திரலிங்கம் (தந்தை)

## திருமதி சிவக்கொழுந்து பொன்னம்மா (இராசம்மா)



கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து பொன்னம்மா நேற்று (03.08.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகமுத்து சிவக்கொழுந்துவின் (F.A., ஓய்வூதிய இலாகா) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு (கணக்காளர்), பொன்னம்பலம் (ஆசிரியர்), திருநாமம் (கணக்காய்வாளர்), சின்னத்தங்கம் மற்றும் சிவலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறீஸ்கந்தராசா (பொறியியலாளர், UNOPS), சிறீஆனந்தராசா (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), சிறீபத்மராசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கலாநிதி சிறீசற்குணராசா (யாழ்.பல்கலைக்கழகம்), ஜெயலட்சுமி (அவுஸ்திரேலியா), கலாநிதி சிறீரங்கநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), கதிர்காமநாதன் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராதேவி, மாலதி, முத்தரசி, சிவராணி (யாழ். பல்கலைக்கழகம்), குலவீரசிங்கம் (பொறியியலாளர்), சுபாசினி ஆகியோரின் அன்பு மாமியாரும் வேலாயுதம் (Berty - BOC), காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஸ்ரீமகால்",*
*கரணவாய் வடக்கு,*
*கரவெட்டி.*
T.P.: 021 321 1458 (101450)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண மட்ட விளையாட்டுப்போட்டி; யாழ்.மாவட்டத்துக்கு சம்பியன் கிண்ணம்

வவுனியா, ஓக.4

வவுனியாவில் நேற்று முடிவடைந்த மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான மாகாண மட்ட விளையாட்டுப்போட்டிகளில் யாழ்.மாவட்டம் 248.5 புள்ளிகளைப்பெற்று மாகாணச் சம்பியனாகி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கடந்த சனிக்கிழமை முதல் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வந்த விளையாட்டுப் போட்டிகள் நேற்று மாலை பரிசளிப்பு நிகழ்வுடன் பூர்த்தியாகின.

தடகள மற்றும் பெரு விளையாட்டுக்களில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

வவுனியா 100 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் மன்னார் 83 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்தையும் கைப்பற்றின.

கிளிநொச்சி 17 புள்ளிகளையும் முல்லைத்தீவு 10 புள்ளிகளையும் பெற்றன.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வெற்றிபெற்றவர்களுக்கு கேடயங்களையும் பதக்கங்களையும் வழங்கினார். (ஒ-ஐ-86)

# கராத்தே சம்பியனான முல்லை அணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்காதது ஏன்?

## பதக்கம் ஏற்க மறுத்துவிட்டனர் வீரர்கள்

வவுனியா, ஓக 4

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வவுனியாவில் நடத்தப்பட்டு நேற்றுப் பூர்த்தியான மாவட்டங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கராத்தேப் போட்டியில் முதலிடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கராத்தேப் போட்டிகளில் முதலிடம் பெற்ற அணிகள் பங்குபற்றிய போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களின் அணிகள் பங்குபற்றின.

இந்தப்போட்டியில் கூடுதல் புள்ளிகளை முல்லைத்தீவு மாவட்டத்தின் அணி பெற்று மாகாணச் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியது.

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நேற்று மாலை பரிசளிப்பு விழா இடம்பெற்றது. கராத்தேச் சம்பியனான முல்லைத்தீவு மாவட்ட அணிக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்படவில்லை.

பரிசளிப்பு முடிவடைந்து கொடி இறக்கிய பின் முல்லைத்தீவு மாவட்ட அணியினர் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். அதன்பின் அந்த அணியில் பங்குபற்றிய வீரர்களுக்குப் பதக்கம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டனர். அவர் அதை ஏற்க மறுத்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-86)

# இலங்கை 293 ஓட்டங்களைக் குவித்தது

இந்தியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாளான நேற்று, போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முன்கூட்டியே இடைநிறுத்தப்பட்டமையால், நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணி, 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 293 ஓட்டங்களைப் பெற்று ஓரளவு வலுவான நிலையை அடைந்தது.

3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில், முதல் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற, இரண்டாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில், தொடரைத் தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசிப் பேட்டி நேற்று கொழும்பில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியாக அமைந்தது.

போட்டி ஆரம்பமாகி சிறிது நேரத்தில் பரணவிதாரண (8) ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து டில்ஷான் 41 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அணித்தலைவர் சங்கக்கார (75), மஹேல ஜெயவர்த்தன (56) ஆகியோர் அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தனர்.

நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்கூட்டியே இடைநிறுத்தப்பட்டது.

இறுதியில் இலங்கை அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 293 ஓட்டங்களைச் சேர்த்தது. சமரவீர (65), மத்யூஸ் (26) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், ஓயா 2 விக்கெட்டுகளையும், இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும். (சி)

# கிளிநொச்சி செயலகத்தில் நாளை சாரதி ''லைசென்ஸ்'' பரீட்சை

கிளிநொச்சி, ஓக 4

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்த வர்களுக்கான எழுத்துப் பரீட்சையும், ஓட்டுனர் பரீட்சார்த்தப் பரீட்சையும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளன.

நாளை சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கும்; கடந்த பரீட்சைகளில் சித்தியடையாதவர்களுக்குமான எழுத்துப்பரீட்சை, கடந்த 13.02.2010 அன்று நடைபெற்ற எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து கடந்த 16.07.2010 அன்று நடைபெற்ற ஓட்டுனர் பரீட்சார்த்தப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கும் அதில் சித்தியடையாதவர்களுக்குமான ஓட்டுனர் பரீட்சார்த்தப் பரீட்சையுமே நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோர் மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளுடன் காலை 8.30 மணிக்கு செயலகத்துக்குச் சமுகமளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ஒ-10)

# எரிபொருள்கள், காஸ் விலைகள் விரைவில் குறையும் சாத்தியம்

எரிபொருள்கள் மற்றும் எரிவாயு (காஸ்) ஆகியவற்றை சலுகை விலையில் வழங்குவது பற்றி பெற்றோலியத்துறை அமைச்சு ஆலோசித்து வருகிறது.

எரிபொருள்கள், காஸ் போன்றவற்றின் விலைகளைக் குறைத்து - சலுகை விலைகளில் விநியோகிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு சட்ட ஆலோசனையை நாடி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எரிபொருள்களை சலுகை விலைகளில் வழங்குவது தொடர்பாக பெற்றோலியத்துறை அமைச்சர் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுவருவதாக ஊடகச் செயலாளர் பிரசன்ன மஞ்சு தெரிவித்தார்.

இதுகுறித்து விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் எப்பொழுது அல்லது எவ்வளவு சலுகை வழங்கப்படும் என்று தெரியவில்லையென்று அவர் கூறினார்.

எல்லாமே எமக்கு ஏற்படும் உற்பத்தி மற்றும் செலவுகளைப் பொறுத்து இருக்கிறது என்று அவர் கூறினார். (ப)

# தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக 4

தேசிய கல்வி நிறுவக முதலாம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை ஆயிரத்து 250 ரூபா பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் ஒப்படைகள் யாவும் சமர்ப்பித்தும் முதலாம் கட்டப் பயிற்சியை முடித்திருத்தல் முக்கியமாகும் என சிரேஷ்ட விரிவுரையாளரும் மாவட்ட இணைப்பாளருமாகிய திருமதி த.வில்வநந்தினி அறிவித்துள்ளார். (த-204)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், கணித புள்ளி விவரவியற்துறைத் தலைவரும், எமது மாணவர் ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளருமாகிய கலாநிதி சிறீசற்குணராசா அவர்களின் அன்புத் தாய்

**சிவக்கொழுந்து பொன்னம்மா**

அவர்கள் நேற்றைய தினம் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக் கழகம்.

(101501)

## கல்விச்சுடர்

இன்று வெளிவரவிருந்த வணிகக்கல்வி வினாக்களுக்கான விடைகள் நாளை கல்விச்சுடர் பகுதியில் வெளிவரும்

# மாவைக் கந்தன் கார்த்திகைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக 4

பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத்தில் இன்று கார்த்திகைத் திருவிழா இடம்பெறுகிறது.

காலை 7.30 மணிக்கு ஸ்நபனா அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிக்கு கார்த்திகைக் குமரன் வீதிவலம் வரும் திருக்காட்சியுடன் உற்சவம் பூர்த்தியாகும். நண்பகல் 12.30 மணிக்கு ஷண்முக அர்ச்சனையும் இடம்பெறும்.

உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்கள் சைக்கிள் உட்பட சகல வாகனங்களிலும் ஆலயத்துக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து ஆலயம் வரை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகளும் இடம்பெறும்.

(சிறப்பிதழ் 17 ஆம் பக்கத்தில்)

(ஒ-ஐ)

# மெய்வன்மைப் போட்டி; தேசிய மட்டத்துக்குத் தெரிவான மாணவர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக 4

வலிகாமம் வலயத்தில் இருந்து மெய்வன்மைப் போட்டிக்கு தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ள முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலய அலுவலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பயிற்சி மற்றும் சீருடை தொடர்பாக கலந்துரையாடவிருப்பதால் இவர்களை அழைத்துவருமாறு பொறுப்பாசிரியர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-ஐ)

## தாதியர் நியமனக் கடிதங்கள்

# மேடையில் அமைச்சர் கொடுக்க கீழே அதிகாரிகள் பறித்தனர்!

கொழும்பு, ஓக. 04

சுகாதார அமைச்சரால் மேடையில் வைத்துத் தாதியருக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்கள் மேடைக்கு கீழேயிருந்த அதிகாரிகளால் பறித்தெடுக்கப்பட்டன.

பொலன்னறுவையில் கடந்த 30ஆம் திகதி பயிற்சியை முடித்துக்கொண்ட 300தாதியருக்கு நியமனம் வழங்கும் வைபவம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கோலாகலமாக இடம்பெற்றது.

பயிற்சியை முடித்துக்கொண்ட தாதியர் தமக்கு நியமனம் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். ஆனால் இந்த மகிழச்சி சில நிமிடங்கள் கூட நீடிக்கவில்லை. மேடையில் அமைச்சர் வழங்கிய நியமனக் கடிதங்களை மேடைக்குக் கீழே நின்று கொண்டிருந்த சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மீண்டும் திரும்பப் பெற்றுக் கொண்டனர் என்று அகில இலங்கை தாதியர் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றது.

சுகாதார அமைச்சு விளம்பரத்துக்காகவே இந்த வைபவத்தை ஒழுங்கு செய்து தாதியரை ஏமாற்றிவிட்டது எனக் குற்றஞ்சாட்டும் இச்சங்கம், மூன்று வருட தாதிப் பயிற்சியை முடித்துக் கொண்ட சுமார் 1,500 தாதியர், தமது நியமனத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றனர் எனவும் தெரிசிக்கின்றது. (ஒ-சி)

# மாவட்டக் கண்காணிப்பு குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக 4

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான ஓகஸ்ட் மாதத்துக்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (ஐ)

## சேவைநலன் பாராட்டு



**உயர்திரு க.கணேஷ்**

(முன்னாள் அரச அதிபர், யாழ்.மாவட்டம்)

அவர்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராகவும் பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி கோயில் ஆலோசனைச் சபையின் போஷகராகவும் அரும்பணியாற்றி தனது அரச அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றமையையிட்டு அவரது மகத்தான சேவையினைப் பாராட்டுவதோடு அவர் தொடர்ந்தும் எமது சபையின் போஷகராக நீடூழி நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல கந்தவனநாதன் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.'

'கந்தவனம்', பொலிகண்டி.

ஆதீனகர்த்தா, ஆலோசனைச் சபையினர்.

(சி/569652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிக்க வராத சமுர்த்தி அதிகாரியை மரத்தில் கட்டி வைத்தார் மேர்வின்!

கொழும்பு, ஓக. 04

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்துக்கு வருகை தராத களனிப் பிரதேச சபை சமுர்த்தி அதிகாரி ஒருவரை மரத்தில் கட்டி வைத்து விநோத தண்டனை வழங்கினார் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா. அதேசமயம் குறித்த நிகழ்ச்சிக்கு வருகை தராத பெண் ஊழியர்கள் இருவருக்கு எச்சரிக்கை மட்டுமே விடுத்தார்.

களனியில் கடந்த வாரம் டெங்கு ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சியொன்று பிரதியமைச்சர் மேர்வீன் சில்வா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சிக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள், சுகாதார அதிகாரிகள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இதற்கு சமுர்த்தி அதிகாரி ஒருவர் வருகை தரவில்லை.

நேற்று அலுவலகக்கடமைக்கு வருகை தந்திருந்த அந்த அதிகாரிக்கு பிரதி அமைச்சர் தண்டனை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்ற தினத்தன்று ஒரு சிறுமி டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் அச்சிறுமி உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சமுர்த்தி அதிகாரி மரத்தில் கட்டி வைத்திருந்ததைக் கண்ட இரு சமுர்த்தி பெண் அலுவலர்கள் இதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். சிறிது நேரத்தில் மரத்தில் கட்டி வைக்கப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்.

டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சிக்கு வருகை தராத குறித்த பெண் அலுவலர்கள் இருவரையும் பிரதியமைச்சர் கடுமையாக எச்சரித்தார்.

மரத்தில் கட்டிவைத்து விநோத தண்டனை வழங்கும் சம்பவத்துக்கு விசேடமாக ஊடகவியலாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.



மரத்தில் கட்டிவைக்கப்பட்டிருக்கும் (இடது) சமுர்த்தி அலுவலரை மேர்வின் சில்வா (வலது) பார்த்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

இதேவேளை-

சமுர்த்தி அதிகாரியைப் பகிரங்கமாகக் கட்டி வைத்த சம்பவத்திற்கு மேர்வின் மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் நாடு முழுவதும் நடைபெற்று வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சமுர்த்தி அலுவலர்கள் ஈடுபட மாட்டார்கள் என்றும் சமுர்த்தி அலுவலர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-சி)

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள தனியார் நிறுவனங் களும் இத்திட்டத்தில் கூட்டுச் சேர்ந்து காத்திரமான பங்களிப்புக்களை வழங்க முன்வந்துள்ளன. கட்டட நிர்மாணத் துறையில் 5,000 பேருக்கும், ஆடைக் கைத் தொழில் துறையில் 1,800 பேருக்கும், தகவல் தொழில்நுட்பத்துறையில் 3,000 பேருக்கும் ஆடைகளைச் சந்தைப்படுத்தல் துறையில் 700 பேருக்கும் இவ்வேலை வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன.

வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இருந்தும் இளைஞர், யுவதிகள் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விசேட பயிற்சிகளின் பின்னர் இவ்வேலைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெலிகந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன என்றும் - அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்தச் செய்தி பொய்யானது எனத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் யூ.ஏ.பி.மெதவெல, இவ்வாறான செய்திகள் அரசு மற்றும் இராணுவத்தினர் மீது சேறு பூசும் நோக்கோடு வெளியிடப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார். (அ-சி)

## மீள அணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் டி.எம். ஜயரத்னா நாடாளுமன்றில் மேலும் தெரிவித்தவையாவது:

கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் - ஜூலையில் - அகதி முகாம்களில் இருந்து கைதுசெய்யப்பட்ட 723 பேரும், அவசர காலச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட 765 பேரும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட 74 பேரும் அடங்குகின்றனர் .

அகதி முகாம்களில் உள்ள மக்கள் மற்றும் புனர்வாழ்வு முகாம்களில் உள்ள புலி உறுப்பினர்களிடம் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கடந்த ஒரு மாத காலத்தில்மாத்திரம் 1,562 புலிச் சந்தேகநபர்கள் அகதி முகாம்களில் இருந்தும், கைதுசெய்யப்பட்டனர் வெளிநாடுகளிலிருந்தும் சிலர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு புலிச் சந்தேகநபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை மேலும் தொடர்கிறது.

கைதுசெய்யப்படும் புலி உறுப்பினர்களிடம் இருந்து கிடைக்கும் தகவல்களுக்கு அமைய புலி உறுப்பினர்களால் கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் நிர்வகிக்கப்பட்டுவரும் வீடுகள், காணிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றை அரச உடைமையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, புலிகள் மீண்டும் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முயற்சி செய்கின்றனர். சர்வதேச விடுதலைப் புலிகள் அமைப்புகளுடனும், தனி நபர்களுடனும் ஒன்றிணைந்து புலிகளை ஒன்றுசேர்த்து தமிழீழத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தெளிவாகப் புலப்படுகிறது.

புலிகளுக்காக நிதி சேகரித்து புலிகளுக்கு ஆதரவானவர்களை ஒன்றிணைத்து புலிகள் அமைப்பை மறுசீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புலிகளுக்கு உதவிசெய்து வந்த கனடாவின் அரச சார்பற்ற அமைப்பொன்றை அந்நாட்டு அரசு தடைசெய்துள்ளது. தென்னிந்தியாவில் புலிகளுக்கு உதவிவந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு சிறைவைக்கப்பட்டார்.

இவ்வாறான நிலையில் பயங்கரவாதத்தை இம்மண்ணில் தோற்கடித்து நாம் பெற்ற அமைதியைத் தக்கவைத்துக்கொள்ள அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பது அவசியமாகிறது - என்றார் பிரதமர். (அ-சி)

## போர் முடிவடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பதற்கான காரணத்தை அரசு உள்ளூர் மக்களிடம் தெரிவிக்க வேண்டும். ஆனால் அரசு அவ்வாறு செய்வதில்லை.

### கிழக்கில் காணிகள் பறிபோகும் ஆபத்து

கிழக்கில் காணி பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. பொத்துவிலில் உறுதிப்பத்திரம் உள்ள காணிகளை விட்டுச் செல்லும்படி அரசு, காணி உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு உறுதிப்பத்திரம் உள்ள காணிகளைப் பறித்தெடுப்பது தொடர்பாக அரசு என்ன சொல்லப்போகிறது? காணியைப் பெறுவதென்றால் ஒரு மாதத்துக்கு முன் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆனால், அரசு அவ்வாறு அறிவிக்கவில்லை.

நாச்சிக்குடாவில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் அகதிகளாக வாழ்ந்த முஸ்லிம்கள் மீண்டும் நாச்சிக்குடாவிற்குச் சென்றபோது அவர்களின் காணிகளில் வேறு ஆள்கள் குடியிருக்கின்றனர். அந்தக் காணிகளை உரியவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க பொலிஸாரோ அல்லது பிரதேச செயலாளரோ ஆர்வம் காட்டத் தவறுகின்றனர்.

காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு இந்தப் பிரச்சினையை உடன் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல் மேலதிக இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவதன் காரணத்தையும் அரசு மக்களுக்குக் கூறவேண்டும். -இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## ரூபாயிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமதியான வெளிநாட்டு நாணயத் தாள்கள் காணப்பட்டன.

இதில் அமெரிக்க டொலர்கள் இருக்கவில்லை. இது தொடர்பில் சுங்க அதிகாரி பெருமநாயக தலைமையில் சந்திரசிரி, இந்திரஜித், ஜயவர்தன ஆகிய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் தொடர்பில் உடனடியாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெல்சன் மண்டேலாவால் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்ட்டி அஹ்திசாரி, ஐ.நாவின் முன்னாள் செயலர் கோபி அனான், முன்னாள் ஐ.நா மனித உரிமை ஆணையர் மேரி ரொபின்சன், முன்னாள் ஐ.நா. தூதர் லக்தார் பிரஹிமி போன்றோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இலங்கை அரசு மனித உரிமைகளை புறந்தள்ளும் மனோபாவத்தையும், உள்நாட்டில் இருக்கும் விமர்சகர்களையும், மாற்றுக் கருத்துக் கொண்டோர்களையும் அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளையும் எடுத்து வருவதைப் பற்றி சர்வதேச சமுதாயம் மேலும் கடுமையான பதில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை நிலைவரம் குறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சர்வதேச சமூகம் இதுவரை இலங்கை விடயத்தில் காட்டி வரும் மௌனம் மற்ற நாடுகளையும் இலங்கையின் வழியில் செல்ல வைக்கும்.

போருக்குப் பிந்தைய இலங்கையில் சில முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வடக்கில் அதிகளவில் பொருளாதார நடவடிக்கைகள் நிகழ்ந்திருக்கின்றன, சுமார் 26 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

ஆனால், இந்த முன்னேற்றகரமான விடயங்களுக்கு களங்கம் ஏற்படுத்தும் அம்சங்களாக, கருத்து மாறுபடுவோர்களை சகித்துக் கொள்ளாமல் ஒடுக்குவது, அரசுக்கு நெருக்கமாக இருப்பவர்களுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிப்பது போன்றவை நிகழ்கின்றன.

சர்வதேச சமூகம் குறிப்பாக, இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கை அரசு அமுலில் வைத்திருக்கும் அவசரகாலச் சட்டங்களை விலக்கிக் கொண்டு சிறுபான்மை இன மக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களது மனித உரிமைகளையும் பாதுகாக்க வெளிப்படையான உறுதிமொழியை வழங்கவைக்க வேண்டும்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் முன்னாள் விடுதலைப்புலிச் சந்தேக நபர்களைச் சந்திக்க செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுமதி வழங்குதல், ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஆலோசனைக் குழுவுடன் இலங்கை அரசு ஒத்துழைத்தல், நீதித்துறையில் அரசியல் தலையீடு இல்லாமல் பார்த்துக் கொள்ளுதல், சர்வதேச மற்றும் உள்நாட்டு தன்னார்வ நிறுவனங்கள் இலங்கையில் தங்களது பணிகளை அச்சுறுத்தல் அல்லது தேவையற்ற கட்டுப்பாடுகள் இல்லாமல் செய்யும் சூழலை உருவாக்குதல், அரசமைப்புச் சட்ட சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது ஆகிய விடயங்களையும் சர்வதேச சமூகமும் இந்தியா, அமெரிக்கா, சீனா , ஜப்பான் போன்ற நாடுகளும் இலங்கையிடம் வலியுறுத்த வேண்டும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீங்கள் வாழ்வில் வெற்றிபெற ஆஞ்சநேயர் அழைக்கின்றார்

குடும்பத்தில் பிரச்சினையா? திருமணத் தடையா? காதல் தோல்வியா? திருமண வாழ்க்கையில் பிரச்சினையா? கணவன்-மனைவி பிரிவா? குடியிருக்கும் வீட்டில் தீய சக்திகளின் நடமாட்டமா? தொழில் முடக்கமா? வியாபார நஷ்டமா? கடன் தொல்லையா? உடல்நலப் பாதிப்பா? கிரகதோஷமா?

அனைத்துக் காரியங்களையும் நிவர்த்தி செய்து கொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

ஷர்மாயி
ஆஞ்சநேய உபாசகர்
மாருதி ஜோதிட மாந்திரீக நிலையம்
வீரமங்கள பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம்
தேக்கவத்தை, வவுனியா.
தொ.பே: 077 3681445, 024 5687912, 024 5680447
E-Mail : sankarsarma14@yahoo.com

விற்பனையாகிறது
2010 A/L CHEMISTRY
இறுதி முன்னோடிப் பரீட்சை விடைகளுடன் விலை 40/=
வழங்குபவர்:
தேசிய ரீதியிலான க.பொ.த. உயர்தர இரசாயனவியல் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் பல வருடங்களாகத் தொடர்ந்தும் கடமையாற்றும் ஆசிரியர்
A.LOGANATHAN B.Sc, P.G.D.E, M.Ed. (Merit)
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 021 222 6693 வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம். 021 222 1637

NEW EDUCATION WORLD
ANAIPANTHY
ORGANIC
By: N.VAHEESAN (B.Sc)
ஆரம்பம்:06.08.2010 வெள்ளி 5.30 p.m
விரைவில் மீட்டல் + வினாவிடை அணுக்கட்டமைப்பில்.....
2012 - இரசாயனக் கணிப்புகள்

ஊழியர்கள் தேவை
எமது புடவை ஸ்தாபனத்துக்கு ஆண், பெண் வேலை ஆள்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்களும், யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்களும் விரும்பத்தக்கது.)
காலேஸ்வரி ரெக்ஸ்
இல.25, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தெ.பே.: 021 2226303, 021 2228419

நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Network Software Engineering
BIT CIMA 3000Rs. per Module
4800Rs. per Module
Salary Scale more than 50,000$ www.payscale.com
மிகமிகக்குறைந்த கட்டணத்தில்
Free Courses A+ Australia BCS-UK, English, ICDL, SUN JAVA PROGRAMMER
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் Call 772395895
MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction Jaffna.
www.mcsitcampus.org
இலங்கை அரசின் புலமைப்பரிசில்
CIMA-UK 100% Discount

UPS • KEYBOARDS • MOUSE • COMPUTER PERIPHERALS • MULTIMEDIA SPEAKERS • DESKTOP PC • HOME THEATRE SYSTEMS • TFT-LCD MONITORS • DVD PLAYERS
Think Computers... Think Electronics... Think INTEX
4000W 8,180/- 5800WFM 16,800/- 3000W 7,170/- 4000W 8,850/-
INTEX DEMAND MORE
14,200/- P80AV 8800W 14,200/- 4800W 12,550/- 10500W 18,600/- 1400W 3,140/- 2400WFM 5,380/-
MICRO PC SYSTEMS
Jaffna No-218, Hospital road, Jaffna-021-2225893 Mob-0773983280
Nelliyadi Main Street Nelliyadi, Mob-0773039536
Vavuniya No-73C, 2nd Cross street, Vavuniya- 024-2221969 Mob-0773963284
# 37, 37th Lane, Wellawatha, Col-6.
முகவராக இணைய விரும்புவோர் 0777425973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.